# உதயன்



www.onlineuthayan.com

28 : பக்கங்கள் சுடர் 27 கதிர் 338 வள்ளுவர் ஆண்டு 2043 ஐப்பசி 13 திங்கட்கிழமை (29/10/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா: 25.00


## இலங்கைக்கு எதிராக 99 நாடுகள்

# ஜெனிவாவில் சக்கரவியூகம்

- சனல்-4 காணொலியில் காட்டப்பட்ட கொலைகள்.
- திருமலை மாணவர் படுகொலை.
- மூதூரில் தொண்டு நிறுவனப் பணியாளர்கள் படுகொலை.
- ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள்.

என்பன தொடர்பில் கேள்விகள் எழுப்பப்படவுள்ளன.

கொழும்பு, ஒக்ரோபர் 29

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் எதிர்வரும் முதலாம் திகதி இடம்பெறவுள்ள பூகோள காலகிரம மீளாய்வுக் கூட்ட அமர்வில் இலங்கையைத் துளைத்தெடுக்க உலக நாடுகள் பல்வேறு கேள்விகளை முன்கூட்டியே சமர்ப்பித்துள்ளன.

அமெரிக்கா, பிரிட்டன், கனடா, ஸ்பெயின், டென்மார்க், மெக்சிக்கோ, செக் குடியரசு, நெதர்லாந்து போன்ற நாடுகளும் இதில் அடங்குகின்றன.

இந்த நிலையில் குறித்த அமர்வின்போது 99 நாடுகள் இலங்கை தொடர்பில் பேசுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளன.

எனினும், ஒரு நாட்டுக்கு ஒரு நிமிடம் 12 செக்கன்களே தமது கருத்தைத் தெரிவிக்க ஒதுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக கேள்விகேட்கும் நேரத்தின்போது இலங்கையின் வடக்கு மாகாண சபைக்கான தேர்தலை அரசு ஏன் காலந்தாழ்த்துகிறது என்ற கேள்வி

பார்க்க பக்கம் 4

## புலம்பெயர் நாடுகளிலுள்ள புலி உறுப்பினருக்கு 'செக்'

### பாதுகாப்புச் செயலர் தகவல்



கொழும்பு, ஒக்.29

இலங்கை அரசுக்கு எதிரான நடவடிக்கைகள் மற்றும் மனிதக் கடத்தல்கள் என்பவற்றில் ஈடுபட்டுவரும் புலம்பெயர் நாடுகளில் வசிக்கும் புலிகளின் சட்டவிரோத செயற்பாடுகளைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ.

கொழும்பு லக்ஷ்மண் கதிர்காமர் நிலையத்தில் நடைபெற்ற இளம் தலைவர்கள் சங்கத்தின் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"2005ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண

பார்க்க பக்கம் 4

## புகலிடக் கோரிக்கையாளர் போன்று முன்னாள் போராளிகளும் ஆஸிக்கு

கொழும்பு, ஒக்.29

இறுதிப்போரில் தப்பித்த புலி உறுப்பினர்கள், புகலிடக் கோரிக்கையாளர் என்ற போர்வையில் ஆஸ்திரேலியாவுக்குள் நுழைவது அதிகரித்துள்ளது. இவ்வாறு ஆஸ்திரேலியாவுக்கு நுழையும் புலி உறுப்பினர்களுக்கு ஏற்கனவே அந்த நாட்டில் தங்கியுள்ள அந்த அமைப்பின் ஏனைய உறுப்பினர்கள் பொருளாதார ரீதியாக உதவி வருகின்றனர்.

இவ்வாறு ஆஸ்திரேலிய நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

இலங்கையில் இருந்து ஆஸ்திரேலியாவுக்கு புகலிடக் கோரிக்கையாளர்களாகச் சென்றவர்களில் ஆறு முன்னாள் போராளிகள் அந்த நாட்டு அர

பார்க்க பக்கம் 4

## வடக்கில் வருமா புயல்?

யாழ்ப்பாணம், ஒக்.29

வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் காரணமாக அடுத்த 24 மணித்தியாலங்களுக்கு இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் இடியுடன் கூடிய பலத்த மழை பெய்யும் என்றும், ஆழ்கடல் பகுதியில் 50-60 கிலோமீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசும் என்றும் வளிமண்டலத் திணைக்களம் அறிவித்துள்ளது. இதேவேளை, இன்று திங்கட்கிழமை வடபகுதியில் புயல் வீசக்கூடும் என்றும் எனினும் இதுகுறித்து இன்று காலையே உறுதிப்படுத்த முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-16)


யாழ். மாநகர சுகாதாரப் பிரிவால் முன்வைக்கப்பட்ட சுகாதார முறைகளைப் பின்பற்றாத உணவகங்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன. 5 ▷

கூடங்குளம் அணு உலைக்கு எதிரான போராட்டத்துக்கு வலிமை சேர்க்கும் வகையில் இன்று சென்னை தலைமைச் செயலகத்தை முற்றுகையிட்டுப் போராட்டம். 8 ▷

ஈராக்கில் ஹஜ் பெரு நாள் பிரார்த்தனையில் ஈடுபட்ட சியா முஸ்லிம் வழிபாட்டாளர்களை இலக்கு வைத்து நடத்தப்பட்டதாகக் கருதப்படும் இரு குண்டுத் தாக்குதல்களில் 10 பேர் உயிரிழந்தனர். 9 ▷


## பிரிவினைவாதப் போரே கோத்தாவின் விருப்பம்

### சாடுகிறார் விக்கிரமபாகு கருணாரட்ண

கொழும்பு, ஒக்.29

எதிர்வரும் முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ள ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் பூகோள காலக்கிரம மீளாய்வுத் தொடரில் இலங்கைக்குப் பேராபத்து காத்திருக்கிறது. கடந்த ஜெனிவாக் கூட்டத்தொடரில் சர்வதேசத்துக்கு இலங்கை வழங்கிய உறுதிமொழிகள் எவையும் இன்றுவரை நிறைவேற்றப்படாத நிலையில், உலக நாடுகள் அனைத்தும் இலங்கையின் மனித உரிமை நிலைவரம் மற்றும் சிறுபான்மையினருக்கு எதிரான அநீதிகள் குறித்து கேள்விக் கணைகளைத் தொடுக்கத் தயார் நிலையில் உள்ளன. அதுமட்டுமன்றி, உள்நாட்டிலும் மஹிந்த அரசுக்கு ஒரு பயங்கரமான நெருக்கடி நிலை ஏற்படவுள்

பார்க்க பக்கம் 4

## போர்க்குற்ற விசாரணைக்கு இந்தியா அழுத்த வேண்டும்

### சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்து

கொழும்பு, ஒக்.29

இறுதிக்கட்டப் போரில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றங்கள் தொடர்பில் உரிய விசாரணைகளை மேற்கொண்டு குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்று இலங்கை அரசை இந்தியா வலியுறுத்த வேண்டும்.

- இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளது சர்வதேச மன்னிப்புச் சபை.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் சர்வதேச காலக்கிரம மீளாய்வு அமர்வுகள் நடைபெறவுள்ள இந்தத் தருணத்தில் இலங்கை விவகாரம் தொடர்பில் அழுத்தம் கொடுக்க முடியும் என்றும் சர்வதேச

பார்க்க பக்கம் 4

## தமிழ் அரசியல் கைதிகளிடம் மன்னிப்புக் கேட்ட அமைச்சர்



கொழும்பு, ஒக்.29

முற்றுமுழுதாக சிங்கள மொழியில் மேற்கொள்ளப்படும் நீதிமன்ற நடவடிக்கைகளால் குற்றப் பத்திரிகையில் உள்ளவிடயங்கள், விசாரணைகள் என்பவற்றால் தமிழ் அரசியல் கைதிகள் பாதிக்கப்படுவது இலங்கை அரசமைப்புக்கு முற்றிலும் முரணானது. பாதிக்கப்பட்ட கைதிகளிடம் நான் மன்னிப்புக் கோருகின்றேன். உடனடியாக நீதிமன்றங்களில் மொழிபெயர்ப்பாளர்களை நியமித்து குற்றப் பத்திரிகைகள், விசாரணைகள் என்பவற்றை தமிழ் மொழியில் மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பேன்- இவ்வாறு தமிழ் அரசியல் கைதிகளிடம் தெரிவித்துள்ளார் மொழிகள் மற்றும் நல்லிணக்கத்துக்கான அமைச்சர் வாசுதேவ நாணயக்கார.

கொழும்பு புதிய மகசின் சிறைச்சாலைக்கு அமைச்சர் வாசுதேவ சென்றிருந்தபோது அவரிடம் தமிழ் அரசியல் கைதிகள் தங்களு

பார்க்க பக்கம் 4

## தடையை எதிர்த்து புலிகள் சத்தியக்கடதாசி

சென்னை, ஒக்.29

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை இந்திய அரசு உடனடியாக நீக்க வேண்டுமெனக் கோரி இந்திய தீர்ப்பாயத்தில் சத்தியக் கடதாசியொன்று நேற்றுச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் நாட்டுக்கான இணைப்பாளர் சிவநேசனால் சென்னை சட்டத்தரணி ராதாகிருஸ்ணன் மூலம் இந்த சத்தியக்கடதாசி சமர்ப்பிக்கப்பட்டது.

இதில் தமிழர்களின் உயிர்கள், உடமைகள் என்பவற்றைப் பாதுகாப்பதற்காகவே புலிகள் போராடினர் எனவும் விடுதலைப் புலிகளின் எவ்வித நடவடிக்கையும் இந்தியா

பார்க்க பக்கம் 4

## புலிகளை அழிக்க வஞ்சகம் செய்தவரே சொல்ஹெய்ம்

### விடுதலைப் புலிகள் அறிக்கை

கொழும்பு, ஒக்.29

விடுதலைப்புலிகளின் தனித்துவத்தையும் சுயத்தையும் அழிக்கும் விதமாகவும் இழிவுபடுத்தும் விதமாகவும் போரின் உச்சக்கட்டத்தில் புலிகளின் மீது எரிக் சொல்ஹெய்ம் உட்பட்ட பன்னாட்டுச் சக்திகளால் வஞ்சக வலை விரிக்கப்பட்டது. - விடுதலைப் புலிகள் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இணையத் தளங்களில் நேற்று வெளியான இந்த அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது:

புலிகளுக்கும் அரசுக்குமிடையில் பேச்சுக் கள் நடைபெறுவதற்கு நடுநிலையாளராகப் பணியாற்றிய நோர்வே நாட்டைச் சேர்ந்த எரிக் சொல்ஹெய்ம் அண்மையில் பி.பி.சி. செய்தி நிறுவனத்துக்கு வழங்கிய நேர்காணலில், எமது அமைப்பின் தலைமை மீது அபாண்டமாகப் பழிசுமத்தியது தொடர்பாக எமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்த வேண்டியது தமிழீழ விடுதலைப் புலிகளாகிய எமது கடமை யாகும்.

அந்த நேர்காணலில், தாம் ஒழுங்கமைத்த சரணாகதி ஏற்

பார்க்க பக்கம் 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார் மருத்துவமனைகளில் வெளிநாட்டு மருத்துவர்கள்

## அரசிடம் அனுமதி கோருகின்றது அதன் சங்கம்

கொழும்பு, ஒக்.29

தனியார் வைத்தியசாலைகளில் வெளிநாட்டு வைத்தியர்களை சேவையில் ஈடுபடுத்துவதற்கு அனுமதி வழங்குமாறு தனியார் மருத்துவமனைகளின் உரிமையாளர்கள் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**தற்போது சில தனியார் வைத்தியசாலைகளில் வெளிநாட்டு வைத்தியர்கள் சேவையாற்றி வருகின்றனர்.**

அரச சேவையில் பணியாற்றும் வைத்தியர்கள் காலை 8 மணியிலிருந்து மாலை 4 மணிவரையிலும் தனிப்பட்ட சேவைகளில் ஈடுபடுவது தடைசெய்யப்பட்டுள்ளதாலும், அவர்கள் அடிக்கடி மேற்கொள்ளும் புறக்கணிப்புக்களாலும் தனியார் வைத்தியசாலைகளில் முறையான சேவை வழங்க இவர்களை பணிக்கு அமர்த்துவது சிரமமாக உள்ளது. இதனால் தனியார் மருத்துவமனைகளில் ஏற்பட்டுள்ள மருத்துவர்களின் நெருக்கடியைத் தவிர்ப்பதற்கு வெளிநாட்டிலிருந்து மருத்துவர்களை அழைத்து பணியில் ஈடுபடுத்த அனுமதி தரவேண்டும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தற்போது சில தனியார் வைத்தியசாலைகளில் வெளிநாட்டு வைத்தியர்கள் சேவையாற்றிவருகின்றனர். அவர்களது சேவைக் காலத்தையும் நீடிக்கவும் வகை செய்யவேண்டும் எனவும் தாம் சுகாதார அமைச்சுக்குக் கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளதாக தனியார் வைத்தியசாலைகளின் உரிமையாளர்களின் சங்கம் தெரிவித்துள்ளது.

(ஐ-22)

# துறைசார் நிறுவனங்கள் இனி ஒரே அமைச்சின்கீழ்

## 'கோப்' குழு ஆலோசனை

கொழும்பு, ஒக்.29

ஒரே துறைசார்ந்த கூட்டுத்தாபனங்கள், திணைக்களங்கள் மற்றும் சபைகளை ஒரே அமைச்சின்கீழ் கொண்டுவரும் யோசனை ஒன்று அரசிடம் முன்வைக்கப்பட்டுள்ளது.

பொதுநிறுவனங்களின் செயற்பாடுகளைக் கண்காணிக்கும் நாடாளுமன்றக் குழுவினால் இது சம்பந்தமாக கருத்து முன்வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதில் செயற்றிறன் மேம்பாடு, செலவினங்களைக் குறைத்தல் மற்றும் தாமதங்களைத் தவிர்த்தல் என்ற அடிப்படைகளை முன்வைத்து ஒரு துறையுடன் சம்பந்தப்பட்ட அனைத்து நிறுவனங்களையும் ஒரே அமைச்சின் கீழ் கொண்டு வருவதற்கு ஆலோசிக்கப் பட்டுள்ளது.

அதற்கமைய தென்னை அபிவிருத்திச் சபை, உல்லாசப் பயணத்துறை, தொழிற் பயிற்சி, விவசாயம் ஆகிய துறைகள் சார்ந்துள்ள பல்வேறு நிறுவனங்களை ஒன்றிணைத்து ஒரே அமைச்சின் கீழ் கொண்டுவர ஆலோசிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது. (ஐ-22)

# ஆஸியால் வந்தோருக்கு தடுப்புக்காவல்



கொழும்பு, ஒக்.29

ஆஸ்திரேலியாவில் இருந்து திருப்பி அனுப்பப்பட்ட 14 பேர் நேற்றுமுன்தினம் இலங்கை வந்தடைந்தனர். இவர்கள் அனைவரையும் இன்று திங்கட்கிழமை வரை தடுப்புக் காவலில் வைக்குமாறு தங்காலை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இவர்கள் தங்காலையைச் சேர்ந்த மீனவர்களைத் தாக்கிக் கடலில் வீசிவிட்டு அவர்களின் படகில் ஆஸ்திரேலியா சென்றதாகவும், கடலில் வீசப்பட்ட மீனவர்கள் உயிரிழந்திருக்கக் கூடும் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரசாந்த ஜெயக்கொடி தெரிவித்தார்

# மஹிந்தவைப் புகழும் அஸ்வர் எம்.பி. மசூதி எரிப்புக்கு பதில் தரவேண்டும்

## மனோகணேசன் கோரிக்கை

கொழும்பு, ஒக். 29

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பெயரை உச்சரித்தால் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைக்கும் என்று நாடாளுமன்றில் கருத்து தெரிவித்துள்ள அஸ்வர், அநுராதபுரத்தில் அரபு மத்ரஸா மீது தீ வைக்கப்பட்ட சம்பவத்துக்கு பதில்ளிக்க வேண்டும் என்று ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மஹிந்தவின் பெயரை உச்சரித்தால் சகல பிரச்சினைகளும் தீரும் என நாடாளுமன்ற உறுப்பினர் அஸ்வர் சபையில் கருத்துத் தெரிவித்தார். அவர் சொல்லி வாய் மூடுவதற்கு முன்னர் அநுராதபுரம் மல்வத்து ஓய பகுதியில் அமைந்துள்ள அரபு மத்ரஸா ஒன்றிற்கு இனவாதிகள் தீ வைத்து விட்டார்கள். இதற்கு முன்னாள் முஸ்லிம் சமய விவகார அமைச்சர் அஸ்வர்தான் பதில் சொல்ல வேண்டும்.

கருணையையும், அன்பையும், அஹிம்சையையும் போதிக்கும் பௌத்த மதம் தற்போது இல்லை. சிங்கள பௌத்தம் இலங்கையில் புதிதாக வேரூன்றி வளர்ந்து வரும் மதம். மஹிந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னரே வளர்ச்சி பெற்றுள்ளது என்பதை அஸ்வர் உட்பட அரசுடன் இணைந்துள்ள அனைத்து தமிழ் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அறிந்துகொள்ள வேண்டும்.

இன - மத வாதத்தை எங்களுடன் சேர்ந்து எதிர்க்க முடியாவிட்டால், அஸ்வர் போன்றவர்கள் உள்ளே இருந்தபடியாவது எதிர்க்க வேண்டும்.- என்றுள்ளது. (ஐ-16)

# பாகிஸ்தான் பிரஜை கைது

கொழும்பு, ஒக். 29

பாகிஸ்தான் பிரஜை ஒருவர் நேற்று 25 கிலோகிராம் வெள்ளை சந்தனத்துடன் நீர்கொழும்பில் வைத்துக்கைது செய்யப்பட்டுள்ளார்.

அனுமதிப்பத்திரம் இன்றி வெள்ளை சந்தனம் வைத்திருந்த குற்றத்திற்காக இவரை நீர்கொழும்பு பதில் நீதிவான் ஜே.எம். ஜயசுந்தர விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

குறித்த பாகிஸ்தான் பிரஜை நீர்கொழும்பு, ஏத்துக்கால பிரதேசத்தில் வைத்து நேற்று நீர்கொழும்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

பெட்டி ஒன்றில் மறைத்து வைத்திருந்த நிலையில் வெள்ளை சந்தனம் இருப்பது குறித்து பொலிஸாருக்கு தகவல் ஒன்று கிடைத்தது. இதனடிப்படையில் விரைந்த பொலிஸார் சந்தேக நபரை சோதனையிட்டபோது அவர் வசம் இருந்த 25 கிலோ வெள்ளைச் சந்தனம் கைப்பற்றப்பட்டது. குறித்த நபர் பாகிஸ்தான், கராச்சி பிரதேசத்தை சேர்ந்தவரென விசாரணைகளிலிருந்து தெரியவருகிறது.

எதற்காக குறித்தநபர் வெள்ளைச் சந்தனத்தை பதுக்கி வைத்திருந்தார் என்பது குறித்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். அண்மையில் இந்திய இராணுவ முகாம்களின் வரை படங்களுடன் ஒரு பாகிஸ்தானிய பிரஜை கைதாகியமை குறிப்பிடத்தக்கது (ஐ-16)

# அரச தாதியர்கள் நாளை மீண்டும் போராட்டத்தில்

யாழ்ப்பாணம், ஒக்.29

புதிய வர்த்தமானியைத் தோல்வியுறச் செய்தல் உட்பட 5 கோரிக்கைகளை வலியுறுத்தி நாடளாவிய ரீதியில் நாளை 2 மணிக்கு பணிப் புறக்கணிப்பு போராட்டத்தை நடத்தப் போவதாக அரச தாதியர்கள் அறிவித்துள்ளனர்.

இதன் பின்னரும் தீர்வு வழங்கப்படாது விடின் நவம்பர் 6ஆம் திகதி தொடக்கம் பாதயாத்திரைப் போராட்டத்தில் ஈடுபடுவோம் என அரச தாதியர் உத்தியோகத்தர் சங்கம் அரசுக்கு எச்சரிக்கை செய்துள்ளது.

இது தொடர்பில் சங்கம் மேலும் தெரிவித்ததாவது:

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து பல தடவைகள் அரச தாதியர்கள் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். அதனை அடுத்து தாதிய சங்கத்துக்கும் சுகாதார அமைச்சுக்கும் இடையில் கலந்துரையாடல் இடம் பெற்றது. இதன் போது கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக இணக்கப்பாடு காணப்பட்டுள்ளது.

எனினும் இன்றுவரை 5 கோரிக்கைகள் தொடர்பில் தீர்வு வழங்கப்படவில்லை. எனவே இந்த கோரிக்கைகளை மீண்டும் வலியுறுத்தியே நாளை பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளோம்.

''கடந்த 5ஆம் திகதி வெளியிடப்பட்ட இல. 1779 வர்த்தமானிப் பத்திரிகையை செல்லுபடியற்றதாக்கு'', ''தாதிச்சேவை மேலதிக நேரக்கொடுப்பனவை அதிகரி'', ''மேலதிகக் கொடுப்பனவை அதிகரி'' பழைய சட்டத்திற்கமைய வகுப்புவாரி பதவி உயர்வுகளை உடனே பெற்றுத்தா'', வாரத்தில் 5 நாள்களை வேலை நாள்களாகச் செயற்படுத்து'' ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தியே நாளை பணிப்புறக்கணிப்பு நடைபெறவுள்ளது.

அதன் பின்னரும் தமக்கு உரிய தீர்வு வழங்கப்படாவிட்டால் எதிர்வரும் 6ஆம் திகதி தொடக்கம் பாதயாத்திரைகளைச் செய்வோம் என்று அரச தாதியர் சங்கம் அறிவித்துள்ளது.

(ஐ-4)

# ஆனந்தபுரம் சிறுமியின் சாவுக்கு அரசே பொறுப்புக் கூறவேண்டும்

## வினோ எம்.பி. அறிக்கை

புதுக்குடியிருப்பு ஆனந்தபுரம் பச்சைபுல் மோட்டையில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தில் பத்து வயது சிறுமி பலி கொள்ளப்பட்ட சம்பவத்துக்கு அரசே பொறுப்புக் கூற வேண்டும். இந்தச் சம்பவத்தை பத்தோடு பதினொன்றாக புறந்தள்ளிவிட முடியாது. இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். வினோநோகராதலிங்கம்.

**பூரணமாகக் கண்ணிவெடிகள் அகற்றப்படாமல் பாதுகாப்பற்ற முறையில் இந்தப் பகுதிகளில் மீள்குடியேற்றம் இடம்பெற்றுள்ளமையே இந்தச் சம்பவம் வெளிப்படுத்துகிறது.**

இது தொடர்பில் அவர் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் -

இடம்பெயர்ந்த மக்கள் அனைவரும் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர். அவர்கள் அரச உதவிகளுடன் மகிழ்ச்சியாக வாழ்கின்றனர் என அரச தரப்பினர் பிரசாரம் செய்துவருகின்றனர்.

இந்த நிலையிலேயே தான் ஆனந்தபுரம் பச்சை புல்மோட்டையில் பத்து வயது சிறுமி வெடிபொருள் வெடித்து உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் அருகில் வீட்டிற்குள் சமையல் செய்து கொண்டிருந்த அவரது 28 வயதுடைய சகோதரியும் படுகாயமடைந்துள்ளார்.

பூரணமாக கண்ணிவெடிகள் அகற்றப்படாமல் பாதுகாப்பற்ற முறையில் இந்தப் பகுதிகளில் மீள் குடியேற்றம் இடம்பெற்றுள்ளமையே இந்தச் சம்பவம் வெளிப்படுத்துகிறது.

உடையாத அல்லது அரைகுறையாக உடைந்த வீடுகள், கிணற்றடி என்பவற்றைச் சுற்றி மாத்திரம் கண்ணிவெடிகளை அகற்றிவிட்டு, அங்கு மக்கள் பாதுகாப்பாக சென்று வாழ முடியும் என்று அரசு அவர்களை மீள்குடியமர்த்தியுள்ளது.

மக்கள் மீது கரிசனை உள்ள அரசு ஒருபோதும் இவ்வாறான நிலைக்கு தள்ளிவிட்டிருக்காது. திட்டமிட்டு தமிழ் மக்களை சீர்குலைக்கும் நோக்கிலேயே பாதுகாப்பற்ற இடங்களில் அவர்களை மீள்குடியமர்த்தியுள்ளது.

இன்னும் அகற்றப்படாமல் போரின்போது கைவிடப்பட்ட எச்சங்களாக வன்னிப் பிரதேசத்தில் காணப்படும் கண்ணிவெடிகள் மற்றும் வெடிப்பொருள்களை அகற்றுவதற்கு அரசு விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும். இன்னும் ஒரு உயிர் பலி ஏற்படுவதற்கு இடம்கொடுக்கக் கூடாது. - என்றுள்ளது. (ஐ-12-400)

# கருத்தரங்கு

''ஊடகவளங்களின் சமூகப் பொறுப்பு'' எனும் தொனிப்பொருளிலான கருத்தரங்கு இன்று பிற்பகல் 5மணிக்கு பிறவுண் வீதியிலுள்ள நேசன் பொப்புலர் ட்ரவல்ஸ் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஊடகவளங்கள் பயிற்சி மைய இயக்குனர் தே. தேவானந்த் மற்றும் சூர்யா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் சமூக ஆர்வலர்கள் பங்குகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ங-16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்றுடன் ஒன்று மோதி மூன்று வாகனங்கள் சேதம்



வலி. வடக்கு, ஒக்.29
சுன்னாகம் நகரப் பகுதியில் பொருள்கள் இறக்கிக் கொண்டு நின்ற லொறியுடன் பின்புறமாக வந்த இரண்டு வாகனங்கள் மோதியதில் மூன்று வாகனங்களும் சேதம் அடைந்த சம்பவம் நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் இடம் பெற்றது.

காங்கேசன்துறை வீதியில் யாழ்ப்பாணம் நோக்கிய வண்ணம் நின்றலொறி ஒன்றில் பொருள்களை இறக்கிக்கொண்டு இருந்தனர். லொறியின் பின்னால் மற்றுமொரு படி வாகனம் சற்று தள்ளி நின்றது.

யாழ்ப்பாணம் நோக்கி வந்த கார் ஒன்று படி வாகனத்தின் பின்புறம் அடித்து தள்ளியதில் படி வாகனம் முன்னால் நின்ற லொறியுடன் மோதுண்டது .இதனைத் தொடர்ந்து மூன்று வாகனங்களும் ஒன்றுடன் ஒன்று மோதுண்டதில் மூன்று வாகனங்களும் சேதத்துக்கு உள்ளாகின.

சுன்னாகம் சந்தியில் போக்குவரத்து ஒழுங்கு நடவடிக்கையை மேற்கொண்ட பொலிஸார்விபத்தை பார்வையிட்டதுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-86)

### பொலிஸ் நிலையங்கள் அமைந்துள்ள

# தனியாரது குடியிருப்புகள் உடனடியாக விடுவிக்கப்படா

### வாடகை வழங்கப்படும் என்கிறார் பிரதிப் பொலிஸ்மா அதிபர்

*யாழ்ப்பாணம், ஒக்.29*

*யாழ்.மாவட்டத்தில் தனியார் குடியிருப்புக்களில் இயங்கும் பொலிஸ் நிலையங்கள் உடனடியாக விடுவிக்கப்படமாட்டா. ஆனால் அவற்றின் உரிமையாளருக்கு அதற்கான வாடகை வழங்கப்படும்.*

இவ்வாறு கூறினார் யாழ்.மாவட்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா.

யாழ். ஊடகவியலாளர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையிலான வாராந்த சந்திப்பு யாழ். பொலிஸ் நிலையத்தில் மாவட்டப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் எரிக் பெரேரா தலைமையில் இடம் பெற்றது.

இதன் போது, யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் வீடுகளில் பொலிஸ் நிலையங்கள் இயங்கி வருகின்றன. பொலிஸ் நிலையத்தை அகற்றி வீட்டை மீட்டுத்தருமாறு வீட்டு உரிமையாளர் ஒருவரால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த விடயம் குறித்து என்ன நடவடிக்கை எடுத்துள்ளீர்கள் என்று ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.

இதற்கு பதிலளித்த போதே எரிக் பெரேரா மேற்கண்டவாறு கூறினார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்.மாவட்டத்தில் தனியார் வீடுகளில் உள்ள பொலிஸ் நிலையங்களை சொந்தக் கட்டடங்களில் இயங்க வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

இதன் முதற்கட்டமாக பிரதேச செயலர்கள் மூலம் அரச காணிகளைப் பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

சில பிரதேச செயலர்கள் அரச காணிகளை இனங்கண்டு தந்துள்ளனர். அந்தக் காணிகளில் பொலிஸ் நிலையங்களை அமைக்க நிதி கோரப்பட்டுள்ளது. உரிய நிதி கிடைக்கப் பெற்றதும் தனியார் வீடுகளில் உள்ள பொலிஸ் நிலையங்கள் அகற்றப்பட்டு விடுவிக்கப்படும் என்று- கூறினார். (ம-86)

# பருத்தித்துறை நவீன சந்தை புதிய கட்டடத் தொகுதி திறப்பு

### பால் காய்ச்சும் நிகழ்வில் பிரமுகர்கள், வர்த்தகர்கள்

வடமராட்சி,ஒக்.29
பருத்தித்துறை நவீன சந்தைக்கட்டடத் தொகுதியில் கடைகள் இயங்கத் தொடங்கியுள்ளன. சந்தைக் கட்டடத் தொகுதி, மக்கள் பாவனைக்காக திறந்து விடப்பட்டுள்ளது.

நகரில் 'நிக்கொட்' திட்டத்தின் கீழ் 95 மில்லியன் ரூபா செலவில் நவீன சந்தைக்கட்டடம் ஒன்று கட்டப்பட்டு கடந்த ஒன்றரை வருடத்துக்கு முன்னர் கீழ் தளக் கட்டடம் பூர்த்தியடைந்திருந்தது.

மாடிக்கட்டடம் பூர்த்தியடைந்த பின்னரே கட்டடத்தை திறந்து மக்கள் பாவனைக்கு விடுவதென முன்னர் தீர்மானிக்கப்பட்டது. தொடர்ந்து என்றிப் திட்டத்தின் கீழ் 65 லட்சம் ரூபா செலவில் மாடிக்கட்டட வேலைகள் ஆரம்பமாகி பூர்த்தியடையும் நிலையையும் எட்டியுள்ளது இந்த நிலையில் நவீன சந்தை தளக்கட்டத்தில் கடைகளைப் பெற்றுக் கொண்ட வர்த்தகர்கள் கால தாமதம் அடைவதால் தாம் பாதிக்கப்பட்டு வருவதால் குறித்த கடைகளைத் திறக்க அனுமதிக்குமாறு பருத்தித்துறை நகரசபையிடம் கோரிக்கை விடுத்து வந்தனர்.

இந்தக் கோரிக்கையை பருத்தித்துறை நகர சபை ஏற்றுக் கொண்டது. இதனைத் தொடர்ந்து நேற்று முன்தினம் நகரசபைத் தலைவர் பா.ரவீந்திரன் தலைமையில் பால் காய்ச்சி கடைகளைப் பெற்றுக் கொண்டவர்களுக்கு கடைகள் வழங்கப்பட்டன.

பால் காய்ச்சும் வைபவத்தில் நகரசபை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் ஊழியர்கள், வர்த்தகர்கள் கலந்து கொண்டனர்.

கடைகளை ஏற்கனவே பெற்று பணத்தைக் கட்டாதவர்கள் பணத்தைக் கட்டியதும் எஞ்சிய கடைகள் வழங்கப்படும் எனத்தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, பருத்தித்துறை நகரசபை அலுவலகக் கட்டடப் பணிகளும் பூர்த்தியடைந்து வருவதைக் தொடர்ந்து அக்கட்டடத்திலும் நேற்று முன்தினம் பால் காய்ச்சும் நிகழ்வு நடைபெற்றது. (ம-8)

## சாவகச்சேரி நெற்செய்கையாளருக்கு விவசாயக் கடன்

தென்மராட்சி, ஒக்.29
சாவகச்சேரி கல்வயல் கமக்கார அமைப்பைச் சேர்ந்த நெற்செய்கையாளர்களுக்கான விவசாயக் கடன் கடந்த வாரம் தொடக்கம் வழங்கப்பட்டு வருகிறது.

பயிர் செய்கை செய்யப்படும் பரப்பளவுக்கு ஏற்ப ஒரு லட்சம் ரூபா வரை கடன் வழங்கப்பட்டு வருகின்றது என்றும் 175 நெற்செய்கையாளர்களுக்கு இலங்கை வங்கி சாவகச்சேரி கிளை மூலம் கடன் வழங்கப்பட்டு வருவதாகவும் இலங்கை வங்கிக் கிளையினர் தெரிவித்தனர்.

இந்தக் கடன் வழங்கலின் மூலம் விவசாயிகள் பெரும் நன்மை அடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-9)

## முன்னாள் பிரதேச சபைத் தலைவரின் நினைவுநாள் நிகழ்வு மல்லாகத்தில்



வலி. வடக்கு ஒக்.29
வலி வடக்குப் பிரதேச சபையின் முன்னாள் தலைவரும் சமூக சேவையாளருமான அமரர் ஸ்ரீபாஸ்கரனின் 13 ஆவது ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் மல்லாகம் ஸ்ரீபாஸ்கரன் கலாசார மண்டபத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி தலைமையில் வெள்ளிக்கிழமை பிற்பகல் நடைபெற்றன.

இந்நிகழ்வில் அமரரின் திருவுருவப் படத்துக்கு பாரியார் திருமதி பாலாம்பிகை ஸ்ரீபாஸ்கரன் மாலை அணிவித்ததுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

வரவேற்புரையை மல்லாகம் அபிவிருத்தி சங்கத்தின் உப தலைவர் விக்னேஸ்வரன் நிகழ்த்தினார். ஆசியுரைகளை பங்குத்தந்தை வணபிதா றெக்ஸ் சௌந்தரா, பிரம்மஸ்ரீ மு.நாகேந்திரக்குருக்கள் ஆகியோர் நிகழ்த்தினார்கள்.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வாழ்நாள்பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை தனது உரையில்:-

ஸ்ரீபாஸ்கரன் உண்மைவாதி நடு நிலையானவர். அவர் மல்லாகத்தை ஒரு அபிவிருத்தி அடைந்த நகரமாக காணவேண்டும் என்ற நிலைப்பாட்டில் எதனையும் மேற்கொண்டவர்.

கடந்த காலத்தில் இடம் பெயர்ந்து தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி தனது சொந்த இடத்துக்கு செல்ல முடியாது மருதனார்மடத்தில் இயங்கியது. அந்த நேரத்தில் மகாஜனக் கல்லூரியை தனது சொந்த இடத்தில் இயங்கச்செய்ய வேண்டும் என்பதற்கு அவர் எடுத்த முயற்சிகள் சொல்ல முடியாதவை என்று கூறினார். (ம-86)

## நிகழ்வுகள் இன்று

**பரிசில் நாள்**

வல்வெட்டித்துறை றோ.க.த.க பாடசாலை பரிசில் நாள் நிகழ்வு காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் சோ.ஜெயதேவா தலைமையில் நடைபெறவுள்ளது. நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக ஒய்வு பெற்ற அதிபர் தோ. செல்வவிநாயகம் கலந்து கொள்வார். (ம)

**பௌர்ணமி தின நிகழ்வு**

பௌர்ணமி தின ஆன்மிக நிகழ்வுகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு முன்பாகவுள்ள சத்தியசாயி சேவா நிலையத்தில் நடைபெறவுள்ளன. அதிகாலை 4.45 மணிக்கு நகர சங்கீர்த்தனத்துடன் ஆரம்பமாகி காலை 8.30 மணிக்கு கொடியேற்றம் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து வேதபாராயணம் காயத்திரி மந்திரம், பஜனை, விசேட சொற்பொழிவு என்பன இடம்பெறும். இதில் சாயி அனுபவங்கள் எனும் தலைப்பில் சொற்பொழிவு இடம்பெறும். (ம-14)

**முழுநிலா கலைவிழா**

வடமாகாண கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் தீவகக் கல்வி வலயம் நடத்தும் முழுநிலா நாள் கலைவிழா காலை 9 மணிக்கு வேலணை மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது. வடமாகாணக் கல்விப்பணிப்பாளர் ஷி.செல்வராசா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வடமாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டு அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், வடமாகாணக் கல்வி அமைச்சின் பிரதிச்செயலாளர்பிவிக்னேஸ்வரன், தீவக வலய கல்விப் பணிப்பாளர் நி.ஜோன் குயின்ரஸ் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொள்வர். (ம-14)

**ஆங்கிலப் போட்டி**

மானிப்பாய் மகளிர் கல்லூரியின்பொன்விழாவை முன்னிட்டு நடத்தப்படும் ஆங்கில மொழிப் போட்டி காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-14)

**மலர் வெளியீடு**

குப்பிளான் வீரமனை கன்னிமார் கௌரியம்பாள் ஆலய சிறப்பு மலர் வெளியீடு பிற்பகல் 3மணிக்கு ஆலய தர்மகர்த்தா சபைத் தலைவரும், கிராம அலுவலருமான எஸ்.பரமநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நூல் வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராக பேராசிரியர் உ.நவரத்தினமும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கமும் யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவப் பீடாதிபதி கே.தேவராசா, உடுவில் பிரதேச சபைத் தலைவர் தி.பிரகாஷ் ஆகியோரும் கலந்து கொள்வர். கௌரவ விருந்தினராக கொழும்பு மொரட்டுவப் பல்கலைக் கழக பேராசிரியர் க.சிவசுப்பிரமணியம், தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ.சிறீஸ்கந்தமூர்த்தி ஆகியோரும் கலந்து கொள்வர். (ம-86)

**கதாப்பிரசங்கப் போட்டி**

சங்கானை கல்விக் கோட்டத்தின் சைவத்திருமுறை விழாவை முன்னிட்டு நடத்தும் கதாப்பிரசங்கம், புராண படனப் போட்டிகள் காலை 8.30 மணிக்கு சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரிமண்டபத்தில் நடைபெறவுள்ளன. சங்கானைக் கல்விக் கோட்ட பாடசாலைகளின் மாணவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-28)

**பரிசளிப்பு விழா**

யாழ்.குடாநாட்டில் உள்ள தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் இருந்து 4 ஆம், 5ஆம் தர மாணவர்களுக்கிடையில் தேசிய சேமிப்பு வங்கி நடத்திய சித்திரப் போட்டியின் பரிசளிப்பு நிகழ்வு பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. தேசிய சேமிப்பு வங்கியின் வடக்கு வலய முகாமையாளர் எம்.அருளானந்தம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கையியல் பீட முன்னாள் பிடாதிபதி மா.நடராஜசுந்தரம் பிரதம விருந்தினராகவும், யாழ்.மத்திய கல்லூரி அதிபர் க.எழில்வேந்தன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வார். (ம-8)

## விடுமுறை காலத்தைப் பயன்படுத்தி குடாநாட்டுக்கு வரும் தென்பகுதியினர்

யாழ்ப்பாணம்,ஒக்.29
மூன்று நாள் விடுமுறைக் காலத்தைப் பயன்படுத்தி யாழ்.குடாநாட்டுக்கு தென்பகுதியில் இருந்து பெரும் எண்ணிக்கையான சுற்றுலாப் பயணிகள் படையெடுத்து வருகின்றனர்.

தனியார் பஸ்கள் மற்றும் வாகனங்கள் மூலம் சுமார் 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் திடீரென வருகை தந்ததால் நகரில் பெரும் சனநெரிசல் அதிகரித்துக் காணப்பட்டது.

இந்தச் சுற்றுலாப் பயணிகள் நயினாதீவு, கீரிமலை, கசூரினா கடற்கரை பகுதிகளுக்கு நேற்றுப் படையெடுத்துச் சென்றனர்.


அதேவேளை குறிகாட்டுவான் இறங்குதுறையில் நேற்று முன்தினம் தொடக்கம் பயணிகளின் நெரிசல் அதிகரித்துக் காணப்பட்டது.

கடந்த இரு நாள்களுக்கு மேலதிக படகுகள் சேவையில் ஈடுபட்டமையால் பயணிகள் சிரமம் இன்றிப் போக்குவரத்தை மேற்கொண்டனர்.

இது இவ்வாறிருக்க நகரில் உள்ள தனியார் விடுதிகளிலும் பயணிகள் நிரம்பி வழிந்தனர்.

போதிய விடுதிகள் இல்லாமையால் பயணிகள் தாம் வந்த வாகனங்களில் இரவுப் பொழுதைக் கழித்ததை காணமுடிந்தது. (ம-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொழும்பு கண்டி வீதி, இம்புல்கொட பிரதேசத்தில் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள அன்னாசிப் பழக்கடையொன்றுக்குத் திடீரெனச் சென்ற மேற்கொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அங்கு அன்னாசிப் பழத் துண்டொன்றை சுவைத்தவாறு மக்களின் குறைகளைக் கேட்டறிந்தார்.

## பிரிவினை...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

ளது. இவ்வாறு தெரிவித்தார் நவசம சமாஜக் கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன.

நாட்டில் மீண்டும் பிரிவினை வாதப் போரை ஏற்படுத்த பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ பிள்ளையார்சுழி போட்டுள்ளார். இவரின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இனவாதப் போர் தற்போது நாட்டில் அதியுச்சம் அடைந்துள்ளது என்றும் பாகு தெரிவித்தார்.

13 ஆவது திருத்தத்தை இல்லாதொழிப்பது குறித்து பேசுவதற்கு கோத்தபாயவுக்கு அருகதையில்லை. அவர் ஓர் அரச அதிகாரி. இதை புரிந்துகொள்ளாமல் அவர் எக்காளமிடக் கூடாது. 13 ஆவது திருத்தம் தமிழர்களுக்குத் தீர்வாகாது என்றால் அவர்களுக்கான தீர்வு என்ன என்றும் விக்கிரமபாகு கேள்வியெழுப்பினார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

நாட்டில் மீண்டும் பிரிவினை வாதத்தை ஏற்படுத்த அரசின் உயர் மட்ட நடவடிக்கைகளை சாதகமாக அமைத்துக்கொள்வதற்காகக் கீழ் மட்டத்தில் சிறுபான்மை மக்களது வழிபாட்டுத் தலங்களும், புனித சின்னங்கள் மீது தாக்குதல் நடவடிக்கைகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன.

நாட்டில் இனவாதத்தைத் தூண்டும் வகையில் 13 ஆவது திருத்தச் சட்டத்தை நீக்கவேண்டும் என்ற கோஷம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவினால் எழுப்பப்பட்டுள்ளது. இதனடிப்படையில்தான் சிறுபான்மை மக்களது வழிபாட்டுத் தலங்களைத் தாக்கும் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன.

அடுத்தாண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் நாட்டில் சமர்ப்பிக்கப்படவிருக்கின்ற நிலையில் அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனைக் கண்டித்து மாபெரும் அரச எதிர்ப்புப் போராட்டம் நாடு முழுவதுமுள்ள மக்களால் ஆரம்பிக்கப்படவுள்ளது. எனவே, இவற்றைக் கட்டுப்படுத்தி மக்களைத் திசைதிருப்பவே அரசு இது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது - என்றார் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன.

## புகலிடக்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

சால் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் கடத்தல் சம்பவத்துடன் தொடர்புடைய இன்னும் ஆறு பேரும் கைதாகியுள்ளனர். இந்த நிலையிலேயே அதிகளவான முன்னாள் போராளிகள் புகலிடக் கோரிக்கையாளர்களாக வரும் விடயத்தை தாம் அறிந்துள்ளதாக ஆஸ்திரேலிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் இருந்து சட்ட விரோதமாக ஆஸிக்குச் செல்லும் முன்னாள் புலி உறுப்பினர்கள் பற்றிய தகவல்களை ஆஸ்திரேலிய அரசு வழங்கி வருகிறது என்று ஆஸ்திரேலியாவுக்கான இலங்கைத் தூதுவர் அட்மிரல் திஸர சமரசிங்க தெரிவித்தார். (ங)

## தடையை...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

வில் தற்போது இல்லை. எனவே இந்தியாவில் விடுதலைப் புலிகள் அமைப்பு மீதான தடை நீக்கப்பட வேண்டும் என்று அதில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதன்போது தீர்ப்பாயத்தின் நீதிபதி வி.கே.ஜெய்ன், ''சிவநேசன் என்பவரே விடுதலைப் புலிகளின் சுவிஸ் நாட்டு இணைப்பாளர் என்பதை எவ்வாறு ஏற்க முடியும்?'' என சட்டத்தரணியிடம் வினவினார்.

அதற்கு பதிலளித்த சட்டத்தரணி ராதாகிருஸ்ணன், ''சிவநேசனின் கடவுச்சீட்டு மற்றும் ஏனைய தகவல்கள் அவரின் சத்தியக் கடதாசியுடன் இணைக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் நீங்கள் உண்மையைக் கண்டறியமுடியும்.

எனது கட்சிக்காரரான சிவநேசன், இந்தியாவில் வைத்து கைது செய்யப்படமாட்டார் என்று உறுதியளிக்கப்பட்டால் அவர் தீர்ப்பாயத்தில் முன்னிலையாகித் தமது விளக்கங்களைத் தருவார்'' என்றும் தெரிவித்தார்.

இந்தநிலையில், இந்த விடயம் தொடர்பில் இந்திய மத்திய அரசின் நிலைப்பாட்டை அறிந்து அறிவிக்குமாறு அரச தரப்பு சட்டத்தரணி சாந்தியிடம் கேட்டுக்கொண்டார் நீதிபதி. (ங-16)

## புலம்பெயர்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தார். இதன் ஒரு கட்டமாக புலிகளுடன் பல சுற்றுப் பேச்சுகளும் இடம்பெற்றன. ஆயினும் இந்தப் பேச்சு வார்த்தைகளின்போது எட்டப்பட்ட உடன்படிக்கைகளை மீறி மக்களுக்கு எதிரான தாக்குதல்களில் புலிகள் ஈடுபட்டனர்.

ஆயினும் பலமான தலைமைத்துவம், மக்களின் ஆதரவு, சிறந்த திட்டமிடல் வெளிநாடுகளில் பெற்றுக் கொண்ட பயிற்சி என்பவற்றின் மூலம், மனிதாபிமான நடவடிக்கையை மேற்கொண்டு புலிகளை இல்லாதொழித்தோம். இதன்போது இடம்பெயர்ந்த மூன்று லட்சம் மக்களின் நல்வாழ்வில் அக்கறை செலுத்திய அரசு, அனைவரையும் தற்போது மீள் குடியமர்த்திவிட்டது. படையினரிடம் சரணடைந்த புலி உறுப்பினர்கள் புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகத்துடன் ஒன்றிணைக்கப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில் இறுதிப் போரின்போது தப்பிச் சென்ற சில புலி உறுப்பினர்கள் வெளிநாடுகளில் தங்கியிருந்து புலம்பெயர் மக்களைத் தவறான வழியில் தூண்டி விடுகின்றனர்.

குறிப்பாக இலங்கை அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் மற்றும் மனிதக் கடத்தல்கள் என்பவற்றின் பின்னணியில் உள்ள இந்தப் புலி உறுப்பினர்களின் செயற்பாடுகளைத் தடுக்க அரசு சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.'' - என்றார். (ங-16)

## தமிழ்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

டைய பிரச்சினைகளைத் தெரிவித்தனர். இதன்போதே அவர் மேற்கண்டவாறு கைதிகளிடம் மன்னிப்புக் கோரியுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பான வழக்குகளை விரைவில் முடிவுக்குக் கொண்டுவர விசேட நீதிமன்றங்கள் உருவாக்கப்படவுள்ளன. சிங்கள மொழிமூல நீதிமன்ற நடவடிக்கைகளால் பாதிப்புற்ற கைதிகளிடம் மன்னிப்புக் கோருகின்றேன் இந்த விடயம் தொடர்பா உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, நீதிமன்றங்களில் மொழி பெயர்ப்பாளர்கள் நியமிக்கப்பட்டு தமிழ்மொழிமூலம் நீதிமன்ற நடவடிக்கைகள் இடம்பெற ஏற்பாடு செய்வேன். இத்தகைய மொழிப் புறக்கணிப்பே இனப்பிரச்சினைக்கான முக்கிய காரணி. இனியும் இந்த நிலை தொடராமலிருக்க வேண்டும்.

நாட்டிலுள்ள அனைவருக்கும் பொது மன்னிப்பு வழங்கக் கூடிய விதத்தில் நிகழ்ச்சி நிரல் ஒன்றை அரசு தயார் செய்து வருகிறது. விரைவில் அதனை ஜனாதிபதி செயற்படுத்தும் போது தமிழ் அரசியல் கைதிகளுக்கும் நல்ல தீர்வுகிட்டும் என்றார். (ங-400)

## போர்க்குற்ற...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

மன்னிப்புச் சபையின் இந்தியக் கிளை சுட்டிக்காட்டியுள்ளது.

குற்றச்செயல்களில் ஈடுபட்டோருக்கு எதிராக விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை அரசை வலியுறுத்தக்கோரி இந்தியப் பிரஜைகள் ஐம்பதாயிரம் பேரின் கையொப்பங்களுடன் கூடிய விசேட மகஜர் ஒன்று இந்திய பிரதமரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோத படுகொலைகள், கடத்தல்கள், காணாமல் போதல்கள், சித்திரவதைகள் உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பில் உரிய விசாரணை நடத்தி, நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாத தடைச் சட்டத்தை இரத்து செய்தல், நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் அமுல்படுத்தல், பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டோரை விடுதலை செய்தல், குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படாது தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளை விடுதலை செய்தல், தேசிய மனித உரிமை செயற்திட்டத்தை அமுல்படுத்தல் உள்ளிட்ட சில விடயங்கள் குறித்து இலங்கை கவனம் செலுத்த வேண்டுமெனவும் மன்னிப்புச் சபை கேட்டுக் கொண்டுள்ளது.

இந்த விடயங்கள் குறித்து கவனம் செலுத்துவதாக இலங்கை அரசு அறிவித்த போதிலும் இதுவரையில் கவனம் செலுத்தப்படவில்லை.

எனவே, இந்திய மத்திய அரசு இவ் விவகாரங்களில் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என சர்வதேச மன்னிப்புச் சபையின் இந்தியக் கிளை சுட்டிக்காட்டியுள்ளது.

## ஜெனிவாவில்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

பல நாடுகளால் எழுப்பப்படவுள்ளது.

இதனைத் தவிர, சனல் 4 காணொலியில் காட்டப்பட்ட கொலைகள் குறித்த விசாரணைகள், நல்லிணக்க ஆணைக்குழுவின் நடைமுறைகள், திருகோணமலையில் 2006 ஆம் ஆண்டு கொல்லப்பட்ட 5 மாணவர்களின் விசாரணைகள், மூதூரில் கொல்லப்பட்ட 17 தன்னார்வப் பணியாளர்கள் படுகொலை தொடர்பான விசாரணைகள், பொத்துவிலில் 2006 ஆம் ஆண்டு 10 தொழிலாளர்கள் கொல்லப்பட்டமை, சண்டேலீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் கொலை, காணாமல்போன காட்டூன் செய்தியாளர் பிரகீத் எக்னெலிக்கொட தொடர்பான விசாரணைகள் போன்றவை தொடர்பிலும் கேள்விகள் எழுப்பப்படவுள்ளன.

2012 ஆம் ஆண்டு செப்ரெம்பரில் வவுனியா மெனிக்பாம் அகதி முகாம் மூடப்பட்டு அந்த அகதிகள் தமது சொந்த இடங்களுக்கு அனுப்பப்படாமை மற்றும் அவர்கள் சர்வதேச நியமங்களுக்கு அமைய மீள்குடியேற்றப்படாமை தொடர்பில் கனடா கேள்வி எழுப்பவுள்ளது.

இந்தநிலையில் போர்க்குற்றங்கள் தொடர்பில் இலங்கையின் நீதிமன்றங்களில் இடம்பெற்ற விசாரணைகளின் தகவல்களை தருமாறு பிரிட்டன் கோரவுள்ளது.

இந்தக் கேள்விகளை அடுத்து எதிர்வரும் நவம்பர் 5 ஆம் திகதியன்று இலங்கை தொடர்பான தீர்மானம் ஜெனிவா மனித உரிமைகள் அமர்வில் நிறைவேற்றப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## புலிகளை...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

பாடுகளை ஏற்றுக்கொள்ளாமல் விடுதலைப் புலிகளின் தலைமை வீண் பிடிவாதம் பிடித்ததால்தான் தமிழ் மக்களுக்கு இப்பேரழிவு ஏற்பட்டதென்று எரிக் சொல்ஹெய்ம் கூறியிருக்கிறார்.

வன்னியில் போர் உச்சக்கட்டத்தை அடைந்து எமது மக்கள் நாளாந்தம் நூற்றுக்கணக்கில் கொல்லப்பட்டுக்கொண்டும், பட்டினிச்சாவை எதிர்கொண்டும், சுகாதார, மருத்துவ வசதிகளின்றி அல்லற்பட்டுக் கொண்டும் இருந்த வேளையில் மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு நாம் மூன்றாந்தரப்பு ஒன்றிடம் எமது மக்களைக் கையளிக்க முன்வந்திருந்தோம்.

அதேநேரம் உடனடி போர் நிறுத்தத்தையும் வேண்டி நின்றோம். அதை தொடர்புடையவர்களுக்கும் தெரியப்படுத்தியிருந்தோம்.

இதேவேளை, எமது அமைப்பின் தலைமையையும் போராளிகளையும் சரணடையும்படி தொடர்ச்சியாக அழுத்தத்தைப் பிரயோகித்ததுடன் அதற்குரிய திட்டங்களையும் வகுத்து இயக்கத் தலைமையினதும் போராளிகளினதும் சரணடைவையே முக்கியத்துவப்படுத்தி நடுநிலையாளர்களும் பன்னாட்டுச் சமூகமும் செயற்பட்டு வந்தது. மாறாக, நாம் எமது மக்களை மூன்றாந்தரப்பு ஒன்று பாதுகாப்பாகப் பொறுப்பெடுக்க வேண்டுமெனவும் அதற்குரிய உத்தரவாதத்தை எழுத்து மூலம் தரும்படியும் கேட்டுக் கொண்டிருந்தோம்.

எமக்குரிய அந்தப் பாதுகாப்பு உத்தரவாதம் நோர்வேயாலோயோ ஏனையவர்களாலோ தரப்படவேயில்லை. சரணடைவு பற்றிய திட்டங்களே தொடர்ந்தும் பேசப்பட்டுக் கொண்டிருந்தன.

எமது போராட்ட மரபு வித்தியாசமானது, உலகில் தனித்துவமான நெறிகளையும் நடைமுறைகளையும் கொண்டது. மிக இறுக்கமாகப் பேணிவந்த அந்தத் தனித்துவங்களும் இராணுவ ஒழுக்கங்களுமே எமது இயக்கத்தையும் ஈழ விடுதலைப் போராட்டத்தையும் வளர்த்தும் பாதுகாத்தும் வந்தன.

அப்படிப்பட்ட எமது இயக்கத்தின் தனித்துவத்தையும் சுயத்தையும் அழிக்கும் விதமாகவும் இழிவுபடுத்தும் விதமாகவுமே போரின் உச்சக்கட்டத்தில் எமது அமைப்பின் மீது எரிக் சொல்ஹெய்ம் உட்பட்ட பன்னாட்டுச் சக்திகளால் வஞ்சக வலை விரிக்கப்பட்டது.

எதிரியிடம் உயிருடன் பிடிபடக்கூடாது என்பதற்காக கழுத்தில் நஞ்சுகட்டும் நடைமுறையை உருவாக்கிப் பேணிவந்த விடுதலைப் புலிகள் அமைப்பை ஒட்டுமொத்தமாகச் சரணடையும்படி ஒரு திட்டத்தை முன்வைக்க இவர்கள் முண்டியடித்தார்கள்.

எதிரியின் கோட்டைக்குள் நின்றே தலைகுனியாமல் எதிர்த்து நின்ற எமது தலைமையை, அந்நியரின் மிரட்டல்களுக்கெல்லாம் சளைக்காமல் எதிர்த்து நின்று போராட்டத்தை வளர்த்த எமது தலைமையை தனது சொல்லுக்கும் செயலுக்கும் வித்தியாசமற்று வழிகாட்டியாய் வாழ்ந்து வந்த எமது தலைமையை எதிரிகளிடம் மண்டியிடும்படி ஒரு திட்டத்தை முன்வைக்க இந்த நடுநிலையாளர்களால் [illegible] எமது இனப்பிரச்சினையைத் தீர்க்க இவர்கள் எவ்வளவு இதய சுத்தியோடு செயற்பட்டிருப்பார்கள் என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

எரிக் சொல்ஹெய்மும் நோர்வேயும் நடுநிலையாளராகச் செயற்படவெனப் புறப்பட்டது எமது இனப்பிரச்சினையைத் தீர்க்கும் நோக்கத்துக்காகவே. தமிழ்மக்கள் மேலான கொடிய போரை கைகட்டிப் பார்த்துக்கொண்டிருந்துவிட்டு இறுதியில் விடுதலைப்போரைத் தலைமை தாங்கி நடத்திய அமைப்பை அதன் தலைமையுட்பட சரணடையும்படி கேட்பதென்பது, நிகழ்காலத்தில் மட்டுமன்றி எதிர்காலத்திற் கூட அந்த விடுதலைப் போராட்டத்தைப் பூண்டோடு அழிக்கும் செயலாகும்.

ஈழத் தமிழரின் விடுதலைப் போராட்டத்தை என்றுமே மீளெள முடியா நிலைக்கு இட்டுச்செல்ல சிங்களப் பேரினவாதம் முயன்றதற்கு ஒப்பான செயலே இந்த நடுநிலையாளர்களும் பன்னாட்டுச் சமூகமும் இறுதிப்போரின்போது நடந்துகொண்ட முறையுமாகும்.

நேர்மையற்ற முறையில் நடத்தப்பட்ட போரில் எமது மக்களைப் பாதுகாக்க, போரை நிறுத்துவதே நடுநிலையாளராகச் செயற்பட்டவர்களின் கடமையாக இருந்திருக்க வேண்டும். மாறாக, பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் அதுவும் நடுநிலையாளரின் அனுசரணையோடு செய்துகொள்ளப்பட்ட போர்நிறுத்த உடன்படிக்கையிலிருந்து இறுதிவரை வெளிவராமல் அமைதி காத்த தரப்பை அழுத்தி, ஒட்டுமொத்தச் சரணாகதியூடாக விடுதலைப்போராட்டத்தையே மழுங்கடிக்கும் பணியாக இருந்திருக்கக்கூடாது.

வருந்தத்தக்க முறையில் எரிக் சொல்ஹெய்மும் நடுநிலையாளர்களும் ஈழப்போராட்டத்தை ஒட்டுமொத்த அழிவுக்குக் கொண்டு செல்லும் முனைப்போடு செயற்பட்டது மட்டுமன்றி, இன்று எமது தலைமை மீதே பழியைச் சுமத்தி தமது கைகளிலிருக்கும் இரத்தக் கறையை மறைக்க முற்படுகின்றார்கள். எமது அமைப்பின்மீதும் தலைமைமீதும் அபாண்டமான பழியைச் சுமத்துவதைக் கடுமையாகக் கண்டிப்பதோடு எமது மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி தொடர்பில் இனியாவது மனச்சாட்சியுடன் நடந்துகொள்ளுமாறு தொடர்புடையவர்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.- என்றுள்ளது. (ங)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பச்சோந்தித் தனமும் சாபக்கேடும் இலங்கை அரசியலில் இரு புண்கள்

அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தை நீக்கினால், அது மீண்டும் ஒரு உள்நாட்டுப் போர் வெடிப்பதற்கு வழிவகுக்கும். அது மட்டுமன்றி, நாடு மிகப்பெரும் சவால்களுக்கு முகம் கொடுக்க நேரிடும்.

இவ்வாறு அரசாங்கத் தரப்பிலிருந்து மற்றொரு அமைச்சரிடம் இருந்து -வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் நலனோம்புத்துறை அமைச்சர் டிலான் பெரேராவிடம் இருந்து - அரசபிரதானிகளின் கருத்துக்கு எதிரான நிலைப்பாடு வெளிப்பட்டுள்ளது.

நாட்டின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வைக் காணும் நோக்குடன் அனைத்துக் கட்சிக்குழு நியமிக்கப்பட்டது. அந்தக் குழுவின் அறிக்கையில் பதின்மூன்றாவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதே சிறந்தது என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. அக்குழுவில் அங்கம் வகித்த விமல் வீரவன்ஸ, சம்பிக்க ரணவக்க போன்றோர் அதனை ஆதரித்தனர். ஆனால் இன்று அதே 13 ஆவது திருத்தத்தை நீக்க வேண்டும் என்று அடம்பிடிக்கின்றனர்-

அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தில் சில குறைபாடுகள் உள்ளன. அவற்றை நீக்கி, சட்டத்தைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்தலாம் - என்றும் அமைச்சர் டிலான் பெரேரா சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, பதின்மூன்றாவது திருத்தத்தை நீக்கியே ஆக வேண்டும் என்று அரசின் பங்காளிக் கட்சிகள் விடாப்பிடியாக நிற்கின்றன என்பது வெளிப்பட்டு வருகின்றது. நாளை மறுதினம் புதன்கிழமை நடைபெறும் வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தில் அதற்கான பிரேரணையை முன்னெடுப்பதற்கு விமல் வீரவன்ஸ தலைமையில் உள்ள தேசிய சுதந்திர முன்னணி மிகச் சுறுசுறுப்பாக இயங்குவதாகவும் தகவல்கள் கசிந்துள்ளன.

அதுமட்டுமன்றி, அமைச்சர் தினேஷ் குணவர்த்தனா தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணி, ஜாதிக ஹெல உறுமய ஆகிய அரசின் பங்காளிக் கட்சிகளும் 13 ஆவது திருத்தச் சட்டத்தை நீக்க வேண்டும் என்று பேயாட்டம் ஆடுகின்றன.

இலங்கை அரசு மீதான போர்க் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் பொருட்டு ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ- மூன் மூவர் குழு ஒன்றை நியமிக்க உள்ளார் என்ற தகவல்கள் சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்னர் வெளிவந்து கொண்டிருந்த வேளையில் -

அதற்கு ஆட்சேபம் தெரிவித்து, அமைச்சர் வீரவன்ஸ சாகும்வரை உண்ணாவிரதம் இருந்ததும், இடையில் ஜனாதிபதி அதனை முடித்து வைத்ததும் வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

அதே வரிசையில், அரசின் பிரதான கட்சியான ஜனாதிபதி தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை முன்னிறுத்தாமல், தேசிய சுதந்திர முன்னணி, ஜாதிக ஹெலஉறுமய, மக்கள் முன்னணி ஆகிய இனவாதம் பொங்கி வழியும், பொக்குளிக்கும் கட்சிகளைத் தூண்டிவிட்டு, அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தை நீக்கும் பிரேரணையை அமைச்சரவையில் நிறைவேற்றும் உத்தி ஒன்று வகுக்கப்பட்டிருப்பதாகக் கொள்ளலாம்.

இனப்பிரச்சினைத் தீர்விலும் அதனுடன் தொடர்புபட்ட விடயங்களிலும் அரசு உறுதியற்ற நிலைப்பாட்டைக் கடைப்பிடித்து வருவதற்கு இதுவும் ஓர் அடையாளத்துவம்.

இதேவேளை-

அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தம் குறித்தும் ஒருவித தெளிவற்ற போக்கே கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

13 ஆவது திருத்தம் ஒழிக்கப்பட வேண்டும் என்று பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ மட்டும் அன்றி பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவும் தெரிவித்தார். ஆனால் சில நாள்களில் இப்போது 13ஆவது திருத்தத்தை ஒழிக்கும் திட்டம் அரசுக்குக் கிடையாது என்று அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கூறுகிறார்.

அரசமைப்புக்கான 13ஆவது திருத்தச் சட்டம் ஒரு சாதாரண சட்டம் அல்ல. இரு நாடுகள் சம்பந்தப்பட்டது. இதன் முக்கியத்துவம் அரசுக்குத் தெரியும். அப்படி இருந்தும், ஜனாதிபதியின் சகோதரர்கள் இருவரும் தெரிவித்த கருத்து, அமைச்சர் கெஹலியவின் மறுப்பு ஆகியவை ஒளித்துப்பிடித்து விளையாடும் போக்கிலேயே செல்கிறது!

இலங்கைப் பிரச்சினையை சர்வதேசம் தனது கையில் எடுத்துக்கொண்டுள்ள நிலையில், இலங்கை அரசு உறுதியான நிலைப்பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டிய தேவை அவசியமாகும். ஆனால், வடமாகாணம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிடிக்குள் செல்லப்போகிறது என்பதற்காக மாகாணசபை முறைமையையே ஒழிக்க நினைப்பவர்களிடம் இருந்து இனப்பிரச்சினைக்கு நீதியான தீர்வை எப்படி எதிர்பார்க்கமுடியும்?

தென் ஆபிரிக்காவில் சிறுபான்மை வெள்ளையரின் ஆட்சிக்கு எதிராகப் பெரும்பான்மை கறுப்பு இன மக்கள் போராட்டம் நடத்தியபோதிலும், ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய பின்பு நெல்ஸன் மண்டேலா பாகுபாடு காட்டவில்லை. அதிகார மாற்றத்தின்போது, வெள்ளையர்கள் நாட்டை விட்டு வெளியேற முனைந்தபோது, கறுப்பு இன மக்களுடன் இணைந்து நாட்டை அபிவிருத்தி செய்யுமாறு கேட்டார். நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் அதிமேற்றிராணியார் டெஸ்மண்ட் டுட்டு தலைமையில் ஆணைக்குழு ஒன்றை ஏற்படுத்தினார். இப்போது தென் ஆபிரிக்கா துரிதமாக அபிவிருத்தி அடைந்து வருகிறது. ஆட்சி மாற்றத்தின் பின்னர் நெல்ஸன் மண்டேலாவின் துணிச்சலான - உறுதியான - தலைமைத்துவமே அதற்குக் காரணம்.

இலங்கையில், இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு காண்பதற்குத் துணிச்சல் வேண்டும். தெளிவான கொள்கை வேண்டும். நேரத்துக்கு நேரம் கொள்கையை மாற்றும் பச்சோந்தித்தனம் தொடர்வதும், பெரும்பான்மையின அரசியல் தலைவர்கள் சமாதான சகவாழ்வை ஏறெடுத்துப் பார்க்கவும் விரும்பாமல், உள்ளார்ந்த இனவாதத்துடன் செயற்படுவதும் இந்த நாட்டை ஆரத்தழுவக்கொண்ட சாபக்கேடாகும்.

# சுகாதார முறைகளைப் பின்பற்ற உணவகங்கள் மீது நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.29

யாழ். மாநகர சுகாதாரப் பிரிவால் முன்வைக்கப்பட்ட சுகாதார முறைகளைப் பின்பற்றாத உணவகங்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன என்று யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி அ.எ.ஞானஜோதி தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கடந்த 25 ஆம் திகதி யாழ். நகரின் உணவகங்களின் உரிமையாளர்கள் கலந்துகொண்ட கூட்டத்தில் சுகாதாரத்தைப் பேணுவதற்கு உணவகங்களில் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் தொடர்பாக பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டன.

* அச்சிடப்பட்ட தாள்களில் உணவுப் பொருள்கள் கையாளுவது முற்றுமுழுதாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.
* ஊழியர்கள் உரிய முறையில் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் பதிவுசெய்து மருத்துவ அத்தாட்சிப் பத்திரம் முறைப்படி பெற்றிருப்பதுடன் கடமை நேரத்தில் சீருடை அணிந்திருத்தல் வேண்டும்
* கழிவு நீர் தரம் பிரிக்கப்பட்டு உரிய முறையில் யாழ். மாநகர சபையிடம் கையளிக்கப்பட கழிவுத் தொட்டியில் இடப்படல் வேண்டும்.'
* பொதி செய்யப்பட்ட பொருள்கள் எல்லாவற்றிலும் சுட்டுத்துண்டு இடப்படல் வேண்டும்.
* காலாவதியான உணவுப் பொருள்கள் விற்பனைக்கு வெளிக்காட்டி வைத்தலோ களஞ்சியப் படுத்தலோ முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

இந்த நடைமுறைகள் எதிர்வரும் முதலாம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் - என்றுள்ளது. (ம-16)

# வடக்கில் தபால் சேவையை மேலும் விஸ்தரிக்க அழைப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.29

வடக்கில் தபால் சேவைகளை மேலும் விஸ்தரிப்புச் செய்வதற்குத் தபால் பணியாளர்கள் ஒரே குடும்பமாக செயற்படுவதற்கு முன்வர வேண்டும் என தபால்மா அதிபர் டி.எஸ்.பி.ஆர் அபயரத்ன மன்னாரில் வைத்து அழைப்பு விடுத்துள்ளார்.

சர்வதேச அஞ்சல் தினத்தை முன்னிட்டு கடந்த சனிக்கிழமை மன்னாருக்கு வருகை தந்த அஞ்சல்மா அதிபர் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றும் போது அவர் மேலும் கூறியதாவது:-

வடக்கில் தபால் சேவைகள் மிகவும் சீராகவும் ஒழுங்காகவும் இடம்பெற்றுவருகின்றன.

இந்தச் சேவைகளை மேலும் விஸ்தரிப்பதற்கு பணியாளர்கள் முன்வர வேண்டும்

தபால் விநியோகத்தில் மட்டும் அக்கறை காட்டுவது, புதிய புதிய சேவைகளை ஆரம்பிப்பது மட்டுமல்லாது மக்களுக்கு சிறந்த முறையில் சேவையாற்றுவதே முக்கியம்.

குறிப்பாக மக்கள் மத்தியில் தபால் சேவைகளில் புதிய கண்டுபிடிப்புக்கள் சம்பந்தமான விழிப்புணர்வை ஏற்படுத்துவதே காலத்தின் தேவை.

இந்தப் புதிய சேவைகள் மூலம் அதிக இலாபங்களைத் திணைக்களம் அடைய முடியும்.

இதனால் தபால் பணியாளர்களும் பெரிதும் நன்மையடைவார்கள்.

குறிப்பாக வடக்கில் தபால் நிலையங்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இங்கு அதற்கேற்றவாறு தபால் சேவைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தச் சேவைகள் அடுத்த ஆண்டில் மேலும் விஸ்தரிக்கப்படும். இதற்கு பணியாளர்கள் ஒரே குடும்பம் போன்று செயற்பட முன்வர வேண்டும். - என்றார்.

தொடர்ந்து அஞ்சல் தின நிகழ்வை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர் களுக்கு பரிசில்களை வழங்கி கௌரவித்தார்.

இறுதியில் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ம-17)

# மத்தியஸ்தர் சேவைகள் தொடர்ந்து நடக்கின்றன

அச்சுவேலி,ஒக்.29

பதவிக்காலம் நிறைவடைந்த மத்தியஸ்தர் சபைகள் புதிய மத்தியஸ்தர் சபைகள் பதவி ஏற்கும் வரை தொடர்ந்து தமது பணி முன்னெடுப்புக்களை மேற்கொள்ளும்.

பொதுமக்கள் தமது பிணக்குகள் தொடர்பாக உரிய முறையில் தொடர்பு கொண்டு சமரசம் செய்து கொள்ளலாம். மத்தியஸ்தர் சபைகளின் இணைப்பாளர் பி.சனாதன சர்மா இது குறித்துத் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் சாவகச்சேரி, கோப்பாய், பருத்தித்துறை ஆகிய மூன்று பிரதேச செயலர் பிரிவுகளில் மத்தியஸ்தர் சபைகளின் பதவிக் காலம் செப்ரெம்பர் 15 ஆம் திகதியுடன் பூர்த்தியடைந்துள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் அவற்றின் செயற்பாடுகள் உரிய சபைகளுக்கு புதிய மத்தியஸ்தர்கள் நியமிக்கப்பட்டு புதிய மத்தியஸ்தர் சபைகள் செயற்பட ஆரம்பிக்கும் வரை பொறுப்பிலிருந்த மத்தியஸ்தர் சபைகள் தமது பணி முன்னெடுப்புக்களை மேற்கொள்ளும். இதற்கான அனுமதியை நீதி அமைச்சு வழங்கியுள்ளது.

எனவே, பொது மக்கள் தமது பிணக்குகள் தொடர்பாக உரிய பிரதேச மத்தியஸ்தர் சபைகளுடன் தொடர்பு கொண்டு தமது பிணக்குகளுக்குத் தீர்வு காணலாம் என்று மத்திஸ்தர் சபைகளின் இணைப்பாளர் பி.சனாதனசர்மா தெரிவித்தார். (ம-11)

## கந்தபுராணப் படிப்பு

சுழிபுரம் மேற்கு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தில் கந்தபுராணம் முழுவதும் ஆறு காண்டங்கள், செய்யுள் படித்து உரை கூறுதல் இவ்வாரம் முதல் தினமும் பிற்பகல் 2 மணி முதல் ஐந்து மணி வரையும் மூன்று மாதங்களுக்கு படிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தினமும் ஒருவர் உபயமாகப் படிப்பு செலவுகள் ஆலய நிர்வாக பரிபாலன சபையினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ம-28)

## தரம் 9 மாணவர்களுக்கான மாகாணப் பொதுப்பரீட்சை

தரம் 9 மாணவர்களுக்கான மாகாண மட்டப் பொதுப்பரீட்சை நவம்பர் மாதம் 19 ஆம் திகதி தொடக்கம் 24 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வடமாகாண கல்வித்திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடத்தப்படும் இந்தப் பொதுப்பரீட்சையில் 19 ஆம் திகதி திங்கட்கிழமை தமிழ்மொழியும், 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கணிதமும், 21 ஆம் திகதி புதன்கிழமை வரலாறும், 22 ஆம் திகதி வியாழக்கிழமை விஞ்ஞானமும், 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆங்கிலமும் இறுதி நாளாக 24 ஆம் திகதி சனிக்கிழமை சமயமும் இடம்பெறவுள்ளன.

இது தொடர்பான நேர அட்டவணைகள் வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் ஒவ்வொரு கல்வி வலயங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ஐ-400)

# வடக்கில் போதைப்பொருள் புத்தளத்திலிருந்தே வருகிறது

### பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

வடமாகாணத்துக்கு அதிகளவான போதைப்பொருள்கள் புத்தளப் பகுதியில் இருந்தே கொண்டுவரப்படுகின்றன என்று யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா கூறினார்.

புத்தளத்தில் இருந்து கொண்டு வரப்படும் போதைப்பொருள்கள் வடக்கில் முகவர்கள் ஊடாக விநியோகிக்கப்படுகின்றது.

வடக்கில் அண்மைக் காலத்தில் அதிக அளவிலான கஞ்சா மற்றும் ஹெரோயின் போதைப் பொருள் [illegible]

கடந்த வாரமும் ஒரு கிலோவுக்கு மேல் போதைப் பொருள் மீட்கப்பட்டது.

இவ்வாறான குற்றங்களைத் தடுக்கவும் கட்டுப்படுத்தவும் பொலிஸார் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

புலனாய்வுப் பிரிவுப் பொலிஸார் இந்த விடயத்தில் அதிக அக்கறை எடுத்துச் செயற்படுகின்றனர்.

இதனால் குற்றவாளிகளை இலகுவில் பிடிக்க முடிகிறது. விரைவில் இந்தக் குற்றச் செயல்களை இல்லாது ஒழிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார்.

ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின்போதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது. (ம-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண் அணைகளால் வீடுகளுக்குள் வெள்ளம்

## புதுமாத்தளன், பழைய மாத்தளனில்

இறுதிக்கட்ட போரின்போது அமைக்கப்பட்ட மண் அணைகள் மக்கள் மீளக்குடியமர்ந்து 2 மாதங்கள் கடந்த நிலையிலும் அகற்றப்படவில்லை. இதனால் மழைநீர் வீடுகளுக்குள் உட்புகும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இறுதிப்போரின் போது வன்னிப் பகுதி மக்களுக்கு அடைக்கலம் வழங்கிய பழைய மாத்தளன், புதுமாத்தளன் பகுதியைச் சேர்ந்த மக்களே இந்த அபாயத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

சாலைப்பகுதியில் இருந்து அம்பலவன்பொக்கணை வரை சுமார் 20 கிலோ மீற்றர் தூரத்துக்கு மண் அணைகள் காணப்படுகின்றன. இப்போதும் மண் அணைகளில் ஆங்காங்கே படையினர் பரண் அமைத்து காவல் கடமையில் ஈடுபட்டு வருகின்றனர்.

தாழ்வான நிலப்பகுதியாக மக்கள் வசிக்கும் இடங்கள் காணப்படுவதால் கடும் மழைக் காலங்களில் மழை நீர் தேங்கி நின்று வீடுகளுக்குள் உட்புகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

அதேவேளை வீதிகளில் நீர்தேங்கி நிற்க கூடிய சூழ்நிலையும் காணப்படுகிறது. இதனால் போக்குவரத்து செய்வதில் நெருக்கடி ஏற்பட்டுகின்றது என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். இந்த மண் அணைகளை அகற்றி மழை காலத்தில் ஏற்படக்கூடிய இடர்களைத் தவிர்த்து தமக்கு பாதுகாப்புத்தருமாறு அந்தப் பகுதி மக்கள் கேட்டுள்ளனர். (ஐ-400)

# 10 ஏக்கரை ஆக்கிரமித்த ராணுவம் மேலும் காணியை பறிக்க முயற்சி

## புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் மக்களுக்கு நெருக்கடி

புதுக்குடியிருப்பு, ஒக்.29

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சிவநகர் கிராமசேவகர் பிரிவில் மேலும் இரண்டரை ஏக்கர் காணியை அபகரிப்பதற்கான முயற்சியில் இராணுவத்தினர் ஈடுபட்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

**இராணுவ முகாம் அமைந்துள்ள பகுதிக்கு அருகிலுள்ள சிவநகர் கிராம சேவையாளர் பிரிவில் சுமார் இரண்டரை ஏக்கர் காணியை தமக்கு வழங்குமாறு படையினர் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

ஏற்கனவே புதுக்குடியிருப்பு 7 ஆம் வட்டாரத்திலுள்ள, பொன்னம்பலம் வைத்தியசாலை இயங்கிய பகுதியான சுமார் 10 ஏக்கர் காணி அபகரிக்கப்பட்டு படைமுகாம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இந்தப் பகுதியில் சுமார் இருபது குடும்பங்கள் இருப்பதற்கு வீடுகள் இன்றி உறவினர்கள், நண்பர்கள் வீடுகளில் சிரமங்களுக்கு மத்தியில் வசித்து வருகின்றனர். இந்தக் குடும்பங்களில் இரண்டு குடும்பங்களுக்கு திம்பிலிப்பகுதியில் தற்காலிக இடம் வழங்கப்பட்டுள்ளது. ஏனைய குடும்பங்கள் அங்கு செல்ல மறுத்துவிட்டன. இந்த நிலையில் தற்போது இராணுவ முகாம் அமைந்துள்ள பகுதிக்கு அருகிலுள்ள சிவநகர் கிராம சேவையாளர் பிரிவில் சுமார் இரண்டரை ஏக்கர் காணியை தமக்கு வழங்குமாறு படையினர் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை மக்களின் குடியிருப்புக் காணியை வழங்க முடியாது என படையினரின் கோரிக்கையை புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் மறுத்து விட்டதாகவும் தெரிய வந்துள்ளது.

இதேவேளை தற்போது இராணுவம் கையகப்படுத்தியுள்ள தமது சொந்த நிலங்களை மீட்டுத் தருமாறு அந்த பகுதி மக்கள் முல்லை மாவட்ட அரச அதிபருக்கும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலருக்கும் அவசர கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-400)

# புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி பயன்பாட்டுக்கு ஏன் காணி?

## வழங்க வேண்டாம் என்கிறது ராணுவம்

புதுக்குடியிருப்பு,ஒக்.29

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் பயன்பாட்டுக்கென காணியை வழங்குவதற்கு பிரதேச செயலகம் எடுத்த முயற்சிகள், இராணுவத் தலையீட்டால் தடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் அபிவிருத்திக்காக காணி பெற்றுக்கொடுக்க புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் முயற்சி மேற்கொண்டது.

கல்லூரியின் பயன்பாட்டுக்கென பெற்றுக்கொள்ளும் காணிகளுக்குப் பதிலாக அதன் உரிமையாளர்களுக்கு மாற்றுக் காணிகளை வழங்குவதற்கும் பிரதேச செயலகத்தால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

ஆனால் பாடசாலையின் தேவைக்கு அவ்வளவு காணி தேவையில்லை என்று கூறி அதனை இராணுவத்தினர் தடுத்து நிறுத்திவிட்டனர் என்று கூறப்படுகிறது.

இராணுவத்தின் இந்தச் செயற்பாட்டினால் கல்லூரியின் எதிர்கால அபிவிருத்திப் பணிகள் பாதிப்படைய வாய்ப்புள்ளதாக பாடசாலையின் நலன்விரும்பிகள் தெரிவிக்கின்றனர். (ஐ-410)

# சீனியாமோட்டைப் பகுதி காணியில் காணப்படும் தேக்கு மரங்களை வெட்டிச் சரிக்கும் தென்னிலங்கையர்

கேப்பாப்பிலவு சீனியாமோட்டைப் பகுதியில் மீளக்குடியமர்த்தப்பட்ட பகுதியில் காணப்படும் தேக்கு மரங்கள் தென்பகுதியைச் சேர்ந்தவர்களால் வெட்டி அகற்றப்படுகின்றன என்று பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

மனிக்பாம் நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த கேப்பாப்பிலவு பகுதியைச் சேர்ந்த சுமார் 110 குடும்பங்கள் சீனியாமோட்டைப் பகுதியில் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர். இம்மக்களின் சொந்தக் காணிகளுக்குப் பதிலாக, தற்போது மீளக்குடியமர்த்தப்பட்ட பகுதிகளில் காணி வழங்குவதற்கான அனுமதிப்பத்திரங்கள் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தால் வழங்கப்பட்டிருந்தன.

இந்தச் சூழ்நிலையிலேயே அந்தப் பகுதியில் காணப்படுகின்ற மரங்கள் வெட்டப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த புதன்கிழமை அங்கு வருகை தந்த முல்லைத்தீவு செயலக அதிகாரிகளிடம் இது தொடர்பாக மக்கள் வினவியபோது காணி உரிமையாளரின் பணிப்பின் பேரிலேயே மரங்கள் வெட்டப்படுகின்றன என்று அவர்கள் தெரிவித்ததாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

நாங்கள் வீடுகள் அமைப்பதற்கு வேறு இடங்களில் இருந்து மரங்களைக் கொண்டு வரும் நிலையில் எமக்கு நிழல் தருகின்ற மரங்களை வெட்டுவது நியாயமா என இங்குள்ள மக்கள் கேள்வி எழுப்புகின்றனர் (க-410)

# முல்லைத்தீவு மாவட்டத்தில் எகிறியது தேங்காயின் விலை

**கடந்த சில நாள்களாக இங்கு ஒரு தேங்காயின் விலை 35 ரூபாவிலிருந்து 40 ரூபாவரையாக காணப்படுகின்றது.**

முல்லைத்தீவு,ஒக்.29


முல்லைத்தீவு மாவட்டத்தில் திடீரென தேங்காயின் விலை என்றுமில்லாத அளவு அதிகரித்துக் காணப்படுவதுடன் அவற்றுக்குத் தட்டுப்பாடும் நிலவுகின்றது.

கடந்த சில நாள்களாக இங்கு ஒரு தேங்காயின் விலை 35 ரூபாவிலிருந்து 40 ரூபாவரையாக காணப்படுகின்றது.

இப்பகுதியில் நிலவிய கடும் வறட்சி காரணமாகத் தென்னைகள் அழிந்துள்ளமையாலும் போரின்போது ஏற்கனவே தென்னைகள் அழிக்கப்பட்டதாலும் இந்த விலையுயர்வு காணப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். இன்னும் சில நாள்களில் தேங்காயின் விலை மேலும் உயர்வடைவதோடு பெரும் தட்டுப்பாடும் நிலவுமெனவும் கூறப்படுகின்றது.

ஒரு காலத்தில் தேங்காய் அதிகளவில் கிடைக்கும் ஒரு மாவட்டமாக முல்லைத்தீவு விளங்கியது குறிப்பிடத்தக்கது. (க-500)

## கண்டும் காணாத அதிகாரிகள்...?



மக்களின் உயிர்களைப் பறிப்பதற்கென கிளிநொச்சி - வட்டக்கச்சி பிரதான வீதியில் இயமன் குறிவைத்திருக்கும் மரணக் குழி. (405)

# புதுக்குடியிருப்பின் 'புதுவசந்தம்'

வவுனியா, ஒக்.29

புதுக்குடியிருப்பு பிரதேச கலை பண்பாட்டு, கலாசார விழுமியங்களை எடுத்துக் கூறும் ''புதுவசந்தம்'' என்ற நூல் கடந்த திங்கட்கிழமை வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

வெளியீட்டு நிகழ்வு புதுக்குடியிருப்பு பிரதேச கலாசாரப் பேரவையின் ஏற்பாட்டில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தின் முன்னாள் செயலர் சி.ஜெயகாந்த் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் நூலின் முதற் பிரதியை வெளியிட்டு வைத்தார். இந்த நிகழ்வில் புதுக்குடியிருப்பு உதவிப் பிரதேச செயலர் ஐ.பிரதாப், முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரச அதிபர் சீ.ஏ.மோகன்றாஸ் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

'புதுவசந்தம்' என்ற இந்த நூலில் புதுக்குடியிருப்பு கிராம அபிவிருத்திச் சங்கங்களின் செயற்பாடுகள் சமூக வாழ்வியல், நாடகவரலாறு, புதுக்குடியிருப்பின் பூர்வீகம், தமிழர் பண்பாட்டு விழுமியங்களின் இன்றைய நிலை உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பாக எடுத்துக் கூறப்பட்டுள்ளன. (ஐ-400)

# திண்மக் கழிவுகளின் முகாமைத்துவ செயற்பாட்டுக்கு வாகனங்கள் தேவை

## உள்ளூராட்சி ஆணையாளரிடம் கோரிக்கை

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு உட்பட்ட உள்ளூராட்சி சபைகள் பரந்தளவிலான திண்மக் கழிவு முகாமைத்துவ செயற்பாடுகளை முன்னெடுக்கும் பொருட்டு வாகனங்களை வழங்குமாறு உள்ளூராட்சி ஆணையாளரிடம் கோரியுள்ளன.

கிளிநொச்சியில் கரைச்சிப் பிரதேச சபை பரந்தளவிலான பிரதேசமாக இருப்பதால் அங்கு வாகன உதவிகள் உடனடியாக தேவைப்படுகின்றன. ஏனைய சபைகளும் தமது கோரிக்கைகளை எழுத்துமூலம் வழங்கியுள்ளதாகவும் சபைத் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கடந்த வாரம் இடம்பெற்ற திண்மக் கழிவு முகாமைத்துவ செயற்பாட்டுக் கூட்டத்திலும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் உள்ளூராட்சி சபைத் தலைவர்கள், செயலாளர்கள் இணைந்து வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளரிடமும் யுனொப்ஸ் திட்ட அதிகாரிகள், கொழும்பு திண்மக் [illegible] பிரிவுப் பணிப்பாளரிடமும் இது தொடர்பாக எடுத்துரைத்தனர். (க-41)

# இந்திய வீடமைப்புத் திட்டத்தின் முதற்கட்டம் சுதந்திரபுரத்தில்

வவுனியா,ஒக்.29

புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவில் இந்திய வீடமைப்புத் திட்டப் பணிகள் முதற்கட்டமாக சுதந்திர புரத்தில் ஆரம்பமாகவுள்ளன. இதனை புதுக்குடியிருப்பு பதில் பிரதேச செயலர் இ.பிரதாப் தெரிவித்தார். இறுதிக் கட்ட போர் இடர்களால் 11 ஆயிரம் வீடுகளுக்கு மேல் இங்கு சேதமாக்கப்பட்டுள்ளன. அவை இந்திய வீட்டுத்திட்டத்தின் கீழ் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவிலுள்ள சுதந்திரபுரம் பகுதியில் 663 குடும்பங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றன. இவற்றில் 300 விண்ணப்பதாரிகள் வீடமைப்புக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

நிராகரிக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் தற்போது மேன்முறையீடு செய்து வருகின்றனர். அவர்களுடைய முறைப்பாடுகள் தொடர்பாக பூரண விசாரணைகள் மேற்கொண்டு தகுதியானவர்களுக்கு வீடமைத்துக் கொடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இந்திய வீடமைப்புத் திட்டத்தின் கீழ் சுமார் 5 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் ஒவ்வொரு வீடும் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-400)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேதாள வெங்காயச் செய்கைக்கு அனலைதீவில் 12 விவசாயிகள் தெரிவு

யாழ்ப்பாணம், ஒக்.29

அனலைதீவில் வேதாள வெங்காயச் செய்கையை மேற்கொள்வதற்கு 12 விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கென ஒரு விவசாயிக்கு 150 கிலோ வீதம் ஐம்பது வீத மானியத்தில் இந்த வேதாள விதை வெங்காயம் வழங்கப்படவுள்ளது என்று மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் பாடவிதான உத்தியோகத்தர் ஆர்.சௌந்தரராஜன் தெரிவித்தார்

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தெரிவு செய்யப்பட்ட இந்த பன்னிரண்டு விவசாயிகளுக்கும் விநியோகிப்பதற்கென ஆயிரத்து 800 கிலோ வேதாள விதை வெங்காயம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த வாரத்தில் இந்த விதை வெங்காயம் உரிய விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படும்.

இந்த வேதாள வெங்காயச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு களைநாசினி மற்றும் தொற்று நீக்கி மருந்து என்பனவும் இலவசமாக விநியோகிக்கப்படும். - என்றும் கூறினார். (ம-17)



தும்பளை, நெல்லண்டை கருணை உள்ளம் இல்லத்தில் நடைபெற்ற உதவி வழங்கும் நிகழ்வில் கணவனை இழந்த பெண்களுக்கு சுயதொழிலுக்கான உதவிகள் வழங்கப்பட்டன. இதில் வயோதிபப் பெண் ஒருவருக்கு பருத்தித்துறை பிரதேச செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் திருமதி ரி.ஜெயராஜா, நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் திருமதி தீபிகா ஆகியோர் இணைந்து கோழிக்குஞ்சுகளை வழங்குகின்றனர். (ம-253)

## ஆபத்தான நிலையில் சரிந்துள்ள மின்கம்பம்

கொடாவில், ஒக்.29

கரணவாய் வடக்கு, நவிண்டில் பகுதியில் மின்கம்பம் ஒன்று சரிந்து ஆபத்தான நிலையில் உள்ளது.

இதனால் குறித்த பகுதியில் போக்குவரத்துச் செய்யும் மக்கள் பயப்பீதியுடன் பயணித்து வருகின்றனர்.

இந்த விடயம் குறித்து மின்சார சபைக்குத் தெரியப்படுத்தப்பட்ட போதும், இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று சுட்டிக் காட்டப்படுகிறது.

தற்போது மழை பெய்து வரும் நிலையில் இதனால் பெரும் அபாயம் ஏற்படும் நிலை காணப்படுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ம-253)

## செம்மணி வீதி மதகு திருத்தம் ஆமை வேகத்தில் தொடரும் பணி



யாழ்ப்பாணம், ஒக்.29

செம்மணி வீதியில் உள்ள பிரதான மதகின் புனரமைப்புப் பணிகள் தற்போது ஆமை வேகத்திலேயே இடம்பெற்று வருகின்றன.

மதகின் குழிக்குள் மழை வெள்ளம் அதிகளவில் தேங்கி நிற்பதால், அந்த வெள்ளம் இறைக்கும் பம்பி மூலம் அகற்றப்படுகின்றது.

மழை காரணமாக கட்டுமானப் பணிகள் ஆமை வேகத்தில் இடம்பெற்று வருகின்றன.

இந்தப் பாலப் பணிகள் ஜனவரி மாதமே நிறைவடையும் என்று கூறப்பட்டது. (ம-17)

# மீண்டும் பயிரழிவை எதிர்கொள்ளும் தென்மராட்சி தெற்கு விவசாயிகள்

### கட்டாக்காலி மாடுகளின் தொல்லை தொடர்கிறது

தென்மராட்சி, ஒக்.29

மீண்டும் ஒரு பெரிய பயிர் அழிவுகளை தென்மராட்சி தெற்குப் பிரதேச நெற்செய்கையாளர்கள் சந்திக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த வருட காலபோக நெற்செய்கை மேற்கொண்ட நெற்செய்கையாளர்கள் கட்டாக்காலி மாடுகளால் பயிர்கள் அழிக்கப்பட்டு பெரிய நஷ்டத்தை எதிர்கொண்டனர்.

கட்டாக்காலி மாடுகளை கட்டுப்படுத்தாத நிலையில் இந்த வருடம் காலபோக நெற்செய்கை மேற்கொள்வதில்லை என்று நெற்செய்கையாளர்கள் முடிவு செய்தனர்.

இந்த நிலையில் பயிர்ச் செய்கை ஆரம்பமாவதற்கு முன்னர் கட்டாக்காலி மாடுகளைப் பிடித்து முடிப்பதென சாவகச்சேரி பிரதேச சபையினரும், விவசாயத் திணைக்களத்தினரும் உறுதிமொழி வழங்கினர். இதனை அடுத்து ஆரம்ப கட்ட விதைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த நிலையில் நெற்பயிர்கள் வளர்ந்து வரும் வயல்களில் கட்டாக்காலி மாடுகள் இரவு வேளைகளில் கூட்டம் கூட்டமாக வந்து பயிர்களை அழித்து வருகின்றன. இதனால் இந்த வருடம் பயிர் அழிவுகளால் பெரும் நட்டம் ஏற்படவுள்ளதாகவும் நெற் செய்கையாளர்களால் தெரிவிக்கப்பட்டது.

பகல் வேளையில் பிரதேச சபையின் ஏற்பாட்டில் மாடுகள் பிடிக்கப்படுகின்ற போதிலும் இரவு வேளைகளில் கூட்டம் கூட்டமாக வரும் மாடுகள் நெற் பயிர்களை அழித்து வருகின்றன எனவும் தெரிவித்தார்.

பகல் வேளையில் கட்டாக்காலி மாடுகளிடமிருந்து பயிர்களைப் பாதுகாக்க நெற்செய்கையாளர்கள் சுழற்சி முறையில் காவல் இருக்கின்ற போதிலும் இரவு வேளைகளில் வரும் கட்டாக்காலி மாடுகளால் பயிர்கள் அழிக்கப்பட்டு வருவதாகவும் கவலையுடன் தெரிவித்தனர்.

காலையில் சென்று பார்வையிட்டால் பயிர்கள் மாடுகளால் சேதமாக்கப்பட்டிருக்கின்றன. அத்துடன் வயல்களின் பல இடங்களில் சாணம் குவியலாகக் காணப்படுகின்றது எனவும் தெரிவித்தனர்.

இந்த வருடம் நெற்பயிர்களை பாதுகாக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கத் தவறின் சட்டத்தை நாட வேண்டிய நிலைமையே ஏற்படும் என்றும் விவசாயிகள் கவலை தெரிவித்தனர். (ம-9)

## நடமாடும் சேவை மூலம் அஞ்சல் அ.அட்டை வழங்கல்

யாழ்ப்பாணம், ஒக்.29

யாழ்.பிரதம தபாலகம் கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடமாடும் சேவை மூலம் அஞ்சல் அடையாள அட்டைகளை விநியோகித்தது.

யாழ்.மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் எஸ்.ஜெபரெட்ணம் தலைமையில் நடைபெற்ற இந்த நடமாடும் சேவை மூலம் 231 அஞ்சல் அடையாள அட்டைகள் மாணவர்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

ஏழாம், எட்டாம் வகுப்பு மாணவர்களுக்கு நடத்தப்பட்ட இந்த நடமாடும் சேவை மூலம் மாணவர்கள் பயன் பெற்றனர்.

இந்த நடமாடும் சேவை மூலம் உடனடியாகவே மாணவர்களுக்கு இந்த அஞ்சல் அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

## 89,911 ஹெக்ரெயரில் இம்முறை கால போகம்

### மாகாண விவசாயப் பணிப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம், ஒக்.29

வடக்கு மாகாணத்தில் இந்த முறை காலபோகத்தில் 89 ஆயிரத்து 911 ஹெக்ரெயரில் நெற்செய்கை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது என்று வடமாகாண விவசாய பணிப்பாளர் எஸ்.சிவகுமார் தெரிவித்தார்.


காலபோகத்தில் நெல் உற்பத்தி குறித்தும் வறட்சியின் போது மாகாணத்தில் ஏற்பட்ட பாதிப்புக் குறித்தும் கேட்டபோது இவ்வாறு கூறினார்.

சிறுபோகத்தில் 18 ஆயிரத்து 102 ஹெக்ரெயரில் திட்டமிட்டிருந்த போதும் 12 ஆயித்து 444 ஹெக்ரெயரிலேயே நெற்பயிர்செய்கை மேற்கொள்ளப்பட்டது.

எதிர்பார்க்கப்பட்ட 48 ஆயிரம் மெற்றிக்தொன்னில் 11 ஆயிரம் மெற்றிக் தொன் குறைவாகவே கிடைத்ததால் 2012 சிறுபோகத்தில் வடமாகாணத்தில் 4 ஆயிரத்து 655 ஏக்கர் நெற்செய்கை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் கூறினார். (ம-7)



ஒரு தேங்காய் நாற்றிலிருந்து இரண்டு தென்னம்பிள்ளைகள் முளைத்துள்ளன. கைதடி முதியோர் இல்ல வளாகத்தில் முளைத்த இந்த தென்னம்பிள்ளைகளுடன் இல்லப் பணியாளர் என்.திலகரெத்தினம். (ம-17)



பெற்றோரை இழந்த பிள்ளைகளுக்கு பருத்தித்துறையைச் சேர்ந்த [illegible] தீபாவளியை முன்னிட்டு உடுபுடைவைகளை வழங்குகின்றார். (ம-253)

# பெரும்போக நெற்செய்கை இம்முறை நல்ல நிலையில்

### விவசாயத் திணைக்கள பாடவிதான உத்தியோகத்தர்

யாழ்ப்பாணம், ஒக்.29

யாழ். குடாநாட்டில் பெரும்போக நெற்செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளின் நெற்பயிர்கள் தற்போது நல்ல நிலையில் உள்ளன என்று மாவட்ட விவசாய திணைக்களத்தின் பாடவிதான உத்தியோகத்தர் ஆர்.சௌந்தரராஜன் தெரிவித்தார்.

இந்த பெரும்போக நெற்செய்கை குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது குடாநாட்டில் 85 வீதமான விதைப்புப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளன.

இவை எல்லாம் பயிராகி நல்ல நிலையில் உள்ளன. அதற்கேற்றவாறு மழையும் பெய்கின்றது.

தற்போது பெரும்பாலான விவசாயிகள் தமது நெற்பயிர்களுக்கு உரப் பசளை போடுவதில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை தாழ்ந்த நிலப்பரப்பில் அனேகமான விவசாயிகள் நெற்செய்கையை மேற்கொள்ள முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

மழை காலம் பிந்தி பெரு மழையாகப் பெய்வதால் வயல்களில் வெள்ளம் உள்ளது. இதனால் நெல்லை விதைத்து இயந்திரம் மூலம் உழுவதற்கு முடியாத இக்கட்டான நிலைக்கும் அவர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

நெல் நாற்றுக்களை நடுகை செய்வதற்கும் ஏற்ற நடவடிக்கைகளைச் செய்கையாளர் மேற்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக குடாநாட்டில் விவசாயிகள் மேற்கொண்ட பெரும்போக நெற்செய்கைக்கான புள்ளி விவரங்கள் விரைவில் வெளிவரும்.- என்று கூறினார். (ம-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்னைக்கு வருகிறது 'கூடங்குளம்'

## இன்று தலைமைச் செயலகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்த ஏற்பாடு; கட்சிகள் பலவும் ஆதரவு



சென்னை, ஒக்.29

கூடங்குளம் அணு உலைக்கு எதிரான போராட்டத்துக்கு வலிமை சேர்க்கும் வகையில் இன்று சென்னை தலைமைச் செயலகத்தை முற்றுகையிட்டுப் போராட்டம் நடைபெற உள்ளது.

மேற்படி போராட்டத்துக்கு ம.தி.மு.க, பா.ம.க., புதிய தமிழகம், மனித நேய மக்கள் கட்சி, விடுதலைச் சிறுத்தைகள், தமிழர் வாழ்வுரிமைக் கட்சி, பழ.நெடுமாறனின் உலகத் தமிழர் பேரவை, திராவிட விடுதலைக் கழகம், தமிழர் தேசியக் கட்சி, மீனவர் அமைப்புகள் உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சிகள் மற்றும் சமூக அமைப்புகளும் ஆதரவு தெரிவித்துள்ளன.

போராட்டக் குழுவினர் அறிவித்த நேரத்தில் சட்டப்பேரவை கூட்டம் நடைபெறவுள்ளது. இதனால் கடந்த இரு தினங்களாகவே இரவு நேரத்தில் தலைமைச் செயலகம் செல்லும் வீதியைப் பொலிஸார் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

போராட்டக் குழுவினர் பல தினங்களுக்கு முன்னதாகவே சென்னைக்குள் வந்து உறவினர்கள், நண்பர்களின் வீடுகளில் தங்கியிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிப்பதால், கண்காணிப்பைத் தீவிரப்படுத்தியுள்ளனர். தென் மாவட்டங்களில் இருந்து சென்னைக்கு வரும் ரயில்கள், பஸ்களையும் பொலிஸார் கண்காணிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. போராட்டத்துக்குப் பொலிஸார் அனுமதி மறுத்துள்ளனர். சென்னை நகர் முழுவதும் தடை உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதனால் தலைமைச் செயலகப் பகுதியில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் கூடி நின்றால் அவர்களைக் கைது செய்யத் திட்டமிட்டுள்ளனர். (வ)

# விஜயகாந்த் மீது வழக்கு

**பத்திரிகையாளர்களை திட்டியதற்காக**



பத்திரிகையாளர்களை 'நாய்' என்று தரக்குறைவாகப் பேசியதாக தே.மு.தி. தலைவர் விஜயகாந்த் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

தே.மு.தி.க.,வை சேர்ந்த சட்டசபை உறுப்பினர்கள் சுந்தர்ராஜன், மைக்கேல் ராயப்பன், அருண்பாண்டியன் உட்பட நான்கு பேர் முதல்வர் ஜெயலலிதாவை சந்தித்துப் பேசினர்.

இதுகுறித்து கேள்வி கேட்ட பத்திரிகையாளர்கள் மீது ஆவேசமடைந்த தே.மு.தி.க., தலைவர் பத்திரிகையாளர்களைத் திட்டியதுடன் தரக்குறைவாக நடந்து கொண்டுள்ளார். மேலும் அவருடன் இருந்த சட்டசபை உறுப்பினர் ஒருவர் பத்திரிகையாளர் மீது தாக்குதல் நடத்தியதாகவும் கூறப்படுகிறது.

இதனையடுத்து விஜயகாந்த் மீதும் அவருடன் இருந்த குறித்த சட்டசபை உறுப்பினர் மீதும் பத்திரிகையாளர்கள் வழக்குப் பதிவு செய் துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (வ)

# 'நான் பொறுப்பேற்கின்றேன் பாபர் மசூதி தகர்ப்புக்கு'

**உ.பி. முன்னாள் முதல்வர் தெரிவிப்பு**



''பாபர் மசூதி மீதான தாக்குதலுக்கு நான் பொறுப்பேற்கிறேன்'' என்று உத்தரப் பிரதேச முன்னாள் முதல்வர் கல்யாண் சிங் தெரிவித்தார்.

பா.ஜ.க.வில் இருந்து சில வருடங்களுக்கு முன்னர் விலகியவரும் உத்தரப் பிரதேச முன்னாள் முதல்வருமான கல்யாண் சிங் ஜன் கிராந்தி என்ற தனிக்கட்சியை ஆரம்பித்தார். அவர் விரைவில் பா.ஜ.கவில் இணையவுள்ளார். இந்த நிலையில் எட்டா நகரில் அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

அயோத்தியில் 1992 ஆம் ஆண்டு பாபர் மசூதி மீது தாக்குதல் நடத்தப்பட்டதற்கு நான் முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்கிறேன். ஏனெனில், அங்கு திரண்டிருந்த ராம பக்தர்கள் மீது துப்பாக்கியால் சுட வேண்டாம் என்று உத்தரப் பிரதேச முதல்வர் என்ற முறையில் உத்தரவிட்டேன். இதுவே மசூதி தகர்க்கப்பட வழிவகுத்தது.

நான் பா.ஜ.கவில் மீண்டும் இணைவது ஏன் என்று கேட்கிறீர்கள். தேசிய (ஹிந்துத்துவ) சக்திகளை இணைப்பதற்கு இதுவே சரியான நேரம். கட்சியின் மூத்த தலைவர்களுடன் ஆக்கபூர்வமான பேச்சு நடத்தியிருக்கிறேன். நான் கட்சியில் சேரும் திகதியை கட்சித் தலைவர் முடிவு செய்வார் - என்றார். (வ)

## உல்பா தீவிரவாதிகள் மூவர் கைது

பொலிஸாரின் தீவிர தேடுதல் வேட்டையில் உல்பா தீவிரவாதிகள் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அஸாம் மாநிலத்திலிருந்து அயல் மாநிலமான அருணாச்சலப்பிரதேசம் நோக்கி பஸ்ஸில் உல்பா தீவிரவாதிகள் சிலர் பயணிப்பதாக பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைத்தது. இதனையடுத்து, இராணுவமுகாம் அருகே சென்றுகொண்டிருந்த பஸ்ஸை பொலிஸார் வழி மறித்து சோதனையிட்டபோது, அதில் பயணம் செய்த 2 உல்பா தீவிரவாதிகள் பிடிபட்டனர்.

அவர்களிடமிருந்து 5 கையெறி குண்டுகளும், ஒரு துப்பாக்கி மற்றும் வெடி மருந்துகளும் பறிமுதல் செய்யப்பட்டன. இதேபோல, திப்ருகார் மாவட்டத்தில் நடைபெற்ற மற்றொரு வாகனச் சோதனையின்போது மேலும் ஒரு தீவிரவாதி பிடிபட்டார்.



ஹிமாச்சல பிரதேசத்தில் பாலம்பூர் நகரில் தேர்தல் பிரசாரம் மேற்கொள்ள வந்த பாரதீய ஜனதாக் கட்சியின் முக்கியஸ்தரும் லோர் சபாவின் எதிர்க்கட்சித் தலைவருமான சுஷ்மா சுவராஜுக்கு அந்தக்கட்சியின் சார்பில் தொப்பி அணிவிக்கப்பட்டது.

# மின்சாரம் வழங்க உத்தரவிடக் கோரி மத்திய அரசு மீது தமிழக அரசு வழக்கு

சென்னை, ஒக்.29

தமிழகத்துக்கு மின்சாரம் வழங்க மத்திய அரசுக்கு உத்தரவிடக்கோரி உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

முதல்வர் ஜெயலலிதா தலைமையில் நேற்று முன் தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது. முதல்வர் ஜெயலலிதா தலைமையில் அமைச்சரவை கூட்டம் நேற்று முன்தினம் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. அமைச்சர்கள் ஓ.பன்னீர்செல்வம் உட்பட அனைத்து அமைச்சர்களும் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில், முக்கியமாக தமிழகத்தின் மின் நிலைமை குறித்து விவாதிக்கப்பட்டது. கூட்டத்துக்கு பின்னர் அமைச்சரவை கூட்டத்தில் மின் நிலைமை குறித்து நிறைவேற்றப்பட்ட தீர்மானம் குறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:-

தமிழகத்தின் மின் தேவை 12 ஆயிரம் மெகாவாற் என்ற அளவில் இருக்கும்போது, 8 ஆயிரம் மெகாவாற் அளவுக்கே மின்சாரம் கிடைத்து வருகிறது. எனவே, தமிழகத்தில் கடுமையான மின்வெட்டு நிலவுகிறது. இந்தச் சூழ்நிலையில், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானகழகம் வெளிமாநிலங்களிலிருந்து ஆயிரத்து 100 மெகாவாற் அளவுக்கு மின்சாரத்தை வாங்குவதற்கான ஒப்பந்தங்களை போட்டுள்ளது. இவ்வாறு ஒப்பந்தங்கள் போடப்பட்டும், மத்திய அரசின் நிறுவன மான மின்சக்தி தொடர் அமைப்பு நிறுவனம் மின் தொடர் கட்டமைப்பின் மூலம் வழங்க நடவடிக்கை எடுக்காததன் காரணமாக தமிழகத்துக்குத் தேவையான மின்சாரத்தைப் பெற இயலவில்லை-என்றுள்ளது. (வ)

# தங்கக் கிரீடம், செங்கோல் யாருக்குரியவை? மதுரை ஆதீனம், நித்தி இடையே முறுகல்





மதுரை, ஒக்.29

மதுரை ஆதீனம், நித்தியானந்தா இடையே தங்கக் கிரீடம், செங்கோல் என்பவை யாருக்கு உரிமையானவை என்பதில் மோதல் ஏற்பட்டுள்ளது. இதனால் பரபரப்பு ஏற்பட் டுள்ளது.

பாலியல் குற்றச்சாட்டுகளுக்கு ஆளான நித்தியானந்தாவை கடந்த 19 ஆம் திகதி இளைய மடாதிபதி பொறுப்பில் இருந்து நீக்கி மதுரை ஆதீனம் அதிரடி நடவடிக்கை எடுத்தார். இதனைத்தொடர்ந்து இருவரும் சேர்ந்து உருவாக்கிய அறக்கட்டளை கலைக்கப்பட்டு, ஒப்பந்தங்களும் ரத்து செய்யப்பட்டன. இளைய ஆதீனமாக நியமிக்கப்பட்ட போது பெங்களூரில் இருந்து நித்தியானந்தா கொண்டு வந்திருந்த அனைத்து ஆபரணப் பொருள்களும் வெளியில் தூக்கிப் போடப்பட்டன.

அதை நித்தியானந்தா ஒரு வாரத்தில் எடுத்துச் செல்லும்படி ஆதீனம் கெடு விதித்திருந்தார். அதன்படி ஆதீன மடத்தில் மதுரை பொலிஸார் முன்னிலையில் நித்தியானந்தாவின் பொருள்கள் அனைத்தும் மூடை கட்டி 3 லொறிகளில் ஏற்றிச் செல்லப்பட்டன.

இந்த நிலையில் நித்தியானந்தாவின் சீடர் ரிஷி உட்பட சிலர் ஆதீன மடத்துக்கு வந்து நித்தியானந்தாவின் தங்கக் கிரீடம், வெள்ளி செங்கோல் உள்ளிட்ட விலை உயர்ந்த பொருள்கள் மடத்தில் உள்ளன. அதை ஒப்படைக்க வேண்டும் என அருணகிரிநாதரிடம் கேட்டனர். அதற்கு அவர், எனக்கு கனகாபிஷேகம் நடந்த போது, 162 தங்க நாணயங்கள் அபிஷேகம் செய்யப்பட்டன. அதை மடத்திலிருந்து செல்லும் போது நித்தியானந்தா எடுத்துச் சென்றுவிட்டார். நவீன வசதியுடைய காரும் அவர் வசம் உள்ளது. அதை கோவையில் உள்ள வாகன சுத்திகரிப்பு நிலையத்தில் நிறுத்தி வைத்துள்ளார். அது தொடர்பான ஆவணங்களை என்னிடம் ஒப்படைக்கவில்லை.

இது தவிர அவரை ஆதீன வாரிசாக நியமித்த சில ஆவணங்களும் அவரிடம் உள்ளன. அதையும் ஒப்படைக்க வேண்டும். அதன் பிறகு தங்கக் கிரீடமும், செங் கோலும் திரும்ப வழங்கப்படும் என்று ஆதீனம் சார்பில் தெரிவிக்கப்பட்டது. இதை நித்தியானந்தா சீடர்கள் ஏற்க வில்லை. இது தொடர்பாக விளக்குத்தூண் காவல் நிலையத்தில் நித்தியானந்தா சீடர்கள் முறைப்பாடு செய்தனர். இதனால், பரபரப்பு ஏற்பட்டுள்ளது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அமெரிக்காவின் லொஸ்வேகாஸ் நகரில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தில் தமது கணவர் பராக் ஒபாமாவுக்காக ஆதரவு திரட்டும் மிச்செல் ஒபாமா. (வ)

# இந்திய இராணுவம் நவீனமயமாக ஆதரவு தெரிவிக்கின்றது அமெரிக்கா

இந்திய இராணுவம் நவீனமயமாகி வருவதற்கு அமெரிக்கா ஆதரவு தெரிவித்துள்ளது. இதற்காக இந்தியா அதிகம் செலவு செய்வது சிறந்த முதலீடு என்றும் அமெரிக்கா வர்ணித்துள்ளது.

வொஷிங்டனில் நடைபெற்ற அமெரிக்க - இந்திய உறவு தொடர்பான கருத்தரங்கில் அமெரிக்க வெளியுறவுத்துறை இணையமைச்சர் வில்லியம் பர்ன்ஸ் இது தொடர்பாகத் தெரிவித்ததாவது:-

சர்வதேச ரீதியில் அமைதியை நிலைநாட்டுவதிலும், ஆசிய - பசிபிக் பகுதியில் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதிலும் இந்தியா முக்கிய பங்கு வகிக்கிறது. இந்தியா தனது தரைப்படை, கடற்படை பலத்தை அதிகரிக்க மேற்கொண்டு வரும் முயற்சிகள் வரவேற்கத்தக்கன. இந்தியாவின் இந்த நடவடிக்கைக்கு அமெரிக்காவும் உதவும்.

அதேநேரத்தில் சீனா தனது இராணுவ பலத்தை அதிகரிப்பது கவலையளிக்கிறது. ஏனெனில் அவர்களது நடவடிக்கைகளில் வெளிப்படைத்தன்மை இல்லை. இராணுவம், பொருளாதாரம் ஆகிய துறைகளில் இந்தியாவும், சீனாவும் அடுத்த சில ஆண்டுகளில் மிகவும் பலம் வாய்ந்த நாடுகளாக மாறிவிடும். ஆசிய பிராந்தியத்தில் ஏற்படும் பிரச்சினைகளைத் தவிர்க்க இந்தியா தனது கடற்படையை வலுவாக்கிக் கொள்வது மிகவும் அவசியம் - என்றார்.

அமெரிக்காவிடம் இருந்துதான் இந்தியா பெருமளவில் இராணுவத்துக்குத் தேவையான நவீன ஆயுதங்கள், கருவிகள் உட்பட பல உபகரணங்களை கொள்வனவு செய்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

# இத்தாலி முன்னாள் பிரதமருக்கு சிறை



இத்தாலியின் முன்னாள் பிரதமர் சில்வியோ பெர்லஸ்கோனிக்கு வரி மோசடிக் குற்றச்சாட்டில் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பான வழக்கில் அவர் குற்றவாளியாக காணப்பட்டதை அடுத்து அரச அலுவலகத்தில் பணியாற்றவும் அவருக்கு நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

மிலான் நகர நீதிமன்றம் நான்கு ஆண்டு கால சிறைத் தண்டனையை அவருக்கு விதித்த போதிலும், மன்னிப்புச் சட்டத்தின் அடிப்படையில் தண்டனையை ஒரு வருட காலமாக நீதிமன்றம் பின்னர் குறைத்துள்ளது.

எனினும் ''மேற்படி தீர்ப்பைப் பொறுத்துக்கொள்ள முடியாத நீதித்துறை துன்புறுத்தல்'' என்று கூறியுள்ள சில்வியோ பெர்லஸ்கோனி, அதற்கு எதிராக மேன்முறையீடு செய்யப் போவதாகத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கத் திரைப்படமொன்றின் உரிமையைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் இரண்டு நிறுவனங்கள் மூலம் அதிக விலை கொடுத்து வாங்கியதாக அவர் மீது குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது. (வ)

## இரு குண்டுத் தாக்குதல்கள்

# ஈராக்கில் 10 பேர் உயிரிழப்பு ஹஜ் பிரார்த்தனையில் பேரிடர்

பக்தாத், ஒக்.29

ஈராக்கில் ஹஜ் பெருநாள் பிரார்த்தனையில் ஈடுபட்ட சியா முஸ்லிம் வழிபாட்டாளர்களை இலக்கு வைத்து நடத்தப்பட்டதாகக் கருதப்படும் இரு குண்டுத் தாக்குதல்களில் 10 பேர் உயிரிழந்தனர்.

ஈராக்கில் கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட குண்டு வீச்சு மற்றும் துப்பாக்கிப் பிரயோகங்களில் 20 பேர் காயமடைந்திருந்த நிலையில் மேற்படி தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.



டாஜி நகரத்திலுள்ள ஷியா யாத்திரிகர்களை நேற்று முன்தினம் ஏற்றிக்கொண்டு சென்ற மினி பஸ் ஒன்றில் பொருத்தியிருந்த காந்தக் குண்டு வெடித்ததில் குறைந்தது 5பேர் கொல்லப்பட்டனர். மேலும் 12 பேர் காயமடைந்தனர் என்று பாதுகாப்பு அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

இந்தச் சம்பவத்தில் ஈரானைச் சேர்ந்த சில பாதயாத்திரிகர்களும் கொல்லப் பட்டும் காயப்பட்டும் இருக்கலாம் என்றும் கூறப்பட்டது. ஆனால் எண்ணிக்கை விவரம் சரியாக கணக் கிடப்படவில்லை என்று அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர். குறித்த தாக்குதல்களுக்கு எவரும் இது வரை உரிமை கோரவில்லை. (வ)

# இறகுகள், இறக்கைகளுடன் டைனோசரின் சுவடு கண்டுபிடிப்பு



இறகுகளும், இறக்கையும் உடைய டைனோசர் இனம் வாழ்ந்ததற்குரிய சுவட்டை முதன்முறையாக விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர்.

கனடாவின் வட துருவத்துக்கு மேற்கு பகுதியில் மேற்படி சுவடுகளை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். இதன் விஞ்ஞானப் பெயர் ஓர்னிதோமிமிட்ஸ் என்பதாகும். இந்த டைனோசர் இனம் தொடர்பான விவரங்களை தொல் பொருளாய்வாளரான டார்லா ஸிலென்ரிஸ்கை அமெரிக்காவில் வெளிவரும் பத்திரிகை ஒன்றில் குறிப்பிட் டுள்ளார்.

இதற்கு முன்னரும் பறவை இன டைனோசர்களின் எலும்புச் சுவடுகள் கண்டுபிடிக்கப்பட்டிருந்த போதும் இறக்கைகள் மட்டுமல்லாது இறகுடன் கூடிய இனத்தின் ஒரே சுவடு இதுவென ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இதன்மூலம் ஓர்னிதோமிமிட்ஸ் இனத்தைச் சேர்ந்த பறக்கும் அனைத்து டைனோசர்களுக்கும் இறகுகள் இருந்திருக்கலாம் எனவும் ஊகிக்கப்படுகின்றது. மேற்படி டைனோசரின் சுவடு 75 மில்லியன் வருடங்கள் பழைமையானது எனவும் கூறப்படுகின்றது.

இதன் இறக்கைகள் பறப்பதற்கு அல்லாது அதன் இனப்பெருக்க காலத்தில் முட்டையை அடைகாக்கவும் குளிரைத் தாக்குப் பிடிக்கவும் உதவியதாகவும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இதற்கு முன்னர் இந்த வகை பறவை டைனோசர்களின் எலும்பு மற்றும் சுவடுகள் சீனாவிலும் ஜேர்மனியிலும் பாறைகளுக்கு அடியில் கண்டுபிடிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(வ)

# திபெத்தில் தீக்குளிப்பு அதிகரிப்பு சீனாவின் ஆட்சிக்கு எதிராக

## ஒரு வாரத்தில் மட்டும் ஐவர் சாவு

சீன ஆட்சிக்கு எதிராக போராட்டம் நடத்திய திபெத்தியர்கள் 5 பேர் தீக்குளித்து உயிரிழந்தனர்.

சீன ஆட்சிக்கு எதிராக போராடி வரும் திபெத்தியர்கள் தலாய்லாமா மீண்டும் நாடு திரும்ப அனுமதிக்க வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர்.

தனி நாடு கோரிக்கைக்காக அவர்கள் பயன்படுத்தும் தீக்குளிப்பு ஆயுதம் மிகவும் கொடூரமாக உள்ளது.

ஏராளமான திபெத்தியர்கள், குறிப்பாக புத்த மத இளம் துறவிகள் தீக்குளித்து தற்கொலை செய்து வருகின்றனர். இதற்குத் தலாய்லாமா தான் காரணம் என்று சீன அரசு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. இருப்பினும் தற்கொலை சம்பவங்கள் தொடர்கின்றன. இந்தநிலையில் ஜியாகே கவுண்டியில் உள்ள அமி யூக்ஹூ நகரின் பிரதான வீதியில் நேற்று முன்தினம் மாலை சேவாங் கியாப் என்ற 23 வயது இளைஞர் தீக்குளித்து உயிரிழந்தார்.

முன்னதாக அந்தப் பகுதியில் உள்ள இராணுவத் தளம் அருகில் லாமோ சேதன் (வயது 24) என்ற திபெத்திய விவசாயி உயிரை மாய்த்துக் கொண்டார். மருத்துவமனை அருகில் மற்றொருவர் உயிரிழந்தார். ஒரு வாரத்தில் மட்டும் 5 திபெத்தியர்கள் தீக்குளித்து இறந்துள்ளனர்.

# சீனாவில் செல்வாக்குள்ள அரசியல்வாதி போஜிலாய் மீதான விசாரணை ஆரம்பம்



ஊழல் குற்றச்சாட்டின் பேரில் சீனாவின் ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து நீக்கப்பட்ட போஜிலாய் மீதான விசாரணை ஆரம்பமாகியுள்ளது.

விசாரணை நடத்துவதற்கு வசதியாக நாடாளு மன்ற உறுப்பினர் பதவியிலிருந்து அவர் நீக்கப்பட்டார்.

அவர் ஊழலில் ஈடுபட்டுள்ளார் என்றும், தனது மனைவி மீதான குற்றச் சாட்டு விசாரணையைத் தடுக்க முயற்சித்துள்ளார் என்றும் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் மீதான விசாரணை சட்டப்படி பாரபட்சமின்றி மேற்கொள்ளப்படும் என்று அரச உயர் அதிகாரிகள் தெரிவித்ததாக ஜின்குவா செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

சீனாவின் ஆட்சி அதிகாரத்தில் முக்கிய பங்கு வகிக்கும் மத்திய குழுவின் (பொலிட் ஸீரோ) உறுப்பினர்கள் 9 பேரில் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்படும் அளவுக்கு மிகவும் செல்வாக்குப் பெற்றவராக போ ஜிலாய் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.(வ)

# இலவச கருக்கலைப்புப் பிரேரணை பிரான்ஸ் அவையில் நிறைவேற்றம்

பதினெட்டு வயதுக்குட்பட்ட பெண்களுக்கு இலவசமாக கருக்கலைப்பு செய்வதற்கான சட்டப் பிரேரணை பிரான்ஸ் தேசிய அவையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தேசிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் இந்த இலவச கருக்கலைப்புத் திட்டம் செயற்படுத்தப் படும். இந்தத்திட்டத்தின் மூலம் ஏழை மற்றும் 18 வயதுக்குட்பட்ட பெண்கள் பயனடைய முடியும்.

ஏனைய பெண்களும் கருக்கலைப்புக்கான செலவில் 80 சதவீதத்தை திரும்பப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அடுத்ததாக குறித்த பிரேரணை மேலவையில் நிறைவேற்றப்பட உள்ளது. மேற்படி பிரேரணையில், தேவையற்ற கர்ப்பத்தைக் கலைக்கும் உரிமை பெண்களுக்கு உள்ளது.

அதே நேரத்தில் கருக்கலைப்புக்கான செலவு அதிகமாக உள்ளது. எனவே இலவச கருக்கலைப்புத் திட்டம் அவசியமாகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸ் உட்பட பல ஐரோப்பிய நாடுகளில், பெற்றோரின் அனுமதி பெறாமல் கருக்கலைப்புச் செய்து கொள்ள திருமணமாகாத பெண்களுக்கு உரிமை உண்டு என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெடித்தது மனித வெடிகுண்டு

## ஆப்கனில் தொழுகையில் ஈடுபட்ட 40 பேர் சாவு





காபூல், ஒக்.29

ஆப்கானிஸ்தான் பள்ளி வாசலில் கடந்த வெள்ளிக் கிழமை இடம் பெற்ற மனித வெடிகுண்டுத் தாக்குதலில் 40 பேர் உயிரிழந்தனர். 70 பேர் படுகாயமடைந்தனர்.

ஆப்கானிஸ்தானில், அமெரிக்காவின் தாக்குதலுக் குப் பின்னர் ஆட்சியை இழந்த தலிபான்கள், பல் வேறு நாச வேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர். ஜனநாயக முறையில் நடை பெற்ற தேர்தல் மூலம், அதி பரான ஹமீத் கர்சாய், தலி பான்களை அமைதி வழிக் குத் திரும்பும்படி வலியுறுத் தியுள்ளார்.

இதற்கிடையே பர்யாப் மாகாணம், மேமானா என்ற இடத்தில் உள்ள பள்ளிவாச லில், கடந்த வெள்ளிக் கிழமை சிறப்புத் தொழுகை இடம்பெற்றது.

குறித்த மாகாணத்தின் பொலிஸ் தலைவரும், சிறப் புத் தொழுகையில் கலந்து கொள்ள வந்திருந்தார். இதை யொட்டி பள்ளி வாசலில் பாது காப்பு ஏற்பாடுகள் செய்யப்பட் டிருந்தன. பொலிஸ் உடை யில் வந்த, மனித வெடி குண்டு ஆசாமி, தன் உடலில் கட்டியி ருந்த வெடி குண்டை வெடிக் கச் செய்ததில், 15 பொலி ஸார் உட்பட 40 பேர் உடல் சிதறி உயிரிழந்தனர். 70 இற் கும் அதிகமானோர் பலத்த காயம் அடைந்தனர். (வ)

## உலகின் மிகப்பெரிய பூங்கா திபெத்தில்



தென்மேற்கு சீனாவி லுள்ள சீன ஆதிக்கத்துக்கு உட்பட்ட திபெத் பகுதியில் மிக உயரத்தில் மிகப்பெரிய பூங்கா ஒன்று திறந்து வைக் கப்பட்டுள்ளது.

உலகின் மிகப் பெரிய பூங் காவனம் எனும் பெருமை யைக் பெற்றிருக்கும் மேற்படி பூங்கா கடந்த வெள்ளிக் கிழமை திறந்து வைக்கப் பட்டது. 'ஹோமோலங்கம' தேசிய பூங்கா என்று அழைக் கப்படும் மேற்படி பூங்கா சீன நேபால் எல்லைப் பகுதி யில் சுமார் 78 ஆயிரம் சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ளது.

மேற்படி பூங்கா ஹோமோ லங்கம மலை உட்பட 8000 மீற் றர் உயரமான ஐந்து மலை களின் மத்தியில் அமைந்துள் ளது. மேலும் இதன் அருகே இமயமலைத் தொடரிலுள்ள 7 ஆயிரம் மீற்றர் உயரமான 10 மலைகள் காணப்படு கின்றன. குறித்த பூங்காவில் பல புவி நீரூற்றுக்களும், பனி பெய்யும் மலைக் காடுகளும் கூடக் காணப்படுகின்றன. இதுகுறித்த பகுதியில் புவி யியற் வளப்பாதுகாப்புக்கும் உயிர்ப் பல்வகைமைக்கும் சட்டத்துக்கு முரணாக மரங் களை அழித்தல், வளங்களைச் சுரண்டல் மற்றும் நிலக் கொள்ளை ஆகியவற்றில் இருந்து காப்பாற்றவும் உதவும் என்று எதிர்பார்க்கப்படுகின் றது. (வ)

## கடவுச்சீட்டு, வீசா ஏதுமின்றி விமானத்தில் சென்ற 'திருட்டுப்பயல்'



பாம்பு ஒன்று கடவுச் சீட்டு, வீசா எதுவுமே இல்லா மல் விமானத்தில் ஏறி மெக் சிகோவிலிருந்து பிரிட்ட னைச் சென்றடைந்துள்ளது.

மெக்சிகோவின் கன்குன் விமான நிலையத்திலிருந்து ஸ்கொட்லாந்தின் கிளாஸ்கோ நகரம் வரை சுமார் 5 ஆயிரம் மைல்கள் தூரம் இந்த பாம்பு கடந்து வந்திருக்கிறது.

பயணிகள் இருக்கை களின் கீழே அமர்ந்தபடி, எவருக்கும் தெரியாமல் அமை தியாக வந்துசேர்ந்த 18 அங்கு லம் நீளமான இந்தப் பாம்பை விமானப் பணியாளர் ஒருவர் தான் இறுதியில் கண்டுள்ளார்.

உடனடியாக, ஸ்கொட்லாந் தின் வன உயிர் பாதுகாப்பு தொண்டு நிறுவனத்தினர் வந்து அதனை மீட்டுச் சென்றனர். குறித்த பாம்பு விஷப்பாம்பு இல்லாவிட்டாலும், அது கடித்து ஒரு பதம் பார்த்து விடும் என்று வன உயிர் பாதுகாப்புப் பணியாளர்கள் கூறினர். பாம் பின் வேலையைப் பார்த்து விட்டு விமான நிலையப் பணி யாளர்கள் அதற்கு 'ஃபுர்டிவோ' என்று பெயரிட்டுள்ளனர். அவ் வாறென்றால் செல்லமாக ஸ்பானிய மொழியில் 'திருட் டுப்பயல்' என்று அர்த்தம்.

## கனடாவில் நில நடுக்கம்

வான்கூவர், ஒக்.29

கனடாவின் மேற்கு கடலோரப் பகுதிகளில் நேற்று கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டது. இதையடுத்து அங்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது. உள்நாட்டு நேரப் படி நேற்று முன்தினம் சனிக் கிழமை இரவு 11.14 மணிக்கு 7.7 ரிச்டர் அளவு கோலில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டதாக, அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனால் ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்து இது வரையி லும் தகவல் எதுவும் தெரியவரவில்லை. இதனையடுத்து பிரிட் டிஷ் கொலம்பியா, வான்கூவர் தீவு மற்றும் அலாஸ்காவுக்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (வ)

## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

தாயின் மடியில்
26 * 02 * 1951



மாயவன் காலடியில்
29 * 09 * 2012

அமரர்

**தம்பையா உருத்திராபதி (J.P)**

(இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முன்னாள் தமிழ்ச் சேவைப் பணிப்பாளர், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைச்சின் ஊடக இணைப்பாளர், அகில இலங்கை சமாதான நீதிவான்)

அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்து அனுதாபம் தெரிவித்தோருக்கும், இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்ட மாண்பு மிகு பாரம்பரிய மற்றும் சிறு கைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா (பா.உ), தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சின் சார்பில் வருகை தந்த திரு.யதாமினி குணவர்த்தன அவர்களுக்கும் அமைச்சின் உத்தியோகத்தர்களுக்கும் அஞ்சலி நிகழ்வுகளை தொகுத்து வழங்கிய மதுரகவி காரை எம்.பி அருளானந்தம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சார்பில் கலந்து கொண்டோருக்கும், யாழ்.சேவை (F.M) சார்பில் கலந்து கொண்ட உத்தியோகத்தர்களுக்கும், ஊடகத்துறை சார்ந்த அனைத்து நண்பர்களுக்கும், சகல பத்திரி கைகளிலும் செய்திகள், கட்டுரைகள் வெளியிட்ட பத்திரிகையாளர்கள், வெளிநாடுகளி லிருந்து அஞ்சலி வெளியிட்டோர், உற்றார், உறவினர், நண்பர்கள், நலன் விரும்பிகள் மற்றும் தொலைத்தொடர்பு சாதனங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அத்துடன் நாளை (30.10.2012) செவ்வாய்க்கிழமை மு.ப 10.30 மணிக்கு "சுன்னாகம் ஸ்ரீ கதிரமலைச் சிவன்" ஆலய மண்டபத்தில் நடைபெறும் அஞ்சலி நிகழ்விலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம். (தனிப்பட்ட அழைப்புக் கிடைக்கப் பெறாதவர்கள் இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.)

A10,3/1, Soysa Flats, Moratuwa (24889)

குடும்பத்தினர்
0778326289

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1981, உத்தர நட் சத்திரம், கன்னி ராசியில் பிறந்த, 7 ஆம் இடத்தில் ராகுவும் செவ்வாயும், 52 பாவம் உடைய, லண் டனில் பட்டப்படிப்பு முடித்து Work Permit இல் கொம்பனி கணக்காளராகப் பணிபுரியும் மகனுக்கு தகுந்த மணமகளை பெற்றோர் தேடுகின்றனர்.
தொ.பே.021 222 1895

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலையில் தரம் -5 புலமைப் பரிசில் பரீட்சையில் (2012) 04 மாணவர்கள் சித்தி எய்தி உள்ளனர். 23 மாணவர்கள் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர்.

இந்தப் பரீட்சையில் சித்தி எய்திய மாணவர்களையும் அவர்களை வழிநடத்திய அதிபர் திரு.வி.ஸ்ரீகரன் அவர்களையும் ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், பா.அ.சங்கம், மு/ உடையார்கட்டு ம.வி.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**தோற்றம்: 1931.12.15**
**மறைவு: 2011.10.30**

அமரர்

**வினாசித்தம்பி வியாழம்மா**

நாளை 30.10.2012 செவ்வாய்க்கிழமை அன்னாரின் ஓராண்டு நினைவு நிகழ்வு அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. எனவே இந்த அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று அன்னையின் நினைவு நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

(24225)

குடும்பத்தினர்
தொ.பே. 0771043542

**திருமதி கிருபாகரன் (கோமளா)**
4 ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அனைவரையும் கவர்வதற்கு அற்புத வழிகள்

(19)

சினிமாவுக்குப் போனால் அவனைப் போல் டிக்கெட் வாங்க எனக்கு உரிமை இல்லையா?'' என்று அடிக்கடி மனம் வருத்தப்பட்டான்.

இப்படிப்பட்ட நட்பு நீண்டநாள் தொடராது. அதே நேரத்தில் சுரேஷின் செய்கையால், சங்கருக்குத் தாழ்வு மனப்பான்மையும் ஏற்படும் என்பதை சுரேஷ் புரிந்து கொள்ளவில்லை.

ஹாட்டலுக்குப் போகும் போது நமது நண்பர்களோ, விருந்தினர்களோ, அறிமுகமானவர்களோ நமக்குப் பதில் பில்லுக்குப் பணம் கொடுக்க முன் வந்தால் விட்டுக்கொடுக்க வேண்டும். விடாப் பிடியாக பில்லைப் பிடுங்குவது அநாகரிகம் மட்டு மல்ல, அதனால் நட்பு வளராது.



ஏழை எளியவர்கள் கூடத் தமது நண்பர்களுக்கும் மற்றவர்களுக்கும் ஏதாவது உதவி செய்ய வேண்டும், அதனால் மகிழ்ச்சி அடைய வேண்டும் என்று நினைப்பது சர்வசாதாரணம். இதைப் புரிந்து கொள்ள வேண் டும்.

பெஞ்சமின் ப்ராங்க்ளின் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தவர். மாபெரும் அரசியல்வாதி. ராஜதந்திரி. இவருக்கும் மற்றொரு அரசியல் வாதிக்கும் ஏகப்பட்ட போட்டி,பகை. பெஞ்சமினைப் பற்றி அவர் அடிக்கடி தாக்கிப் பேசி வந்தார். மற்றவர்களை மதிப்பதில்லை என்று பேசினார்.

பெஞ்சமின் அந்த அரசியல்வாதியைப் பற்றி தெளிவாகத் தெரிந்து கொண்டார். இவரிடம் இல்லாத ஒரு புத்தகம் அவரிடம் இருந்தது. பெஞ்சமின் அவருடன் தொடர்பு கொண்டு அந்த அரிய புத்தகத்தைப் படிப்பதற்காக இரவல் கொடுக்கும்படி கேட்டார். அவ்வளவுதான். தன்னிடம் உள்ள ஒரு பொருளை மதித்து பெரிதாகக் கேட்கிறாரே என்று மனம் மகிழ்ந்து போனார். அவருக்கு ஒரே பெருமை.

உடனே அவர் புத்தகத்தை எடுத்துக் கொடுத்தவுடன் 'அதை நீங்களே என் பரிசாக வைத்துக் கொள்ளுங்கள்' என்றார்.

அதிலிருந்து இருவரும் நெருங்கிய நண்பர்களாகி விட்டார்கள்.

**பெருமையைக் காப்பாற்றிக் கொள்ளத் தெரிய வேண்டும்**

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவனும் தன் பெருமையைக் காப்பாற்றிக் கொள்ளத் தெரிய வேண்டும். நேரப்படி எதையும் செய்வது பெருமை. எந்த இடத்தில் எதைச் செய்ய வேண்டுமோ, அதைச் செய்தால்தான் பெருமை, கௌரவம்.

ஏழைகள் கூடத் தமது பெருமையைக் காப்பாற்றிக் கொள்ளவே விரும்புகிறார்கள். தமது பெருமையைக் காப்பாற்றிக்கொள்பவர்களை மற்றவர்கள் விரும்புகிறார்கள். உதாரணமாக-

மெக்ஸிக்கோக்காரர்கள் தமது பெருமையைக் காப்பாற்றிக் கொள்வதில் பெயர் போனவர்கள்.

ஒருவன் தன் தலைமீது ஏகப்பட்ட மண்குடங்களைச் சுமந்து செல்வதை ஒரு பணக்காரர் பார்த்தார். அவனைப் பார்க்க அவருக்குப் பாவமாக இருந்தது. அதே நேரத்தில் அவருக்கு ஒரு பானையும் தேவைப்பட்டது. அவர் காரை நிறுத்தினார். அவனை அருகில் அழைத்தார்.

''இவ்வளவு பானைகளைச் சுமந்து செல்கிறாயே? உன் தலையில் இருக்கும் பளுவைக் குறைக்க விரும்புகிறேன். ஒரு சில பானைகள் எனக்குக் கொடுத்துவிடு. எவ்வளவு கேட்கிறாய்?' என்றார்.

'ஐயா, இந்தப் பானைகளை இங்கே விற்பதில்லை' என்றான்.

'விற்பதற்கு இல்லையா? எதற்கு எடுத்துச் செல்கிறாய்?'

'என்னுடைய கடை அதோ அந்தக் கோடியில் இருக்கிறது, அங்கே வந்தால் விற்கிறேன்'

'உன் தலையில் இருக்கும் பளுவைக் குறைக்க எண்ணினேன். நீ ஏன் இவ்வளவு பிடிவாதமாக இருக்கிறாய்?'

''நான், என் கடையில் உட்கார்ந்து உங்களிடம் பேரம் பேசி, விற்பதில்தான் பெருமை அடைகிறேன். அந்தப் பெருமையை விலைக்கு வாங்க நினைக்கிறீர்கள்'' என்றான் அவன்.

மெக்ஸிக்கோக்காரர்கள் இன்றும்கூட எந்தப் பொருளையும் தமது கடையில் உட்கார்ந்து விற்கவே விரும்புகிறார்கள். அவர்கள் ஏழைகளாக இருந்தாலும், கடையில் உட்கார்ந்து பேரம் பேசி விற்கும் போது தாம் மிக முக்கியமானவர்கள் என்றும், தாம் ஒரு வகையில் மன்னர்கள் போலவும் எண்ணு கிறார்கள்.

தலையில் சுமந்து செல்லும் பொருள்களை வழியில் விற்பவர்கள் பிச்சைக்காரர்களுக்கு சமம் என்று எண்ணுகிறார்கள்.

ஒவ்வொருவருக்கும் ஒரு வேலை உண்டு. அந்த வேலை யைத் தவிர வேறு வேலைகளை அவர்கள் செய்யக்கூடாது என்று எண்ணுகிறார்கள். அதாவது-

வீட்டில் பணிப்பெண் வரவில்லை. வீட்டைப் பெருக்கிச் சுத்தம் செய்யவும், துணிகளைத் துவைக்கவும் தினமும் அவள் வருவாள். இன்று வரவில்லை. மனைவி வீட்டைப் பெருக்கி, துணிகளையும் துவைக்கிறாள். வீட்டைப் பெருக்கி குப்பையைத் தன் மகனிடம் கொடுத்து வெளியில் கொட்டும்படி சொல்கிறாள்.

-தமிழ்வாணன்-

(தொ ரும்)

# முறைசாராக் கல்வி ஊடாக மக்கள் பொருளாதாரத்தை அதிகரிக்க முடியும்

## தீவக வலய கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.29

சுயதொழில் முயற்சிக்கான தொழிற்பயிற்சிகளைப் பெறுவதுடன், எழுத்தறிவையும் பெறக்கூடியதான கல்விப் பயிற்சிகளிலும் ஒவ்வொருவரும் கலந்து கொண்டு தமது பொருளாதார வளத்தை அதிகரிக்கவேண்டும் என்று தீவக வலய கல்விப் பணிப்பாளர் ரி.ஜோண் குயின்ரஸ் தெரிவித்தார்.

தீவக வலய முறைசாராக் கல்விப் பிரிவின் கண்காட்சியும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும், புங்குடுதீவு சர்வோதய மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு தலைமை வகித்து உரையாற்றும் போதே ஜோண்குயின்ரஸ் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

பிள்ளைகளின் எதிர்காலம். நம்பிக்கைமிக்கதாக அமைய கல்விப் பிரிவு பலதரப்பட்ட பயிற்சிகளை வழங்குகிறது. இங்கே பெரும்பாலும் மாணவர்கள்தான் இந்தப் பயிற்சிகளில் கலந்துகொண்டிருப்பதைக் காணமுடிகின்றது.

கிராமப்புறங்களில் கிடைக்கக்கூடிய மூலப் பொருள்களைக் கொண்ட பயிற்சி நெறிகளூடாக அவற்றைப் பயன்படுத்தி சிறந்த தரமான உற்பத்திகளை மேற்கொள்ளமுடியும்.

முறைசாராக் கல்வியினூடாக தீவுப்பகுதி மக்கள் வளர்ச்சி காணவேண்டும் என்பதில் எமது வலயம் தனது முறைசாராக் கல்விப் பிரிவின் மூலம் நல்ல முறையில் பயிற்சிகளை வழங்கி வருகின்றன.

இன்று சிறந்த உற்பத்திகளை மேற்கொண்டவர்கள் பரிசில்கள், சான்றிகழ்களைப் பெற்றுக்கொள்வது போன்று, எதிர்காலத்தில் ஏனையோரும் தமது தயாரிப்புக்களின் தரத்துக்காக சிறந்த பரிசில்களைப் பெற்றுக்கொள்ளுவது நிச்சயம் என்றார். (எ-7)

# முதியவர் வாழ்வு உயர்வுக்கான திட்டங்கள் சமூக பாதுகாப்புச் சபையால் அறிமுகம்

## பயன்படுத்திக் கொள்ளுமாறு சபைத் தலைவர் அறிவுரை

யாழ்ப்பாணம், ஒக்.29

முதியவர்களின் வாழ்க்கைக்கும், சமுதாயத்தின் உயர்வுக்குமான திட்டங்களை இலங்கை சமூக பாதுகாப்புச் சபை அறிமுகப் படுத்தியுள்ளது என்று இலங்கைச் சமூக பாதுகாப்புச் சபையின் தலைவர் திருமதி சுகுண ஆரியரட்ண தெரிவித்தார்.

இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் ஓய்வூதியத் திட்டத்தின் இணைப்பாளர்களாகச் சேர்ந்து கொண்ட பயனாளிகளுக்கான வங்கிப் புத்தகங்களை வழங்கும் நிகழ்வு ஊர்காவற்றுறை பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகம் தலைமையில் பிரதேச செயலகத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே திருமதி சுகுண ஆரியரட்ண இவ்வாறு தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவித்ததாவது:-

சமூகபாதுகாப்புச் சபை அரச நிறுவனம் என்பதால் நம்பகத் தன்மை ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. இளமையில் வறுமையைச் சமாளிக்கக் கூடியதாக இருக்கும். முதுமைக் காலத்தில் வறுமையைச் சந்திப்பதெனில் அது மிகவும் கஷ்டமானது. முதுமையின்போது உங்களைப் பாதுகாக்க உங்களிடம் வருமானம் இருத்தல் வேண்டும்.

அரச உத்தியோகத்தர்களைப் பொறுத்தவரை அவர்களுக்கு ஓய்வூதியம் கிடைக்கிறது. அவர்கள் தமது வாழ்க்கையைச் சந்தோஷமாகக் கொண்டு செல்ல முடியும். அரச ஊழியர்கள் அல்லாதவர்களுக்கு அந்த நிலை இருக்காது.

நீங்கள் இப்போது இந்தத் திட்டத்தில் கலந்துகொண்டு ஒரு சேமிப்பை இதனூடாக மேற்கொள்ளும் பட்சத்தில் 60 வயதுக்கு மேல் உங்களுக்கு ரூபா மூவாயிரம், ரூபா ஐயாயிரம் என மாதாந்தம் ஓய்வூதியம் பெறக்கூடியதாக இருக்கும். இதனால் முதுமையிலும் நீங்கள் நிரந்தர மகிழ்ச்சியில் இருக்கக் கூடியதாக இந்தத் திட்டம் உங்களுக்கு உதவுகின்றது.

உங்களுக்கான விவரங்கள் நிதியமைச்சில் பதிவு செய்யப்பட்டு உறுதிப்பத்திரம் வழங்கப்படும். அதை நீங்கள் பாதுகாப்பாக வைத்திருத்தல் வேண்டும்-. என்றார். (எ-7)



நீர்வேலி தெற்கு இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் இடம்பெற்ற உலக உளநல நாள் நிகழ்வில் மாணவர்களின் வில்லுப்பாட்டு நிகழ்வு இடம்பெறுகின்றது. (எ-17)

## முதற் பரிசு



தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவன் பாலசுப்பிரமணியம் நீதுஜன் கல்லூரியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடத்திய சிறுகதைப் போட்டியில் முதற் பரிசை பெற்றுக்கொண்டார். (எ)

# நினைவு தின போட்டி முடிவுகள்

அமரர் த.சிவஸ்ரீ ஞானபண்டிதக் குருக்களின் 30 ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு யாழ். வட்டுக்கோட்டை சித்தன்கேணியில் நடத்தப்பட்ட போட்டியின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

**கோலப்போட்டி**

முதலாம் இடம்-வி.ஜனோசிகா (அம்பாள் முன்பள்ளி), இரண்டாம் இடம்-ஈ.லக்ஷிகா (ஜிப்பிற்றர் முன்பள்ளி), மூன்றாம் இடம்-ச. ரம்மிஜா (கஜமுகன் முன்பள்ளி),

**மாலை கட்டும்போட்டி**

முதலாம் இடம்- [illegible] (சித்தன்கேணி பாலர் பாடசாலை), இரண்டாம் இடம்- [illegible] (சங்கானை இந்து இளைஞர் மன்றம்), மூன்றாம் இடம்-தெ.பிரசாந்தினி (கஜமுகன் முன்பள்ளி-வட்டுக்கோட்டை)

**எழுத்துப்போட்டிப் பரீட்சை**

**கீழ்ப்பிரிவு**

முதலாம் இடம்- மா.சுருஜன் (சித்தன்கேணி மாதர் அபிவிருத்தி முன்பள்ளி), இரண்டாம் இடம்-யோ.தருஷன் (சித்தன்கேணி மாதர் அபிவிருத்தி முன்பள்ளி), மூன்றாம் இடம்-தே.சுவேனியா (சித்தன்கேணி மாதர் அபிவிருத்தி முன்பள்ளி),

**மேல்பிரிவு**

முதலாம் இடம்- கலைவாணி (சித்தன்கேணி மாதர் அபிவிருத்தி முன்பள்ளி), இரண்டாம் இடம்-மு.நந்துஷா(சித்தன்கேணி மாதர் அபிவிருத்தி முன்பள்ளி), மூன்றாம் இடம்-கா.கபினா (சித்தன்கேணி மாதர் அபிவிருத்தி முன்பள்ளி),

**கட்டுரைப்போட்டி**

முதலாம் இடம்- சு.மேகலா (வட்டு மத்திய கல்லூரி), இரண்டாம் இடம்- தே.காயத்திரி(சுழிபுரம் விக்னேஸ்வராக் கல்லூரி), மூன்றாம் இடம்- நா.கமலாஜினி (வட்டு மத்திய கல்லூரி),

**சைக்கிள் ஓட்டப்போட்டி**

முதலாம் இடம்-இ.தர்சன்(சுப்ரா கல்வி நிறுவனம்), இரண்டாம் இடம்-(நி.டிலக்ஷன் (சுப்ரா கல்வி நிறுவனம்), மூன்றாம் இடம்- (பா.பிருந்தாபன்(சுப்ரா கல்வி நிறுவனம்),

**மேல்பிரிவு**

முதலாம் இடம்-த.தனிஸ், இரண்டாம் இடம்- அ.சுலச்சன், மூன்றாம் இடம்- மா.றஞ்சன். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
**தொலைபேசி:**021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789, 021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' -மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' - பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' - கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' - தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' - பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' - மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' - முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' - சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' - 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## ஆட்சியைக் கவிழ்த்த பாண்

1970களில் இலங்கையை தன்னிறைவுகாண வைப்பதாகக் கூறிக்கொண்டு இறக்குமதிப் பொருள்களுக்கு அப்போதைய பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தடைவிதித்திருந்தார். இதனால் உள்ளூர் உற்பத்திகளை மட்டுமே நம்பியிருக்கவேண்டிய நிலை மக்களுக்கு. படித்தவர்களை விடவும் விவசாயம் செய்தோருக்கு மதிப்பு ஏறத் தொடங்கியிருந்தது.

இந்தக் காலத்தில் தான் யாழ்ப்பாணத்து இளைஞர்கள் பலர் வன்னிக்குச் சென்று, காடழித்து விவசாயச் செய்கைகளில் ஈடுபடத் தொடங்கியிருந்தனர். அரசின் நடைமுறைகள் அப்போது இறுக்கமாக இருந்தன. ஒரு மாவட்டத்தில் விளையும் அரிசி போன்றபொருள்களை இன்னொரு மாவட்டத்துக்குக் கொண்டு செல்லவும் தடைவிதிக்கப்பட்டிருந்தது. இதனால் கையில் காசிருந்தாலும் கூட தமக்குப் பிடித்தமான உணவுகளை வாங்கி உண்ண முடியாத நிலை இலங்கை முழுதிலுமுள்ள மக்களுக்கு ஏற்பட்டிருந்தது. அநேகமாக எல்லா வீடுகளிலும் மரவள்ளிக் கிழங்கு கட்டாயத்தனத்துடன் செய்கை பண்ணப்பட்டது. காலை, மாலை வேளைகளில் மரவள்ளிக் கிழங்கே நித்திய ஆகாரமாக மாறியிருந்ததே இதற்குக் காரணம்.

இத்தகைய தன்னிறைவுப் பொருளாதாரத் திட்டம் நாட்டின் அந்நியச் செலாவணியைக் குறைத்ததோடு உள்ளூர் உற்பத்தியையும் ஊக்குவிக்கவே செய்தது. ஆனாலும் மக்களை சொல்லொணாத் துன்பங்களுக்குள் உழலச் செய்தது. ஸ்ரீமாவின் இந்த பொருளாதார நடைமுறை காரணமாக சிங்கள மக்களின் விருப்பத்திற்குரிய உணவான பாணும், பருப்பும் கிடைப்பது அரிதானது. ஏனெனில் பருப்பும், பாணுக்குரிய கோதுமை மாவும் இறக்குமதிப் பொருள்கள். இவற்றை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் கூப்பனுக்கே பெறமுடிந்தது. இதனால் பேக்கரிகள் பலவும் பாண் உற்பத்தியைக் கைவிட்டிருந்தன.

இந்தப் பாணும், பருப்புமே அடுத்துவந்த தேர்தலில் ஸ்ரீமாவின் ஆட்சிக்கு வேட்டுவைத்தன. 'எங்களுடைய பாணையும், பருப்பையும் பிடுங்கி எடுத்தவரை எப்படி ஆட்சியில் அமர்த்த முடியும்?' என்று நினைத்த சிங்கள மக்கள் தாராளமயக் கொள்கையோடு வந்த ஐக்கிய தேசியக் கட்சியை ஆட்சிப் பீடத்தில் ஏற்றினர்.

ஸ்ரீமாவின் மகளான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க 1994 ஆம் ஆண்டு முதன்முறையாக இலங்கையின் ஜனாதிபதியாக முடிசூடிக் கொண்டபோது, பாணின் விலை ஐந்து ரூபாவாக இருந்தது. கோதுமை இறக்குமதிக்கு மானியம் வழங்கி குறைந்த விலையில் மக்கள் பாணை வாங்க வழியேற்படுத்தினார் அவர். தன்னுடைய அம்மாவான ஸ்ரீமாவின் ஆட்சியைக் கவிழ்த்த பாண் விடயத்தில் மகள் சந்திரிகா மிகக் கவனமாகவே நடந்துகொண்டிருந்தார்.

மீண்டும் பாணுக்கும், பருப்புக்கும் நாட்டு மக்கள் அனைவரும் அல்லாட வேண்டிய நிலையை வரலாறு இப்போதும் உற்பவித்திருக்கிறது. கடந்த இரு வாரத்துக்குள் கோதுமை மாவின் விலை இரண்டு தடவைகள் ஏற்றப்பட்டுள்ளது. இதனால் 60 ரூபாவாக இருந்த பாணின் விலை இன்னமும் உச்சத்தை தொடப்போகிறது. குறைந்த விலையில் கிடைக்கும் உணவுப் பண்டம் என்பதால் 'ஏழைகளின் பசிநீக்கி' என்று பாணை மக்கள் செல்லமாக ஒரு காலத்தில் அழைத்தனர். ஆனால் இப்போது அது செல்வந்தர்கள் மட்டுமே உண்ணும் உணவாக மாறியிருக்கிறது.

கண்ணை மூடிக்கொண்டு பொருள்களின் விலைகளை ஏற்றிக்கொண்டிருக்கும் இன்றைய ஆட்சியாளர்கள் அசைக்கமுடியாத ஸ்ரீமாவின் ஆட்சியையே இந்தப் பாண் தகர்த்தெறிந்த வரலாற்றை, ஒரு கணம் நினைத்துப் பார்ப்பது அவர்களுக்கு நலம்.

# நீதி - நிறைவேற்றுத்துறை குளிர் யுத்தம் நீடிக்கிறது

சண்டே ரைம்ஸ் அரசியல் கட்டுரையிலிருந்து

■ 'கோகுலன்'

**நிறைவேற்று நிர்வாகத் துறைக்கும் நீதித் துறைக்கும் இடையிலான குளிர் யுத்தம் உச்சமடைந் துள்ளது. இவை எல் லாவற்றையும் எதிர் கொண்டுள்ள ராஜபக்ஷ நிர்வாகம் அசைந்து கொடுக்காமல் இருந்து வருகிறது.**

வரும் நவம்பர் முதலாம் திகதி உலக நாடுகளின் கவனம் எல்லாம் இலங்கை மீதே திரும்பியிருக்கும். அன்றைய தினம் ஐ.நா. மனித உரிமைகள் சபை ஜெனிவாவில் கூடி மூன்று மணிநேரம் இலங்கையின் மனித உரிமைகள் செயற்பாட்டு முன்னேற்றம் குறித்து ஆராயவிருக்கின்றது.

ஐ.நாவில் அங்கம் வகிக்கும் 193 நாடுகளதும் மனித உரிமை செயற்பாடுகள் பற்றி ஒவ்வொரு நான்கு அல்லது ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு தடவை ஆராய்வதென்பது பொதுவில் ஒரு வழமையான நிகழ்வுதான். ஆனால் இலங்கைக்கு இந்த நிகழ்வானது பல்வேறு காரணங்களுக்காக முக்கியத்துவம் பெறுகின்றது.

இதற்குப் பிறகு மூன்று மாதங்கள் கழித்து மார்ச் மாதம் மீண்டும் மனித உரிமைகள் சபை கூடும் போது கடந்த மார்ச் மாதம் அமெரிக்காவின் ஆதரவுடன் மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அம்சங்களை இலங்கை எந்த அளவுக்கு நிறைவேற்றியிருக்கிறது என்பது ஆராயப்படும். சட்டவிரோத கொலைகளை ஆராயாமல்விட்டது முதற்கொண்டு பல விடயங்கள் இதில் அடங்குகின்றன.

இந்தப் பின்னணியில் இலங்கை தொடர்பான பூகோள பருவகால ஆய்வு கூட்ட நிகழ்வுகளை பல மேற்கு நாடுகள் மிக உன்னிப்பாக அவதானித்து வருகின்றன. இலங்கையின் நீதித்துறையில் அரசின் தலையீடு, மீள் இணக்க செயற்பாடுகளில் அரசு தரப்பில் முன்நகர்வு காணப்படாமை மற்றும் ஊடக சுதந்திரம் போன்றவை பல குற்றச்சாட்டுக்களில் சிலவாகும். இவை மேற்கு நாடுகளால் அவதானிக்கப்படும் விடயங்கள்.

நீதித்துறைக்கும் நிறைவேற்று அதிகாரத் துறைக்கும் இடையிலான குளிர் யுத்தம் சூடு பிடித்துள்ள நிலையில் ஜெனிவா சிக்கலும் அரசை எதிர்நோக்கியுள்ளது. இதேவேளை உயர் நீதிமன்றின் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவின் கணவரும் இலங்கை தேசிய சேமிப்பு வங்கியின் முன்னாள் தலைவருமான பிரதீப் காமினி சுராஜ் காரியவாசம் அரசுக்கு ரூ.391 மில்லியன் நட்டம் ஏற்படுத்தியுள்ளார். மற்றும் ஊழல்கள் தொடர்பாகக் கொழும்பு நீதிவான் நீதிமன்றில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள அவர் முன்னர் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் தலைவராகவும் இருந்துள்ளார்.

பருவகால மீளாய்வுக் கூட்டம் அரசு வட்டாரங்களில் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியுள்ளது. பருவகால ஆய்வுகள் தொடர்பான விவாதங்கள் முடிந்தவுடன் அவை தொடர்பான அறிக்கையொன்றை இந்தியாவின் தலைமையிலான மூன்று நாடுகளின் குழு தயாரிக்கவிருக்கின்றது. கடந்த மார்ச் மாத கூட்டத்தின்போது இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை இந்தியா ஆதரித்திருந்தது நினைவிருக்கலாம்.

அந்த வாக்களிப்பின் காரணமாக இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையிலான உறவுகளில் பெரும் பாதிப்புக்கள் உருவாகின. அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நீக்குவது என்று கடந்த வாரம் இலங்கை அரச தரப்பில் வெளியிடப்பட்ட கருத்துக்கள் இந்தியாவில் பெரும் கவலையை ஏற்படுத்தியிருந்தன. எனவே அடுத்த வருடம் மார்ச்சில் நடைபெறவிருக்கும் ஐ.நா. மனித உரிமை மாநாட்டில் இந்தியாவின் நடவடிக்கை எவ்வாறு இருக்கும் என்பது குறித்து இலங்கை அரசு ஆர்வம் கொண்டிருப்பது இயற்கை. மிகப் பிந்திய நிலையில் நிலைமையை தணிப்பதற்குச் சில முயற்சிகள் எடுக்கப்பட்டிருந்த போதிலும் கொந்தளிப்பு நிலை நீடிக்கவே செய்கின்றது.

### இலங்கை பற்றி 99 நாடுகள் அக்கறை

கடந்த 22 ஆம் திகதி ஆரம்பமான இப்போதைய கூட்டத் தொடர் நவம்பர் 5 ஆம் திகதி வரை நீடிக்கும் பல நாடுகள் தொடர்பான ஆய்வுகள் முடிவுற்றுள்ள நிலையில் இலங்கை மற்றும் பெரு ஆகிய நாடுகள் தொடர்பான ஆய்வுகள் வியாழக்கிழமை நடைபெறவிருக்கின்றன.

இந்த முறை மீளாய்வின்போது இலங்கை தொடர்பாக 99 நாடுகள் கருத்துரை வழங்க முன்வந்திருப்பது சுவாரஷ்யமாகும். இவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு நிமிடம் 22 விநாடிகள் உரை நிகழ்த்த சந்தர்ப்பம் வழங்கப்படவிருக்கின்றது.

ஆய்வுகள் தொடர்பான அறிக்கையை இந்தியா நவம்பர் 5 ஆம் திகதி பி.ப. 3 மணிக்கும் 4 மணிக்கும் இடையில் சபையில் தாக்கல் செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

### பிரதம நீதியரசரின் கணவர் மீது வழக்குத்தாக்கல்

பிரதம நீதியரசரின் கணவர் காரியவாசம் மீது வழக்குத் தொடரப்பட்டிருக்கும் செய்தி நாட்டின் நீதித்துறை பிரமுகர்கள் சந்திக்கும் இடமான ஹல்ப்ஸ்ரொப்பில் எல்லோராலும் விவாதிக்கப்படும் விடயமாக இருந்தது. பிரதம நீதியரசர் மீது நாடாளுமன்றில் குற்றப் பத்திரிகையொன்றை தாக்கல் செய்வதற்கு முயற்சி எடுக்கப்படுவதாகத் தகவல் வந்துள்ள நிலையில் அவர் கணவர் மீதான ஊழல் வழக்குப் பற்றிய செய்தி வெளியாகியுள்ளது. பிரதம நீதியரசர் மீது நடவடிக்கை எடுக்கப்படவிருப்பது பற்றிய செய்தியை சில அமைச்சர்கள் மறுத்துள்ளார்கள். காரியவாசம் மீதும் குற்றப் பத்திரிகை குறித்து தாக்கல் செய்யப்பட்டமையானது சோடிக்கப்பட்டிருக்கிறதோ இல்லையோ நீதித்துறையின் உயர் மட்ட நிலையில் எவரையும் பதவி விலகச் செய்யும் நோக்கமாக இருக்கலாம் என்ற வகையில் உயர் சட்டவாளர்கள் சிலர் கருத்து வெளியிட்டிருக்கிறார்கள். அப்படியான ஒரு நடவடிக்கையில் உயர் நீதித்துறை சார்ந்த எவரும் இறங்க வேண்டிய அவ்சியம் இல்லையென்று நீதித்துறை வட்டாரங்களில் இருந்து தெரிய வருகின்றது. அவர்கள் தொடர்ந்து பதவியில் இருப்பார்கள். பதவி விலகலானது நீதிமன்றத்தில் அவர் குற்றவாளியாக தீர்ப்பளிக்கப்படுவதற்கு முன்னர் அதனை ஒத்துக் கொண்டதாக அமைந்துவிடும் என்கிறார்கள் அவர்கள்.

நிறைவேற்று நிர்வாகத்துறைக்கும் நீதித்துறைக்கும் இடையில் முறுகல் நிலையொன்று ஏற்பட்டமையை வெளியில் கொண்டுவந்தது திவிநெகும சட்டமுன்வரைவுதான். உயர் நீதிமன்றம் கடந்த மாதம் அளித்த ஒரு தீர்ப்பில் அரசமைப்பின் 120 சரத்தை 123 சரத்துடன் சேர்த்து ஆய்ந்த வகையில் நாம் ஒரு தீர்மானத்துக்கு வந்துள்ளோம்.

குறித்த சட்டமுன்வரைவானது மாகாண சபைக்குரிய பட்டியலில் உள்ள விடயங்கள் தொடர்பானது. எனவே அரசமைப்பின் 154 (G) (3) சரத்துக்களின் அடிப்படையில் ஜனாதிபதியால் மாகாண சபைகளின் தீர்ப்புக்கு விடாத நிலையில் சட்டமாக முடியாது என்று தெரிவித்திருந்தது.

செப்ரெம்பர் 18 ஆம் திகதி சட்டமுன் வரைவு நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. அதன் மீதான மீளாய்வு ஒன்றுக்கு சட்டமா அதிபரினால் முயற்சியொன்று முன்னெடுக்கப்பட்டபோதிலும் அது நிறைவேறவில்லை. அதன்மீது உயர் நீதிமன்றின் கருத்தின்படி அரசு சட்டமுன் வரைவை மாகாண சபைகளின் முடிவுக்குப் பாரப்படுத்தியது. வட மாகாணத்தில் மாகாண சபையொன்று செயற்படாத நிலையில் ஆளுநர் அதனை அங்கீகரித்ததனால் ஒரு சர்ச்சை உருவானது.

காரியவாசம் மீதான வழக்கு தாக்கலான சந்தர்ப்பமும் திவிநெகும சட்டமுன் வரைவு தொடர்பான வழக்கை உயர் நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளும் சந்தர்ப்பமும் ஒரே கால அளவில் இடம் பெற்றிருப்பது சட்டத்துறை வட்டாரங்களில் பல்வேறு கருத்துப் பரிமாற்றங்களுக்கு இடமளித்திருந்தது. அவைகளில் ஒன்று என்னவென்றால் லஞ்ச மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் பெயர் குறிப்பிட விரும்பாத உறுப்பினர் ஒருவர் காரியவாசத்தின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதின் பின்னர் நடந்த புலனாய்வுகளில் அதில் வழக்குப் பதிவு செய்வதற்கு ஒன்றுமில்லை என்று குறிப்பிட்டிருந்த விடயமாகும். இந்த விடயம் இன்னமும் மறுத்துரைக்கப்படவில்லை.

### பிரச்சினைகள் ஏராளம்

இந்த வருடம் முடிவடைவதற்கு இன்னும் இரண்டே மாதங்கள் இருக்கும் நிலையில் அரசு ஏராளமான பிரச்சினைகளை எதிர்கொண்டிருக்கிறது. வரவு - செலவுத் திட்டத்தில் சில பல நிவாரணங்கள் அளிக்கப்பட்டாலும் சமீப காலத்தில் அறிவிக்கப்பட்டுள்ள பொருள்களின் விலையேற்றங்களைப் பொதுமக்கள் தாங்கிக் கொள்ள வேண்டித்தான் இருக்கும். ஒரு கையால் கொடுத்து மறுகையால் எடுத்துக் கொள்ளும் நிலைப்பாடுதான். சர்வதேச மட்டத்தில் மனித உரிமைப் பிரச்சினைகள் தலைதூக்கியுள்ளன.

தற்போதைக்கு இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையிலான உறவுகளை வழமைபோல் சுமுக நிலையில் வைத்துக் கொள்ள முயற்சிகள் நடைபெறுவது தெரிகின்றது. நிறைவேற்று நிர்வாகத்துறைக்கும் நீதித்துறைக்கும் இடையிலான குளிர் யுத்தம் உச்சமடைந்துள்ளது. இவை எல்லாவற்றையும் எதிர்கொண்டுள்ள ராஜபக்ஷ நிர்வாகம் அசைந்து கொடுக்காமல் இருந்து வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 'சிவகாமி சபதம்' நாவலில் கூறப்படும் பரத இலக்கணங்கள்

■ கிருபாலினி சோமசுந்தரம்

அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு "புருஷார்த்தங்களையும்" அளிக்கவல்லது என்று வேத காலத்திலும், பிற்காலத்தில் பேரரசர்களாலும் உன்னதமாகப் போற்றப்பட்டது நமது நடனக் கலை. உள்ளக் குறிப்புக்களையும் அவற்றை வெளிப்படுத்துதற்குரிய கண், கை முதலிய உறுப்புக் களின் இயக்கத்தையும் உடையது இந்தக் கலை. இந்தக் கலைகளில் எல்லாம் மிகச் சிறந்ததாகப் போற் றப்படும் பரதக்கலை ஒரு சாத்திர மாகும். இதை எல்லோரும் நினைத் தவுடன் ஆடிவிட முடியாது. இதற்கு இலக்கணம், செய்முறை, சரித்திரம் ஆகிய மூன்றும் உண்டு.

சுமார் இரண்டாயிரம் ஆண்டு களாகப் பரவிக்கிடக்கும் இந்தப் பழம்பெரும் கலைக்குப் பரதர் எனும் முனிவர் இலக்கணம் வகுத் துள்ளார். இவர் எழுதியருளிய 'நாட்டிய சாஸ்திரம்' என்ற சமஸ்கிருத மொழி நூல் நமக்குக் கிடைத்துள்ள, நாடகவியலைப் பற்றிய நூல்களுள் உலகிலேயே மிகத் தொன்மை வாய்ந்தது. இந்த நூல் முப்பத்தியேழு அத்தியாயங் களைக் கொண்டது. பரத முனிவரின் இந்தப் பரதசாஸ்திரக் கடலில் மூழ்கிய ஆயனர் அதனை அடியொற்றியே சிவகாமிக்கு நடனக் கலையைக் கற்பித்ததுடன் சிவகாமியும் அவ்வாறே நன்கு பயின்று கொண்டாள். இருந்தா லும், சிவகாமியின் அபிநயத் தோற்றங்கள் பரத முனிவர் குறிப்பிட்டதை விடச் சிறந்ததாக இருக்கின்றன என்று நாவலாசி ரியர் வெகுதெளிவாக எடுத்துக் கூறியுள்ளார்.

சிவகாமியின் நடனத்தைப் பார்த்துவிட்டு ருத்ராச்சரியார் பிரமித்துப் போய்விட்டார். சிற் பம், சித்திரம், சங்கீதம் ஆகிய கலை களுக்கெல்லாம் நடனக் கலை தான் ஆதாரம் என்பதை அன்று தான் அவர் ஒத்துக்கொண்டார். சிவகாமியின் நடனத்தைப் பார்த்தபிறகு சங்கீதக் கலையில் நான் கற்க வேண்டியது இன்னும் எவ்வளவோ இருக்கின்றது என் றும்; பரத சாஸ்திரத்தைப் பயிலாமல் நான் சங்கீதத்தை எழுதியதே பெரும் பிசகு என்றும்; சிவகாமியின் நடனத்திலே பரத நாட்டிய இலக் கணங்கள் அனைத்தையும் புரிந்து கொண்டேன் என்றும் கூறினார்.

அடுத்து பரதநாட்டியத்தின் உட்பிரிவுகளாக நிருத்தம், நிருத் தியம், நாட்டியம் என்பன விளங் குகின்றன. நிருத்தம் என்றால் அழகிய உடலசைவுகளைக் கொண்ட நடனக் கலையைக் குறிக்கும். உடலழகையும் நெளிவு சுளிவுகளின் குழைவுகளையும் தாளக் கூறுகளின் விசித்திரக் கூர்மையையும் பொறிபறக்கும் பாத ஜாலங்களையும் இசை, அதன் தாளம் இவற்றின் வல்லின மெல்லினங்களையும் உருவகப் படுத்தும் உன்னத கலை நிருத் தம். நிருத்தியம் என்றால் நடன மாகிய நிருத்தமும் அபிநயக் கலையால் கதையை வெளிப் படுத்தும் நாட்டியமும் திகழும் கலையே ஆகும். பாட்டின் பொருளுக்கேற்ப அபிநயக் கை களை இயக்கிய வண்ணம் பாதங்களும் தாளத்துக்கேற்ப இயங்குவது இதன் இயல்பாகும்.

நாட்டியம் என்றால் இசை, நடன அசைவு, வசனம் இவை மூன்றும் இசைந்து நிகழ்த்தப் பட்ட கலைதான் 'நாட்டியம்'. பரத நாட்டிய உட்பிரிவுகளின் வரைவிலக்கணங்களுக்கு அமைய ஆயனர் போட்ட தாளத்துக்கு இசைய சிவகாமி நிருத்தம் ஆட ஆரம்பித்தாள். அந்த வகையில் இவளாடிய நிருத்தம் ஒரே ஆனந்த மயமாகியிருந்தது. சிவகாமியின் ஒவ்வோர் அங்கத்தின் அசை விலும் அந்த ஆனந்தம் பொங்கி வழிந்தது.

ஆஹா! அந்த ஆனந்த நடனத் தில் எத்தனை விதமான நடை கள்? மத்தகஜத்தின் மகோன்னத நடை, பஞ்ச கல்யாணிக் குதிரை யின் சிருங்கார நடை, அன்னப் பட்சியின் அற்புத அழகுநடை, வனம்வாழ் மயிலின் மனமோகன நடை இவ்வளவு நடைகளையும் சிவகாமியின் நடனத்திலே காணக் கூடியதாக இருந்தது. ஆட்டம் ஆரம்பித்து சிறிது நேரத்துக்கெல்லாம் சிவகாமி நடனமாடுவதாகத் தோன்றவில்லை. தன் செயல் என்பதையே இழந்து அவள் ஆனந்த வெள்ளத்தில் மிதந்து கொண்டிருப்பதாகவே தோன்றியது. ஆயனரும் தம்மை மறந்து கால எல்லையெல்லாம் கடந்த காலதீதமான மனநிலைக் குப் போய்விட்டார். சிவகாமி நிருத் தம் ஆடியபோது சுய உணர்வுடன் இருந்தவர் பிக்கு ஒருவர் மட்டும் தான். தந்தையும், மகளும் தம்மையே மறந்து நடனக் கலைக்குள் ஐக்கிய மாகிவிட்டனர்.

பாவம், இராகம், தாளம் ஆகிய மூன்றும் சேர்ந்து செய்யப்பட்ட கலவை பரதக் கலை. அந்த வகை யிலே சிவகாமி தனது நாட்டி யத்திலே பாவம், இராகம், தாளம் எதுவுமே பிசகாது கலையைத் திறம்படச் செய்தாள் என்று கூறப்படுகின்றது. அடுத்து பரத நாட்டியத்துக்கு மிகவும் முக்கிய மானது வாய்ப்பாட்டு. நட்டுவ னார் என்பவர் குருவாகவும், மேடையில் சொற்கட்டுக்களைச் சொல்பவராகவும் இருக்கலாம். அப்படி நோக்கும்போது, சிவகாமி யினுடைய தந்தையே வாய்ப் பாட்டாளராகவும், குருவாகவும், நட்டுவனாராகவும் அநேக பாத் திரங்களைத் தானே ஏற்று மகளை நடனமாட வைத்திருக்கிறார்.

அடுத்து பரதக் கலைக்குப் பக்கவாத்தியம் மிகவும் முக்கிய மானதொன்றாக விளங்குகின் றது. அதாவது மண்டபட்டுக் கிரா மத்திலே மக்களின் அன்புக் கட் டளைக்கு இணங்க நடனமாட ஆரம்பித்தாள். ஆயனரின் கர தாளத்துக்கும், அவர் பாடிய ஸ்வர ஜதிகளுக்கும் இணங்கச் சிவகாமி ஆடினாள். உள்ளூர் மத்தள வித்துவான் ஒருவர் வாழ் நாளில் என்றுமறியாத உற்சாகத்து டன் மத்தளம் வாசித்தார். 'கும் கும்' என்னும் மத்தளச் சத்தத் தோடு கலந்து பாதச் சலங்கை ஒலி "ஜல்ஜல்" என்று சப்திக்கச் சிவகாமி நிருத்தம் ஆடினாள். அந்த நிருத்தத்தில் மின்னலின் விரைவு காணப்பட்டது. மான் குட்டியின் துள்ளல் தோன்றியது. கானமயிலின் சாயல் விளங்கி யது. சில சமயம் பூமியிலே நின்று ஆடினாள். சில சமயம் நட்சத்திர மண்டலபத்துக்கே சென்று விண் மீன்களின் மத்தியில் பம்பரம் போலச் சுழன்று ஆடினாள்.

இவ்வாறு சிவகாமி சுழன்றா டியபோது பார்த்துக் கொண்டி ருந்தவர்களின் கண்கள் சுழன்றன. அரங்க மேடையும் அகல் விளக்கு களும் சுழன்றன. கோயில் சுழன் றது; கோபுரங்கள் சுழன்றன; துங்கானை மத்துத்தங்க ஸ்தூபி சுழன்றது; வானமும் பூமியும் கீழ் மேலாகச் சுழன்றன; சந்திரனும் நட்சத்திர மண்டலங்களும் சுழன்று சுழன்று வந்தன. இவ்விதம் வெவ் வேறு காலப்பிரமாணங்களில் வெவ்வேறு ஜதிகளில் விதம்வித மான நிருத்த வகைகளை ஆடிச்சபை யோரைக் கிறுகிறுக்க வைத்தாள்.

அடிப்படைத் தாளக் கட்டுப் பாட்டுக்கு அமைய மிருதங்க ஜதியும் பாட்டும் ஒன்றிணைய ஒரு சிறந்த நாட்டியப் பெண் தனது கால்களால் அற்புதச் சிக்க லான அமைப்புக்களை நாட்டிய மாக்கும்போது உன்னதமான, உயர் வான, நுட்பமான திறமைகளை நாம் காணக் கூடியதாக இருக்கின் றது. இத்தகைய நுட்பங்கள் அனைத் தும் சிவகாமியினது நாட்டியத் திலே மிகத் தெளிவாகவும் துல் லியமாகவும் விளங்குகின்றன.

அடுத்து தாளம் என்ற சொல் தாண்டவம், லாஸ்யம் ஆகிய இரு சொற்களின் முதல் எழுத்துக் களாலானது. பரத நாட்டியத்தின் தூய நடன அமைவானது நிருத் தம். இதில் உடல், இடை, புயம், கை, கால், முன்னங்கால், தலை, கழுத்து அசைவுகள் ஒரு குறிக்கப் பட்ட சொற்களுக்கும் அமையச் செய்யப்படும். நடன வகைக்கு அத்திபாரமாக விளங்குவது அடவு. அடவும் ஒரு குறிக்கப்பட்ட நிருத்த நிலையாக அமையும். பல அடவுகளின் கோர்வை ஜதி ஆகின்றது. சில அழகான அசைவு களும் கைகளின் பிடிப்பும் இரண்டு மாகச் சேர்ந்து நல்ல அபிநயம் உருவாகிறது. அபிநயத்துக்கான சகல சிறப்பம்சங்களையும் சிவ காமியினது நடனத்திலே மிகை யாகக் காணக் கூடியதாய் இருந்தது.

திருநாவுக்கரசரின் "வடிவேறு திரிசூலம் தோன்றும் தோன்றும்" என்ற பாடலுக்கு அபிநயம் செய்த போது அபிநயத்தின் நான்கு வகை களான ஆங்கிகம், வார்ச்சிகம், ஆஹார்யம், சாத்வீகம் அனைத் தும் அவளிடத்தில் காணக்கூடிய தாய் இருந்தது. தான் அபிநயிக் கும் பாத்திரமாகவே மாறிவிடும் சிவகாமி மேற்கூறிய பாடலில் சாட்சாத் சிவபெருமானாகவே மாறிவிட்டாள் என்று சபையோர் கூறுவதனூடாக அறிய முடிகின்றது.

சிவகாமி நடனமாடவில்லை. நடனக்கலையானது அவளை ஆட்கொண்டு விட்டது என்பதற்கு இயங்க நடனமாடினாள். சிவ காமியின் உள்ளமானது நாட்டியக் கலையின் அம்சங்களாகின்ற தாளங்களையும் ஜதிகளையும் அடவுகளையும் தீர்மானங்களையும் பற்றி எண்ணவில்லை. அந்தத் தாளங்கள், ஜதிகள், அடவுகள் தீர்மானங்கள் எல்லாம் அவை அவை அந்தந்த இடத்தில் ஓடிவந்து சிவகாமிக்குச் சேவை செய்தன. அப்படி பரதநாட்டிய இயல்பை நன்கு கற்று அதில் தேர்ச்சியடைந் திருந்தாள் என்றால் மிகையாகாது.

# எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவிய தீவு... இன்று...?

■ ஊரான்

சப்த தீவுகளின் நடு நாயகமாக விளங்கும் நயினாதீவு. வரலாற்றுச் சிறப்பும் வற்றாத அருள் வளமுடை யது. ஒன்றரை மைல் அகலமும் இரண்டரை மைல் நீளமும் ஆறு மைல் சுற்றளவும் உடையது இந்தத் தீவு. இலக்கியச் சிறப்பையும் அன்ன தானப் பெருமையையும் தன்னகத்தே கொண்டது. தென் மேற்கில் நெடுந் தீவும், வடக்கில் அனலைதீவும் அமைய நடுவண் அமைந்துள்ளது நயினாதீவு, நாக நயினாதீவு எனவும், நாகேச்சரம் எனவும், மணிபல்லவம் என்றும் சிங்களத்தில் நாகதீப என்றும் இத்தீவு அழைக்கப்படுகின் றது. 'ஹாரிலம்' என்பது ஒல்லாந்தர் இதற்கு இட்ட பெயர் ஆகும்.

கடல் கோள்களின் போதே தீவுகள் ஏற்பட்டன என்பர் புவியியலாளர்கள். தனித்தனி நிலத் துண்டுகளாக இருக்கும் தீவுகள் ஒன்றுடன் ஒன்று நிலத் தொடர்பு இல்லாதிருப்பதனால், அவற்றின் அபிவிருத்தி பாதிப்புக் குள்ளாகியுள்ளது. நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்டிருப்பதால் இதற் கான தரை வழித் தொடர்பு இல்லை. ஆபத்து நிறைந்த கடல் வழிப் பய ணத்தையே மக்கள் மேற்கொண்டு வருகின்றனர். துறைமுக இடிபாடுகள் படகுகளின் சீர் கேடுகள், மேலங்கி என்பன பிரயாணத்தை மேலும் கடினமாக்குகின்றது. 1960 ஆம் ஆண்டு 50 சதமாக இருந்த படகுக் கட்டணம் இப்பொழுது 30 ரூபா வரை உயர்ந்துள்ளது. நயினாதீவுக்கு நாளாந்தம் 5000 இந்து, பௌத்த யாத்திரிகர்கள் வந்து போகிறார்கள். பாதை சேவை-மிதவை சேவை பிரயாணத்தை சீர் செய்யும் படகு முதலாளிகளின் மேலாதிக்கத்தினால் இந்த சேவைகளை அரசு பிற்போட்டுக் கொண்டே போகின்றது. மக்களு டைய நலனுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்பதை சுட்டிக்காட்ட வேண்டிய தேவை இருக்கின்றது.

தீவுகள்-யாழ்ப்பாணக் குடாநாடு சுண்ணக் கல் செறிந்த பூமி யாகும்-கட்டாந்தரையாகும் நயி னாதீவின் மண் வளம் உட்பகுதியில் தரை மண்ணுமாக கரையோரமாக மணல் மண்ணும் காணப்படுகின்றது. இது வளமற்ற மண், நீர் வளம் உவர் தன்மை உடையது குடி தண்ணீருக்கே மக்கள் கஷ்டப்படுகின்றார்கள். இம் மண் வளத்தையும் நீர் வளத்தையும் கொண்டு விவசாயம் செய்வது கல்லில் நார் உரிப்பது போலாகும். சப்பாத்தி முள்ளுக் கூட விளையாத பூமியில் விவசாயம் செய்வது என்பது சாத்திய மற்றது. பல ஆண்டுகளாக மிள காய், வெங்காயம், புகையிலைச் செய்கை என்பன கைவிடப்பட்டுள்ளன.

கடற்கரையோரமாக வசிக்கும் மக்கள்-மீனவர். இவர்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுகின்றனர். மூலவளம் இல்லாதால் மீன்பிடியும் சோபிக்க வில்லை. கரையோர மீன்பிடியே நடைபெறுகின்றது. இது உள்ளூர் தேவைக்கே போதுமானதன்று கஷ்ட மான சூழல் மக்களை கவர்ந்திழுக் கிறது. இருந்தும் உள்ளூர் வாசிகள் அங்கே இருந்து தானே ஆக வேண்டும்.

முன்னர் 5000 மக்களாக இருந்த குடித்தொகை இப்போது 500 ஆக சுருங்கி விட்டது. இதற்கு உள்ளூர் வாசிகளின் இடப்பெயர்வு-யாழ்ப் பாணம், கொழும்பு, பிற மாவட்டங் களுக்குரிய இடப்பெயர்வு. [illegible]-கல்வி, உத்தியோகம், தொழில் வெளிநாடு இவற்றிற்கான இடப்பெயர்வு என்ப வற்றால் குடிச் செறிவு மிகவும் சுருங்கி விட்டது. பாலை வனக் குடியிருப்பு போலாகிவிட்டது. "அபிவிருத்தியை உண்டு பண்ணுங்கள் மக்கள் குடி யேறுவார்கள். மக்களைக் குடியேற் றுங்கள் அபிவிருத்தி ஏற்படும்" இரண்டும் கெட்டான் நிலையிலேயே தீவுகள் உள்ளன. ஒரு சமயம் சிங்கள மக்களைக் கொணர்ந்து இங்கு குடியேற்றினாலும் ஆச்சரியப்படு வதற்கில்லை. விவசாயம் மீன்பிடித் தொழில், கைத்தொழில் என்பன சாத்தியமற்ற நிலையில் மக்களின் வாழ்வாதாரம் தான் என்ன? அரசுத் தொழில், தனிப்பட்ட தொழில், வெளி நாட்டு வேலை வாய்ப்பு என்பன பொருள் வரவுக்கான மார்க்கங்களாக இருக்கின்றன. தீவுப்பகுதி பொருளா தாரம் மணி ஆடர் பொருளாதாரம் என முன்னர் அழைக்கப்பட்டது. வெளியிடங் களில் அரசு உத்தியோகம் பார்த்தவர் களும், தொழில் செய்தவர்களும் மாத இறுதியில் தமது வீட்டிற்கு காசுக்கட் டளை அனுப்பியதால் அதனைக் கொண்டு குடும்பத்தவர் சீவியம் நடத் தினர். இத்தகைய ஒரு 'தங்கியி ருத்தல்' நிலைதான் இப்பொழுதும் தொடர்கின்றது.

முன்பு நயினாதீவு கல்வியில் சிறந்து விளங்கியது. கல் எறிந்தால் அது ஆசிரியர் மீது தான் படும். என்ற படி வீட்டிற்கு ஒரு ஆசிரியர் இருந்தார். ஆனால் அந்த நிலை மாறிவிட்டது. வேறு துறை வேலை வாய்ப்பு. ஆசிரியத் தொழிலில் நாட்டமின்மையை ஏற்படுத்தி விட்டது.

முன்னர் வணிகப் பாதையில் நயினா தீவு இருந்தது. மேற்கு கரையோர படகுத் துறை என்ற துறையிருந்தது. வணிகச் செழிப் புடன் விளங்கிய இந்தத் தீவு பொலி விழந்து ,நலிவுற்றுக் கலியுற்றது போல காணப்படுகின்றது. சுனாமி இச் சிறு தீவைச் சுலபமாக ஏப்பம் விட்டிருக்கும். அப்போது இந்தத் தீவு, வரைபடத்தில் இல்லாமல் போயிருக்கும். ஆர்ப்பரித்த கடலை அம்பிகையின் அருள் வளம் அடங்கிப் போகச் செய்து எமக்கு தெம்பு தந்து நம்மடியார்க்கு நலம் செய்தது.

அம்பிகையின் அருள் வளத்தால் நயினாதீவு மீள எழும் என்பதில் ஐய மில்லை. எந்தையும் தாயும் இருந்து மகிழ்ந்து குலாவிய எம் தீவை கையில் வந்தனை செய்து அதனை முந்தைய நிலைக்கு உயர்த்துவோம் வாரீர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல் மாணாக்கன் இலக்கணம்

ஒரு குளத்தில் மூன்று மீன்கள் நண்பர்களாய் வசித்து வந்தன. அந்த மூன்று மீன்களும் நண்பர்களாய் இருந்த போதிலும் குணங்களில் வேறுபட்டிருந்தன. முதல் மீன் முன்னெச்சரிக்கை குணம் படைத்தது. இரண்டாவது மீன் சமயோசித புத்தி படைத்தது. மூன்றாவது மீன் மந்த புத்தியைக் கொண்டது. அந்தக் குளத்தில் நீர் வற்றிப் போயிருந்தது. அங்கு வந்த செம்படவர்கள் நாளைக்கு வலை போட்டு குளத்தில் உள்ள எல்லா மீன்களையும் பிடித்துவிட வேண்டும் என்று பேசிக் கொண்டனர்.

அதைக்கேட்ட முன்னெச்சரிக்கையுள்ள மீன் ஏனைய இரு நண்பர்களைப் பார்த்து , ''நாளைக்கு நம் அனைவரையும் வலை போட்டுப் பிடிக்கப் போகிறார்கள். ஆகவே நாம் இப்போதே தப்பித்துக் கொள்ள வேறு குளத்துக்குச் சென்று விட வேண்டும்'' என்று கூறியது.

அதைக் கேட்ட சமயோசித புத்தி படைத்த மீன், ''அதற்காக நாம் அவ்வளவு அவசரப்படத் தேவையில்லை. ஆபத்து வரும்போது பார்த்துக் கொள்ளலாம்'' என்று சொல்லியது.

இதைக் கேட்ட மந்த புத்தி படைத்த மீன் , ''நீங்கள் இருவருமே வீணாக அலட்டிக் கொள்கிறீர்கள்... நாளைக்கு செம்படவர்கள் வரப்போவதே இல்லை என்று அலட்சியமாகக் கூறியது.

தன் நண்பர்களின் பேச்சைக் கேட்பதில் பிரயோசனம் இல்லை என்பதை அறிந்து கொண்ட முன்னெச்சரிக்கை குணம் படைத்த மீன், தன் முழுப்பலத்தையும் பயன்படுத்தி மேலே துள்ளியது. அதன் காரணமாக பக்கத்தில் இருந்த நீரோடும் கால்வாயில் அது விழுந்தது. அந்தக் கால்வாய் வழியே சென்று வேறு ஒரு நீர் நிறைந்த குளத்தில் அதில் சேர்ந்து கொண்டது.

மறுநாள் செம்படவர்கள் சொன்னபடியே வலையை எடுத்துக் கொண்டு குளத்துக்கு அருகில் வந்து சேர்ந்தார்கள். வலையை விரித்துக் குளத்தில் இருந்த எல்லா மீன்களையும் பிடித்தார்கள். அப்போது சமயோசித புத்தி கொண்ட மீன் வலையில் தான் மாட்டிக் கொண்டதுமே பாவனை செய்து வலையை தன் வாயால் கவ்விப் பிடித்தது. வலையை இழுத்த செம்படவர்கள் அதில் இருந்த சேற்றை கழுவும் பொருட்டு, வேறு ஒரு வலையை நீர் நிறைந்த குளத்தை அடைந்து அலசத் தொடங்கினர்.

அப்போது சமயோசித புத்தி படைத்த மீன் தான் கௌவியிருந்த வலையை விட்டுக் குளத்து நீரில் மூழ்கி தப்பிப் பிழைத்தது. மந்த புத்தி படைத்தமீன் செம்படவர் வலையில் சிக்கி அழிந்தது.

இந்த மூன்று மீன்களின் கதை உணர்த்துவது என்ன? முன்னெச்சரிக்கை குணம் கொண்டவர்களும் , சமயோசித புத்தி கொண்டவர்களும் எவ்வளவு ஆபத்துக்கள் தங்களை எதிர் நோக்கி வந்த போதும் அவற்றிலிருந்து தப்பி விடுவார்கள். ஆனால், மந்த புத்தி கொண்டவர்கள் மற்றவர்கள் சொல்லும் அறிவுரைகளையும் கேட்க மாட்டார்கள். தாங்களாகவும் தப்பிப் பிழைக்க மாட்டார்கள் ஆகவே, அவர்கள் அழிந்து போய்விடுவார்கள் என்பதை இக்கதை உணர்த்துகிறது.

இந்தக் கதை மாணவ மணிகளுக்கும் ஒரு நல்ல படிப்பினையை உணர்த்துவதாக உள்ளது. முன்னெச்சரிக்கை குணம் கொண்ட மாணவர்கள் பரீட்சை வருவதற்கு பல காலம் இருக்கும் போதே ஒவ்வொரு பாடத்தையும் முழுக் கவனத்துடன் புரிந்து கொண்டு தயாராகி விடுவார்கள். அத்தகைய மாணவர்கள் பரீட்சை நாளில் எவ்வித அச்சமும் இன்றி பரீட்சையை எழுதி முடிப்பார்கள்.


அடுத்த வகையாகிய சமயோசித புத்தி படைத்த மாணவர்கள் பாடங்களை முன்கூட்டியே படிக்காமல் பரீட்சை நெருங்கும் சமயத்தில் முழுமூச்சுடன் படித்து பரீட்சைக்குச் செல்வார்கள். இத்தகைய மாணவர்கள் முழு அளவில் வெற்றி பெற முடியாவிட்டாலும் தேர்ச்சி பெறுகிற அளவுக்கு மதிப்பெண்களைப் பெற்றுத் தேறிவிடுவார்கள்.

அதற்கு அடுத்து வரும் மந்த நிலை கொண்ட மாணவர்கள் முன்கூட்டியே படிக்கவும் மாட்டார்கள். பரீட்சை நெருங்கும் சமயத்திலும் அலட்சியமாகவே இருப்பார்கள். ஏதோ கடமைக்குப் பாடநூல்களைப் புரட்டிப் பார்த்து விட்டுத் பரீட்சை நிலையத்துக்குச் செல்லும் இவர்கள் தோல்வியினைத் தழுவுவார்கள். முன்னெச்சரிக்கை குணம் படைத்த மாணவனே முதல் மாணாக்கனுக்கு உரிய தகுதியினைப் பெறுவான்.

ஆகவே, இந்த மூன்று குணங்களில் முன்னெச்சரிக்கை குணமே மிகவும் சிறந்தது என்பதை மாணவ மணிகள் தெரிந்த கொள்ள வேண்டும். முன்கூட்டியே ஆயத்தம் செய்கிறவர்கள் தான் இந்த உலகில் மகத்தான வெற்றி வீரர்களாக வலம் வருவார்கள்.

ஒரு மெழுகுவர்த்தியைச் செய்ய வேண்டுமானால் எவ்வளவு பிரயத்தனம் செய்ய வேண்டும் என்பது உங்களுக்கு தெரியும். ஆனால் மெழுகுவர்த்தியை ஏற்றுவதற்கு ஒரு விநாடி நேரமே போதும். பாடநூல்களில் உள்ள விடயங்களை முன் கூட்டியே நன்கு படித்து கிரகித்து வைத்துக் கொள்கிறவர்கள் பரீட்சை நாளில் ஒரு விநாடியில் மெழுகுவர்த்தியை ஏற்றுவது போல் வெகு எளிதில் தேர்வை எழுதி முடித்து விடுவார்கள்.

ஆகவே , ஆயத்தமே அனைத்து வெற்றிகளுக்கும் அடிப்படைக் காரணம் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். கதையில் வந்த முன்னெச்சரிக்கையுள்ள மீன் ஆபத்து வரப்போகிறது என்று தெரிந்ததும் உடனே துள்ளிக் குதித்துக் கால்வாய் வழியே சென்று தப்பியது. ஆனால் சமயோசித புத்தி படைத்த மீன் 'கரணம் தப்பினால் மரணம்' என்கிற நிலையில் வலையைக் கௌவிப் பிடித்துத் தப்பியது. அதே போல் பரீட்சை சமயத்தில் விழுந்து, விழுந்து படிக்கும் மாணவர்கள் தேர்ச்சி பெறாமலும் போகலாம். ஆகவே மேலே குறிப்பிட்ட மூன்று குணங்களில் முன் னெச்சரிக்கை குணமே சிறந்தது என்பதை அறிந்து கொள்ள முடியும்.



பரமஹம்ஸ ஸ்ரீமத் பரத்வாஜ் ஸ்வாமிகள்

# தடைகளைத் தாண்டி சாதனை படைத்து வரும் மன்னார் நானாட்டான் மகா வித்தியாலயம்



எஸ்.ஆர்.லெம்பேட்

மன்னார் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள பாடசாலைதான் மன்- நானாட்டான் மகா வித்தியாலயம். இந்தப் பாடசாலை பல்வேறு தடைகளையும் தாண்டி பல்வேறு வசதிக் குறைபாடுகளுடனும் இயங்கி வந்த போதும் தற்போது குறித்த பாடசாலை மாவட்டத்தில் பெயர் சொல்லக்கூடிய வகையில் கல்வி, விளையாட்டு, கலை நிகழ்வுகள் போன்ற துறைகளில் இன்று சாதனை படைத்து வருகின்றது.

**பாடசாலையின் வரலாறு**

1901 ஆம் ஆண்டு அடைக்கல அன்னை தேவாலயத்தின் தென்புறத்தில் கிடுகினால் வேயப்பட்ட சிறு பாடசாலை ஒன்று அமைக்கப் பட்டது. 1938 ஆம் ஆண்டு இந்தப் பாடசாலை இயங்க முடியாத நிலை ஏற்பட்டது. 1940 ஆம் ஆண்டு தற்போதைய இடத்தில் 3 அடிச்சுவர் வரை தூண் எழுப்பி தகரத்தினாலான கூரையுடன் பாடசாலை அமையப்பெற்றது.

1950 ஆம் ஆண்டு முதன் முதலாக 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 3 மாணவர்கள் சித்தி பெற்றமை இந்தப் பாடசாலையின் முதல் மைல் கல்லாகும். அந்த ஆண்டே குறித்த பாடசாலை தரம் 8 வரை தரமுயர்த்தப்பட்டது.

1960 ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தரம் வரை வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. அதுவரை காலமும் கத்தோலிக்கத் திருச்சபையின் கீழ் அந்தப்பாடசாலை நிர்வகிக்கப்பட்டு வந்தது.

**1950 ஆம் ஆண்டு முதன் முதலாக 5 ஆம் ஆண்டு புலமைப்பரி சில் பரீட்சையில் 3 மாணவர்கள் சித்தி பெற்றமை இந்தப் பாடசாலையின் முதல் மைல் கல்லாகும். அந்த ஆண்டே குறித்த பாடசாலை தரம் 8 வரை தரமுயர்த்தப்பட்டது. 1960 ஆம் ஆண்டு க.பொ.த.சாதாரண தரம் வரை வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. அதுவரை காலமும் கத்தோலிக்கத் திருச்சபையின் கீழ் அந்தப் பாடசாலை நிர்வகிக் கப்பட்டு வந்தது.**

1961 ஆம் ஆண்டு அரச பொது நிர்வாகத்தின் கீழ் இந்தப் பாடசாலை கொண்டு வரப்பட்டதினால் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையாகப் பெயர் பெற்றது.

1971 ஆம் ஆண்டு 'வாழ்கலை எம்பதி' என்னும் பாடசாலைக்கீதம் இயற்றப்பட்டது. 1972 ஆம் ஆண்டு க.பொ.த. உயர் தரம் வரை உயர்த்தப்பட்டு கலை,வர்த்தகத்துறை ஆகிய வகுப்புக்கள் அறிமுகப் படுத்தப்பட்டன.

1991 ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட போர் காரணமாக மக்கள் இடம்பெயர்ந்த போது இந்தப்பாடசாலை பல்வேறு இடர்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

1994 ஆம் ஆண்டு குறித்த பாடசாலையின் அதிபராக திருமதி ச.சந்தாம்பிள்ளை அவர்கள் கடமையேற்று பாடசாலையின் புனரமைப்புப் பணிகளில் ஈடுபட்டார்.

1997 ஆம் ஆண்டு இந்தப் பாடசாலையின் அதிபராக திரு.திபுசியஸ் பீரிஸ் பொறுப்பேற்றார். அவரின் காலத்தில் இந்தப் பாடசாலை கலைத்திட்ட விருத்தியில் வளர்ச்சி பெற்றமை சிறப்பு அம்சமாகும்.

1999 ஆம் ஆண்டு இந்தப் பாடசாலையின் அதிராக தி.ஜெகநாதன் பொறுப்பேற்றார். இந்தக்காலகட்டத்தில் இந்தப்பாடசாலை பௌதிக வளர்ச்சியிலும்,கலைத்திட்ட வளர்ச்சியிலும் மிளிர்ந்தமை குறிப்பிடத்தக்கது.

2009 ஆம் ஆண்டு முதல் இன்று வரை இப் பாடசாலையின் அதிபராக அருட்சகோதரர் எஸ்.இ.றெஜீனொல்ட் எப்.எஸ்.சி கடமையாற்றி வருகின்றார். 2009 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 8 ஆம் திகதி அந்தப் பாடசாலையின் அதிபராக அவர் பொறுப் பேற்றார். அன்று முதல் இன்று வரை இந்தப் பாடசாலை பல்வேறு சாதனைகளுக்கும் சவால்களுக்கும் முகம் கொடுத்து வருகின்றது.

**விளையாட்டுச் செயற்பாடுகள்**

2010 ஆம் ஆண்டு முதல் தற்போது வரை இந்தப்பாடசாலையின் விளையாட்டுச் செயற்பாடுகள் மிகச்சிறப்பான முறையில் இடம் பெற்று வருகின்றது. இந்தப்பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டிகள் மிகவும் சிறப்பான முறையில் இடம் பெற்று வருகின்றன.

ஆண்,பெண் இருபாலாரும் கலந்து கொண்டு ஒற்றுமையுடன் விளையாட்டுப்போட்டிகளில் பங்கெடுப்பதனை காணக்கூடியதாக உள்ளது. குறித்த பாடசாலை மாணவர்கள் மாவட்ட மட்டத்தில்,மாகாண மட்டத்திலும்,தேசிய மட்டத்திலும் பல்வேறு சாதனைகளைப் படைத்துள்ளனர்.

**தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை**

இந்தப் பாடசாலையில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் ஒவ்வரு வருடமும் பல மாணவர்கள் சித்தியடைகின்றனர். பரீட்சைக்குத் தோற்றுகின்ற மாணவர்களில் பலர் இவ்வாறு சித்தியடைகின்றனர். கடந்த காலங்களை விட 2010 ஆம் ஆண்டு முதல் இந்த முன்னேற்றம் இந்தப் பாடசாலையில் காணப்படுகின்றது.

**தமிழ்த் தினப்போட்டி**

கடந்த வருடங்களை விட தற்போது எமது பாடசாலை மாணவர்கள் வலய மட்ட தமிழ் தினப்போட்டியில் ஆக்கம் எழுதுதல், கட்டுரை வரைதல், இலக்கியம் நயத்தல், குறுநாடக ஆக்கம், இலக்கணப்போட்டி, கவிதை ஆக்கம்,இலக்கிய நாடகம்,திறந்த போட்டி,வாசிப்பு,ஆக்கத்திறன் வெளிப்பாடு உட்பட பல நிகழ்வுகளில் பங்குபற்றி வெற்றி பெற்றுள்ளனர். அவர்கள் வலய , மாவட்ட மட்டம் மற்றும் மாகாண மட்டம் வரை சென்றுள்ளனர்.

**கிறிஸ்தவ சமய நிகழ்வுகள்**

இந்தப் பாடசாலையின் ஆன்மீக செயற்பாடுகளுக்கு வலுவூட்டும் முகமாக இலக்கிய மன்றம் இயங்கி வருகின்றது.இதற்காக பொறுப்பாசிரியர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். இம்மன்றம் மாதம் ஒரு தடவை கூடி தங்கள் நிகழ்வுகளை நடத்தி வருகின்றது. தவக்காலத்தில் ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் விசேட ஆராதனைகளும் நடாத்தப் படுகின்றது. ஒவ்வொரு வருடமும் ஒளிவிழா நிகழ்வு மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. தரம் 11 தொடக்கம் 13 வரையான மாணவர்களுக்கு தியா னங்களும் இடம் பெற்று வருகின்றது.

**இந்து மன்றம்**

இங்கு கல்வி கற்கின்ற இந்து மாணவர்களின் ஆன்மிகம், ஒழுக்கம் ஆகிய செயற்பாடுகளை மேலும் வலுவூட்டும் விதமாக இந்து மன்றம் இயங்கி வருகின்றது. இந்தமன்றம் வாணி விழா நிகழ்வினை மிகவும் சிறப்பாக வருடா வருடம் கொண்டாடி வருகின்றது.

இதன் மூலம் மாணவர்களின் கலை ஆற்றலையும், தலைமைத்துவத் திறனையும் வளர்க்கக் கூடியதாக உள்ளது. தினந்தோறும் பாடசாலையில் காலை வழிபாட்டுக்கு மாணவர்களைத் தயார் படுத்தி ஆன்மிக செயற்பாட்டை வளர்ப்பதில் இந்த மன்றம் பெரும் உறுதுணை புரிகின்றது. (தொடரும்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மாதா சொரூபத்தை உடைத்தவர்களை கைது செய்யாவிடில் விபரீதம் ஏற்படலாம்

## எச்சரிக்கிறார் திருமலை நகரசபைத் தலைவர்

திருகோணமலை,ஒக்.29

திருகோணமலை, பாலையூற்று புனித லூர்த்து அன்னை ஆலயத்தில் அமைக்கப்பட்டிருந்த மாதா சொரூபத்தை தாக்கிய விஷமிகளை அரசு உடன் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும். இல்லாவிடின் பொறுமையின் எல்லையில் இருக்கும் தமிழ் பேசும் மக்கள் அரசுக்கு எதிராகக் கிளர்ந்தெழுவர். பெரும் விபரீதங்களையும் அரசு சந்திக்க வேண்டிவரும்.

-இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திருமலை நகரசபைத் தலைவர் க.செல்வராஜா தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

திருகோணமலை, பாலையூற்று புனித லூர்த்து அன்னை ஆலயத்தின் முன்புறமாக அமைக்கப்பட்டிருந்த மாதா சொரூபம் விஷமிகளினால் உடைத்து சேதமாக்கப் பட்டுள்ளது.



இந்தச் சம்பவம் தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனால் பொறுமையின் விளிம்பில் மக்கள் உள்ளனர்.

1974ஆம் ஆண்டு நிறுவப்பட்ட புனித லூர்த்து அன்னை சொரூபம் போர் காலத்தில்கூட எவ்விதப் பாதிப்பும் இன்றி இருந்தது. தற்போதைய அமைதிச் சூழலில் இவ்வாறான இடர் இடம்பெற்றமை மக்களுக்கு ஆழ்ந்த கவலையை ஏற்படுத்தியுள்ளது என்று பங்குத் தந்தை அருட்திரு.அன்றியாஸ் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். இவரின் இந்தக் கருத்திலிருந்து இந்தச் சம்பவம் தொடர்பில் மக்களின் கவலையை அறிந்துகொள்ளலாம்.

இதேவேளை, முஸ்லிம் மக்களின் மதத் தலங்களின் மீதும் தொடர்ந்து தாக்குதலும், அழிப்பு நடவடிக்கைகளும் இடம்பெற்று வருகின்றன. ஆனால், இந்தச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்களை பொலிஸார் இன்னும் கைது செய்யவில்லை. இது தமிழ், முஸ்லிம் மக்களிடத்தில் பல சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது.

நாட்டில் ஒரு சிறு திருட்டு நடந்தால்கூட அதனுடன் தொடர்புடையவர்களை உடன் கைது செய்யும் பொலிஸார் ஏன் தமிழ், முஸ்லிம் மக்களின் மத தலங்கள் மீது கை வைக்கும் விஷமிகளை இன்னும் கைது செய்யாமல் உள்ளனர் என்று மக்கள் சந்தேகிக்கின்றனர்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் அரசும் இதுவரை எந்த நடவடிக்கைகளும் எடுக்கவில்லை. இந்நிலையில், அரச உயர்பீடத்தின் உத்தரவின் பேரில் விஷமிகள் தமிழ். முஸ்லிம் மத தலங்கள் மீது தாக்குதல் நடத்துகின்றனர் என்று மக்கள் கருதுகின்றனர்.

எனவே, தமிழ், முஸ்லிம் மக்களின் மதத் தலங்கள் மீது கைவைக்கும் விஷமிகளை அரசு உடன் கைதுசெய்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும். இல்லாவிடின் பொறுமையின் எல்லையில் இருக்கும் தமிழ் பேசும் மக்கள் அரசுக்கெதிராகக் கிளர்ந்தெழுவர்.- என்றார். (ச)

## மாநகர சபையில் மீளாய்வு கூட்டம்



எருவில்,ஒக்.29

மட்டக்களப்பு மாநகர சபையின் மீளாய்வு கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலை மட்டக்களப்பு மாநகரசபை சபா மண்டபத்தில் நடைபெற்றது.

மார்கா நிறுவனத்தின் தலைவர் அசோக குணவர்த்தன தலைமையில் நடைபெற்ற இந்தச்செயலமர்வில், மாநகர முதல்வர் திருமதி சிவகீதா பிரபாகரன், பிரதி முதல்வர் ஜோர்ஜ்பிள்ளை, மாநகர ஆணையாளர் சிவநாதன், கணக்காளர் திருமதி சிவராஜா உட்பட பலரும் கலந்து கொண்டனர்.


இந்த நிகழ்வில் வரவு - செலவுத்திட்ட வெளிப்படைத்தன்மை குறித்த கலந்துரையாடல்கள் செயலமர்வுகளுடன், எதிர்காலச் செயற்பாடுகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டன. (ச-31)



மட்டக்களப்பு பத்திரகாளியம்மன் ஆலயத்தில் தீ மிதிப்பு உற்சவத்தில் பக்தர்கள் ஈடுபட்டனர். (31)

## கடமை தவறும் ஊழியர்களை இடமாற்றாவிடில் போராட்டம்

### அட்டாளைச்சேனை பிரதேசசபை உறுப்பினர்



அட்டாளைச்சேனை,ஒக்.29

அட்டாளைச்சேனை பிரதேச சபையில் பொதுமக்களுக்கான கடமைகளை உரிய முறையில் நிறைவேற்றத் தவறும் உத்தியோகத்தர்களை உடனடியாக இடமாற்றம் செய்யவேண்டுமென்று அட்டாளைச்சேனை பிரதேச சபையின் மு.கா. உறுப்பினர் எஸ். எல். முனாஸ் தெரிவித்தார். அட்டாளைச்சேனை பிரதேச சபையின் மாதாந்த அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடமை தவறும் உத்தியோத்தர்களை இடமாற்றம் செய்யாதுவிட்டால் பிரதேச சபைக்கு முன்னால் மக்களை ஒன்று திரட்டி போராட்டம் நடத்தி, தகுதியற்ற உத்தியோகத்தர்களை அகற்ற வேண்டி ஏற்படும்.

அரச நிர்வாகம் என்பது மக்களின் தேவைக்காகவே உள்ளது. நிர்வாகத்தின் தேவைக்கு மக்கள் இல்லை. நிர்வாகத்தில் உள்ளவர்கள் தமது தேவைக்காக மக்களை மாற்றி அமைக்க முடியாது. ஆனால், சில அரச உத்தியோகத்தர்கள், தாங்கள் நினைப்பதே சட்டம் என்பது போல் பணியாற்றி வருகின்றார்கள். இதை அனுமதிக்க முடியாது.

இந்த சபைக்கு மக்களின் வாக்குகளைப்பெற்று அவர்களின் பிரதிநிதியாக நான் வந்துள்ளேன். எனவே, இங்கு நடப்பவற்றைக் கவனிக்காது நானும் எனது வேலையும் என்று என்னால் இருக்க முடியாது. எனக்கு வாக்களித்த மக்களுக்கு நான் பதில் கூற வேண்டும். இந்தப் பிரதேச சபையில் என்ன நடைபெறுகிறது என்று தெரியாமல் , ஒவ்வொரு மாத அமர்வுக்கும் வருகை தந்து, இங்கு இடம்பெறும் செலவு விவரங்களை ஏற்றுக் கொண்டதாகக் கூறி கையொப்பம் வைத்துவிட்டுச் செல்லும் உறுப்பினராக ஒருபோதும் நான் இருக்க மாட்டேன். இங்கு இடம்பெறும் குறை நிறைகளை சரியாக ஆராயும் ஒருவனாக இந்தச் சபையில் நான் இருப்பேன்.-என்றார். (ச)

## போலி ஆவணம் சமர்ப்பித்த கொன்ஸ்டபிள் இடைநிறுத்தம்

கண்டி,ஒக்.29

போலி கல்விச் சான்றிதழ் சமர்ப்பித்து நியமனம் பெற்றதாகக் கூறப்படும் பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவர் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கடமையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

குருநாகல், மாவத்தகம பகுதியைச் சேர்ந்த இவர், போலி கல்விச் சான்றிதழ் சமர்ப்பித்து பொலிஸ் கொன்ஸ்டபிள் நியமனம் பெற்று கண்டி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றியதாகக் கண்டி பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் கடந்த ஒரு வருடகாலமாக பொலிஸ் கொன்ஸ்டபிளாக கடமையாற்றி வந்த நிலையில், போலி கல்விச் சான்றிதழ் சமர்ப்பித்தமை தெரியவந்துள்ளது என்று பொலிஸார் கூறினர். (ச)

## சுயலாப அரசியலுக்காக இளைஞர்களை பாவிக்காதீர்

### ஏறாவூர் செயலக செயலமர்வில் சுபைர்

அம்பாறை,ஒக்.29

அரசியல்வாதிகள் இளைஞர்களை நற்பிரஜைகளாக வளர்த்தெடுக்கும் செயற்றிட்டங்களை முன்னெடுக்க வேண்டும். அதைவிட்டு தமது சுயலாப அரசியலுக்காக இளைஞர் சமூகத்தை பயன்படுத்தும் செயற்பாடுகளை அவர்களிடம் திணிக்கக்கூடாது என்று கிழக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.எஸ்.சுபைர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மாகாணசபை உறுப்பினர் சுபைரின் நிதி ஒதுக்கீட்டில் ஏற்பாடு செய்யப்பட்ட இளைஞர் திறன் அபிவிருத்தி தொடர்பான செயலமர்வு ஏறாவூர் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டின் உயர்வுக்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் முதுகெலும்பாகத் திகழும் இளைஞர் சமூகம் எதிர்காலத்தில் நாட்டின் நற்பிரஜைகளாகத் திகழ்வதற்கு வழிகாட்டப்பட வேண்டும்.

இந்தவகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இளைஞர்களை நெறிப்படுத்துவதற்கான பல முன்மாதிரி செயற்றிட்டங்களைச் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார்.

எனவே இளைஞர்கள் இத்தகைய வழிகாட்டல் திட்டங்களை நன்கு பயன்படுத்திக்கொள்வதுடன், மனித உரிமைகளையும் மதிக்கத்தக்க பிரஜைகளாக மாறுவதுடன் சரி, பிழைகளை இனம் கண்டு செயற்படுபவர்களாகவும் திகழ வேண்டும்.

**நாட்டின் சொத்துக்கள்**

வடக்கு, கிழக்கில் கடந்த காலங்களில் முப்பதாயிரம் இளைஞர்கள் போரால் உயிரிழந்துள்ளனர். இவர்கள் அனைவரும் இந்த நாட்டின் சொத்துக்களாவர்.

இத்தகைய துர்ப்பாக்கிய நிலைமை இந்த நாட்டில் இனியும் ஏற்படக்கூடாது. நிச்சயமாக நல்ல நெறிப்படுத்தலுடன் இளைஞர் சமூகம் பாதுகாக்கப்பட வேண்டும்.

**அரசியல் வாதிகள்**

இதேவேளை அரசியல்வாதிகளில் ஒரு சிலர் இளைஞர்களைத் தமது அரசியல் இலாபத்துக்காக பயன்படுத்தும் செயற்பாடுகளும் இந்தக் காலகட்டத்தில் இடம்பெற்று வருகின்றன.

தேர்தல் காலங்களில் இத்தகைய அரசியல்வாதிகள் தமது வெற்றியை சாதகமாக்குவதற்காக இளைஞர்களுக்கு போதைவஸ்துக்கள், கொடுப்பனவுகளை வழங்கி, சமூக அமைப்புகளிலிருந்து அவர்களை மாறுபடுத்தி விட்டு பின்னர் கைவிடும் நிலைமையும் உள்ளது.

இதனால் இத்தகைய இளைஞர்கள் விரக்தி நிலைமைக்கு உட்படுவதுடன் போதைவஸ்து பாவனைக்கும் அடிமையாகும் நிலையுமுள்ளது.-என்றார். (ச-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது
வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** சிலர் உங்களிடம் நட்பு பாராட்டுவதாகக் காண்பிக்கத் தேவையற்ற விடயங்களை வலிய வந்து பேசுவர். அவர்களுடன், அளவுடன்பேசி விலகுவது நல்லது. தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற, கூடுதல் உழைப்பு உதவும். எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும்.

**இடபம்:** உங்கள் மனதில் அதிகளவில் நற்சிந்தனை வளரும். பிறருக்கு இயன்றளவில் உதவுவீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு நிறைவேறும். தாயின் தேவை அறிந்து நிறைவேற்றி கூடுதல் அன்பு, ஆசிபெறுவீர்கள்.

**மிதுனம்:** உங்கள் மனதில் இறைபக்தியின் மீதான நம்பிக்கை வளரும். உயர்ந்த எண்ணங்களை செயற்படுத்துவீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த இடர்விலகி வளர்ச்சி உண்டாகும். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். உறவினர் சில பொறுப்புக்களைத் தந்து நிறைவேற்றக் கோருவர்.

**கடகம்:** நீங்கள் நிறைவேற்ற வேண்டிய பணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும். எவரிடமும் தர்க்கவாதம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூல தன்மைகளை பாதுகாப்பது நல்லது. அளவான பணவரவு கிடைக்கும்.

**சிங்கம்:** பிறரது பேச்சால் கவலை கொள்வீர்கள். குடும்ப உறுப்பினர்களின் ஆதரவு நம்பிக்கை தரும். தொழில், வியாபாரத்தில் சில சீர்திருத்தத்தைச் செய்வீர்கள். எதிர்பார்த்தளவில் பணவரவு கிடைக்கும். இயந்திரத் தொழிற்சாலை பணியாளர்கள் பாதுகாப்பு நடைமுறையைக் கவனமுடன் பின்பற்ற வேண்டும்.

**கன்னி:** உங்கள் மனதில் இருந்த தயக்கம் விலகி தைரியம் வளரும். செயல்களை திறமையுடன் மேற்கொள்வீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியில் புதிய பரிமாணம் ஏற்படும். சராசரி பணவரவுடன், அதிர்ஷ்டகரமாக உபரி பண வருமானம் கிடைக்கும்.

**நாளை**

ஐப்பசி-14 செவ்வாய்க்கிழமை 30.10.2012
திதி: பிரதமை பி.இ.03.03 வரை
நட்சத்திரம்: பரணி, மாலை 06.00வரை
சுபநேரம்: 10.33-12.03வரை
ராகுகாலம்: 03.03- 04.33 வரை

**துலாம்:** கடினமான செயல்களையும் உங்கள் திறமையால் எளிதாக நிறைவேற்றுவீர்கள். சக பணியாளர் அதிக அன்பு பாராட்டுவர். தொழில் வியாபார வளர்ச்சி இலக்கு திட்டமிட்டபடி நிறைவேறும்.

**விருச்சிகம்:** உங்கள் நண்பர், உறவினர்களின் பேச்சு சங்கடம் தருவதாக இருக்கும். இருப்பினும், பெருந்தன்மையுடன் நடந்து கொள்வீர்கள். பணவரவில் சிக்கனமான செலவுகளை மேற்கொள்வீர்கள். போக்குவரத்தில் கவனம் தேவை.

**தனுசு:** உங்களின் எதார்த்த பேச்சு பிறர் மனதைப் புண்படுத்தலாம். பின்பு, தன்குறையை உணர்ந்து அவர்களை சமாதானப்படுத்துவீர்கள். எதிர்பார்த்த பணவரவு உரிய நேரத்தில் கிடைப்பதில் தாமதம் இருக்கும். நண்பர், உறவினரின் விலை மதிப்புள்ள பொருள்களைப் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்க வேண்டாம்.

**மகரம்:** உங்கள் உழைப்பின் மீதான நம்பிக்கை வளரும். நல்லவர்களிடம் எதிர் பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெறத்தேவையான மாற்றம் செய்வீர்கள். உபரி பண வருமானம் கிடைக்கும்.

**கும்பம்:** உங்கள் முன் நடக்கும் சமூக நிகழ்வு மனதில் பாதிப்பை ஏற்படுத்தலாம். அன்றாடப் பணிகளின் அவசியம் கருதி, செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் ஓரளவு வளர்ச்சி பெறுவீர்கள். பணவரவை விட செலவு அதிகரிக்கும்.

**மீனம்:** உங்கள் மனச்சாட்சிக்குக் கூடுதல் முக்கியத்துவம் கெடுத்துச் செயற்படுவீர்கள். நல்லவர்களின் வாழ்த்து மனதுக்கு ஊக்கம் தரும். தொழில், வியாபார வளர்ச்சி இலக்கு திட்டமிட்டபடி நிறைவேறும். நண்பரின் முக்கிய தேவை ஒன்றிற்கு, இயன்றளவில் பணம் தந்து உதவுவீர்கள்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | | 3 | 4 | | | | | 8 |
| | 9 | | 3 | | 6 | | | 7 |
| | | 2 | 5 | | 9 | | | |
| | | | | | | 4 | 7 | 6 |
| 6 | | 4 | 8 | | 7 | 9 | | 2 |
| 7 | 2 | 5 | | | | | | |
| | | | 9 | | 8 | 7 | | |
| 8 | | | 7 | | 5 | | 6 | |
| 9 | | | | | 3 | 2 | | 4 |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 6 | 3 | 8 | 5 | 2 | 1 | 7 | 9 |
| 1 | 9 | 2 | 4 | 7 | 3 | 5 | 9 | 8 |
| 5 | 8 | 7 | 1 | 9 | 6 | 3 | 2 | 4 |
| 9 | 1 | 6 | 2 | 4 | 8 | 7 | 5 | 3 |
| 2 | 3 | 5 | 9 | 1 | 7 | 8 | 4 | 6 |
| 8 | 7 | 4 | 3 | 6 | 5 | 2 | 9 | 1 |
| 6 | 5 | 1 | 7 | 8 | 9 | 4 | 3 | 2 |
| 7 | 2 | 8 | 6 | 3 | 4 | 9 | 1 | 5 |
| 3 | 4 | 9 | 5 | 2 | 1 | 6 | 8 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும்-9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.




# யாழ். நகரில் பிரமாண்டமான திறப்பு விழா அழைப்பு

## ராசி சில்க்ஸ், நல்லி சில்க்ஸ்

ஆகியவற்றின் இணை நிறுவனமாக
யாழ். நகரில் முற்றிலும் நவீனமயப்படுத்தப்
பட்ட ஜவுளி உலகின் சாம்ராஜ்யம்

## ராசி கலெக்ஷன்ஸ்

இன்று (29.10.2012) திங்கட்கிழமை மு.ப. 9.38
மணிமுதல் 11.20 மணி வரையுள்ள சுபவேளையில்,
இல. 199, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் என்னும்
முகவரியில் மங்களகரமாக திறந்து வைக்கப்படுகின்றது.

**அன்பர்கள், ஆதரவாளர்கள் மற்றும்
வாடிக்கையாளர்கள் அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.**

**உரிமையாளர்.**

(கி/4360)(6.7.8)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெள்ளத்தில் மூழ்கின காலி நகரின் வீதிகள்

கொழும்பு,ஒக்.29

நாட்டில் ஏற்பட்டுள்ள மழையுடன் கூடிய வானிலையை அடுத்து காலி நகரின் பல பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன என்று இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. காலி சங்கமித்த பாடசாலைக்கு அருகிலுள்ள வீதி நீரில் மூழ்கியுள்ளமையினால், போக்குவரத்து நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன என்று நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் பிரதீப் கொடிபிலி தெரிவித்தார்.

கராபிட்டி பகுதியின் பல இடங்கள் நீரில் மூழ்கியுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கடும் காற்றுடன் கூடிய மழை பெய்வதற்கான சாத்தியக்கூறுகள் தென்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

மத்திய வங்காள விரிகுடாவில் ஏற்பட்டிருந்த குறைந்த தாழமுக்கமானது தற்போது வலுவடைந்து தாழமுக்கமாக மாறியுள்ளது என்று திணைக்களத்தின் கடமை நேர வானிலை நிபுணர் எஸ்.வசந்த குமார் தெரிவித்தார். (ச)



அலரிமாளிகையைக் கண்டுகளிக்க வருகை தந்த அம்பாந்தோட்டை உஸ்வெவ கனிஷ்ட வித்தியாலய 5 ஆம் ஆண்டு கல்வி பயிலும் மாணவன் சசிந்து ஹெட்டியாராச்சி தனது பாடசாலையில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை தொடர்பாக ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டுவந்தார். மாகாணக் கல்வி அமைச்சருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, கையடக்கத் தொலைபேசியை மாணவனிடமே கொடுத்து, மாகாண அமைச்சரிடம் பிரச்சினையைக் கூறுமாறு தெரிவித்ததுடன், மாணவன் தொலைபேசியில் உரையாடுவதை ஆர்வத்துடன் அவதானிக்கிறார்.

## மின்னல் தாக்கம்; 44 பேர் உயிரிழப்பு



கொழும்பு,ஒக்.29

இந்த வருடத்தில் இதுவரையான காலப் பகுதிக்குள் மின்னல் தாக்கி 44 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை நாட்டின் பல பாகங்களிலும் மின்னல் தாக்குதலுக்கு இலக்கான பலர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

கடந்த ஏப்ரல் மாதத்தில் மின்னல் தாக்கம் காரணமாக அதிக உயிரிழப்புக்கள் பதிவாகியுள்ளன. இந்த மாதத்தில் 20 பேர் உயிரிழந்துள்ளனர்.

எனவே மழைகாலங்களில் மக்கள் தமக்கான பாதுகாப்பு குறித்து அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்று இடர் முகாமைத்துவ நிலையம் அறிவுறுத்தியுள்ளது. (ச)

## குற்றவாளிகளின் தரவு கணினியில்

### பொலிஸ் மா அதிபர் தகவல்



கொழும்பு,ஒக்.29

நாட்டின் சகல குற்றவாளிகளினதும் தரவுகள் கணினி மயப்படுத்தப்படவுள்ளன என்று பொலிஸ் மா அதிபர் என்.கே. இலங்கக்கோன் தெரிவித்தார்.

குற்றச்செயல்களில் ஈடுபட்டவர்களின் பெயர்கள், கைவிரல் அடையாளங்கள், புகைப்படங்கள், முகவரிகள் உள்ளிட்ட பல்வேறு தரவுகள் உள்ளடக்கப்படவுள்ளன என்று அவர் கூறினார்.

பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபட்ட ஒரு லட்சத்துக்கும் அதிகமான குற்றவாளிகளின் பெயர் விவரங்கள் இவ்வாறு கணினி மயப்படுத்தப்படவுள்ளன என்று அவர் குறிப்பிட்டார்.

குற்றச்செயல்களை தடுக்கும் நோக்கில் தரவுகள் கணினி மயப்படுத்தப்படவுள்ளன.

2015 ஆம் ஆண்டு அளவில் நாட்டில் இடம்பெற்று வரும் குற்றச்செயல்களை 90 வீதத்தினால் குறைப்பதே இந்த நடவடிக்கையின் நோக்கம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# கிராம மட்டத்தில் அதிகாரப் பகிர்வு

### அமைச்சர் விதாரண ஆலோசனை

கொழும்பு,ஒக்.29

கிராம மட்டத்தில் அதிகாரப் பகிர்வு மேற்கொள்ளப்பட வேண்டும் என்று சிரேஷ்ட அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

13ஆம் திருத்தச் சட்டத்தை இரத்து செய்யும் யோசனைத் திட்டம் பிழையானது.

மஹிந்த சிந்தனையின் அடிப்படையில் மாகாண சபை முறைமை நடைமுறைப்படுத்துவது மட்டுமன்றி வடக்கில் மாகாணசபை நிறுவப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

13ஆம் திருத்தச் சட்டத்தில் சில குறைபாடுகள் காணப்படுவது ஏற்கத்தக்கது. அவற்றைத் திருத்திக் கொண்டு காத்திரமான ஓர் அதிகாரப் பகிர்வை மேற்கொள்ள வேண்டும்.

13ஆம் திருத்தச் சட்டத்தை ரத்து செய்ய வேண்டும் என்று ஒன்றிரண்டு கட்சிகள் கோரிய போதிலும் அரசின் நிலைப்பாடு அதுவல்ல.



பாதுகாப்புச் செயலாளர் 13 ஆம் திருத்தச் சட்ட வரைவு தொடர்பில் வெளியிட்ட கருத்துக்கள் தொடர்பில் எதனையும் கூற விரும்பவில்லை. தனிப்பட்ட நபர்களின் கருத்துக்களுக்கு பதிலளிக்கப் போவதில்லை. அரசு என்ற ரீதியில் 13 ஆம் திருத்தச் சட்டம் தொடர்பிலான நிலைப்பாடு மாறுபட்டே காணப்படுகின்றது.

ஜனாதிபதியுடன் ஆளும் கட்சி உறுப்பினர்கள் இணைந்து எடுக்கும் தீர்மானங்களே அரச தீர்மானங்களாகக் கருதப்பட வேண்டும்.

வடக்கில் மாகாணசபைத் தேர்தல் நடத்தி மாகாண சபை ஆட்சியை நிறுவ வேண்டும். இதனையே ஜனநாயக அரசியலாகக் கருதப்பட வேண்டும்.- என்றார். (ச)

## போலி நாணய தாள்களுடன் ஒருவர் கைது

கொழும்பு,ஒக்.29

மொனராகலை - வெல்லவாய பகுதியில் போலி நாணயத் தாள்களுடன் ஒருவர் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப்படை ஹம்பாந்தோட்டை முகாம் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவரிடம் இருந்து 100 ரூபா போலி நாணயத் தாள்கள் இரண்டும், கடதாசியில் சுற்றப்பட்ட நிலையில் 1000 ரூபா நாணயத் தாள்கள் சிலவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலதிக விசாரணைகளுக்கென சந்தேகநபர் மொனராகலை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ச)

## மத்தல விமான நிலையத்தை பயன்படுத்துவோருக்கு சலுகை

கொழும்பு,ஒக்.29

ஹம்பாந்தோட்டையில் அமைக்கப்பட்டுவரும் இரண்டாவது சர்வதேச விமான நிலையத்தை பயன்படுத்துவோருக்கு பல சலுகைகள் வழங்கப்படவுள்ளன.

இதற்கமைய கட்டணம் குறைந்த விமான அனுமதிச் சீட்டுக்கள் உட்பட்ட சலுகைகள் வழங்கப்படும் என்று இலங்கை உள்நாட்டு விமான சேவை நிறுவனம் அறிவித்துள்ளது.

இந்த விமான நிலையத்துடன் தமது சேவைகளை நடத்த தற்போது வரை மூன்று சர்வதேச விமான நிறுவனங்கள் முன்வந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கமைய முதல் வருடத்தில் மாத்திரம் 400,000 பயணிகள் மத்தல விமான நிலையத்தின் ஊடாக தமது பயணங்களை மேற்கொள்வர் என்று எதிர்பார்ப்பதாக உள்நாட்டு விமானசேவைகள் நிறுவனம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

2013 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் விமான நிலையத்தின் நிர்மாணப் பணிகள் நிறைவுபெறும் என்று கூறப்படுகின்றது.

இதேவேளை கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக வருடம் ஒன்றுக்கு 6.2 மில்லியன் பயணிகள் தமது பயணங்களை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## கிணற்றில் விழுந்து தாயும் மகனும் சாவு

கொழும்பு,ஒக்.29

அஹங்கம பிரதேசத்தில் தாயும், மகனும் கிணற்றில் விழுந்து உயிரிழந்துள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

குறித்த பெண் தனது குழந்தையுடன் கிணற்றடியில் ஆடைகளை சலவை செய்து கொண்டிருந்த போதே குழந்தை தவறி கிணற்றில் விழுந்துள்ளது.

குழந்தையைக் காப்பாற்ற தாயும் கிணற்றில் குதித்துள்ளார். இதன்போதே இருவரும் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

## ஈரான் சென்ற இலங்கைக் கப்பல்களை தடுத்தி நிறுத்தியுள்ளது அமெரிக்கா

### எரிபொருள் எடுத்து வருவதில் இழுபறி நிலை

கொழும்பு,ஒக்.29

ஈரானில் எரிபொருள் ஏற்றச் சென்ற இலங்கையின் எரிபொருள் தாங்கி கப்பல்களை அமெரிக்கா தடுத்து நிறுத்தியுள்ளது.

ஈரான் மீது பொருளாதாரத் தடையை விதித்துள்ள அமெரிக்கா, தனது கடற்படைக் கப்பல்களின் மூலம் ஈரானுக்குச் செல்லும் கப்பல்களைத் தடுத்து வருகிறது.

எரிபொருள் தேவைக்கு ஈரானையே முழுமையாக நம்பியுள்ள இலங்கை அரசு, எரிபொருளை ஏற்றி வருவதற்கு கப்பல்களை தெஹ்ரானுக்கு அனுப்பியிருந்தது. இவற்றை அமெரிக்கா தடுத்து நிறுத்தி திருப்பி அனுப்பியுள்ளது, இந்தக் கப்பல்களை சவூதி அரேபியாவுக்கு இலங்கை திருப்பி விட்டது. ஈரான் எரிபொருள் இறக்குமதி தடைப்பட்டுள்ளதால், ஈரானிலிருந்து இறக்குமதி செய்யும் மசகு எண்ணெயை சுத்திகரிக்கும் சபுகஸ் கந்த ஆலை மூடப்பட்டுள்ளது.

தமது எண்ணெய் தாங்கிக் கப்பல்களின் மூலம் இலங்கைக்கு எரிபொருள் விநியோகிக்கத் தயார் என்று ஈரான் கூறியுள்ளது.

இதுதொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள இலங்கைக்கான ஈரானியத் தூதர் ஹசானி, ஈரானின் பெரிய எரிபொருள் தாங்கி கப்பல்கள் இலங்கையின் சிறிய துறைமுகங்களுக்குள் நுழைய முடியாது என்று எமக்குத் தெரியும். இலங்கையின் கடல் எல்லைக்குள் வைத்து வேறு கப்பல்களுக்கு எரிபொருளை மாற்ற முடியும்.

இதுதொடர்பாக இலங்கை அரசுடன் கலந்துரையாடி வருகிறோம்- என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
1965★01★18

இறப்பு
2011★11★10

### ஆறுமுகம் திருச்செல்வம்
**(மோகன்)**

(இலங்கை மின்சாரசபை, சுன்னாகம்,
S.S.T.S)

புன்னகையுடனே பூமியில் வலம் வந்து
பூந்தோட்டம் போலிருந்த வாழ்க்கைக்கு
புயலாக வந்த காலனின் கையில்
புழுவாகப் போன கதை மறக்கமுடியுமா ?
உதவிக்கு ஒரு கரம் உங்களைத் தவிர யார் எமக்கு ?
ஓராண்டு சென்றாலும் ஓயாது உன் நினைவலைகள்

அன்னாரின் முதலாம் ஆண்டு நினைவினை ஒட்டி இன்று (29.10.2012) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வைரவர் கோயிலடி,
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி. (24859)(6.7.8)

மனைவி, பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

advt@uthayan.com
0215671111

## கண்ணீர் அஞ்சலி



எமது கழக முன்னாள் உறுப்பினர்

### லயன் கந்தையா
### விஜயரத்தினம்

(சமாதான நீதிவான், யாழ். மாவட்ட இணைப்பாளர்
சமாதான நீதிவான்களுக்கான மனித உரிமைகள் அமைப்பு,
இளைப்பாறிய பிரதேச முகாமையாளர் அரச மர
கூட்டுத்தாபனம், வடபிராந்தியம்)

அவர்கள் 24.10.2012 இல் காலமான செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், கழக அங்கத்தவர்கள்,
நல்லூர் லயன்ஸ் கழகம்.

(சி/1728)(6-7-8)

## ஏங்கும் நினைவுடன் ஏழாம் ஆண்டு



மலர்வு
10.04.1986

உதிர்வு
17.10.2005

### பாலசுப்பிரமணியம் அர்ச்சனா
**திதி: பூரணை 29.10.2012**

ஏட்டினிலும் காணவில்லை நீ எங்குதான் சென்றனையோ?


உள்ளமதில் தோன்றுகின்ற எண்ணமெல்லாம் பொய்த்ததம்மா - உன்
கள்ளமில்லா புன்சிரிப்பு எம் கல்மனதை வாட்டுதம்மா
சேதி ஒன்று சொல்லிடவே உன் தாய் மனது துடிக்குதம்மா - எம்
சேய்தனிலேவந்திடாயோ எங்கள் சிந்தைகளி கூருமம்மா
வீட்டிற்கு ஒளிதந்த வெள்ளிநிலா போனதென்ன - தமிழ்
நாட்டுக்கே வழிகாட்டும் நல்ல தமிழ் ஓய்ந்ததென்ன
பாட்டினிலே பால்வார்த்த பைங்கிளியே கலங்குகின்றோம் - புலவோர்
ஏட்டினிலும் காணவில்லை நீ எங்குதான் சென்றனையோ?

விளையாட்டரங்கு வீதி,
கட்டப்பிராய்.

ஏங்கும் நினைவுடன்
உன் உறவுகள்.

(24901)(45.6.7)

## நெஞ்சகலா நினைவுகளுடன்
## எட்டாண்டுகள்



### அமரர் சுப்பிரமணியம் செல்வராசா

(உரிமையாளர் – வாணி ரெக்ஸ், சாவகச்சேரி.

**குலம் மகிழ: 25.06.1946 குவலயம் நெகிழ: 27.10.2004**

**திதி: பூரணை 29.10.2012**

நிலையற்ற மானுடவாழ்வில் நிலைத்து நின்ற எங்கள் அப்பா
நினைவுகளைக் கனவாக்கி நீண்ட தூரம் சென்றதென்ன?
ஆண்டுகள் எத்தனை தான் சென்றாலும்
ஆறுமோ எம் துயரம் அகிலமதில் வாழும்வரை
"செல்வம்" எனும் பெயருக்கு இலக்கணமாய் வாழ்ந்துவிட்டு,
சொல்லொணா துன்பத்தை பரிசாக தந்தீர்களேயப்பா
அணுவணுவாக வதைக்கும் தீராத உங்கள் நினைவுகள் தான் - நாம்
உங்கள்மீது கொண்ட அன்பிற்கு நீங்களளிக்கும் தண்டனையாப்பா?
சிரித்த உம் வதனமெண்ணித் தினமும் வேதனையில் வாடுமெமக்கு
சிரித்து வாழ்ந்த காலமெல்லாம் கானலாகி எட்டாண்டு கடந்து விட்டதப்பா.

*கண்ணீர்ப்பூக்களுடன் ஆத்ம அஞ்சலிக்காகப் பிரார்த்திக்கும்*

[illegible]மென் லேன்,
டச்சு றோட், சாவகச்சேரி.

- குடும்பத்தினர்.

(சி/4283)(2-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.




கோண்டாவில் வடக்கு மனோன்மணி அம்பிகா சமேத சிவபூதவராயர் ஆலய கும்பாபிஷேக நிகழ்வு இன்று காலை 9.35 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்தஆலயத்தில்தொடர்ந்து 24 தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

* * *

நெடுங்கேணி கதிர் வேலாயுத சுவாமி ஆலயத்தில் வருடாந்த கௌரிக் காப்பு விரதத்தின் ஆரம்ப நாள் கடந்த புதன்கிழமை ஆரம்பமானது. சிவலிங்கத்துடன் சேர்ந்த கும்பம் வைக்கப்பட்டு அதற்கான பூசைகள் நடை பெறுவதுடன் தொடர்ந்து 21 நாள்கள் இந்த பூசை வழிபாடுகள் இடம் பெறும்.

### ஸ்டாலின், டி.ஆர்.பாலு போன்றவர்கள் பங்குபற்றும்

# பிரிட்டன் தமிழர் பேரவை மாநாட்டில் வைகோ, ராமதாஸ் பங்கேற்பார்களா?

லண்டனில் அடுத்த மாதம், 6ஆம் திகதி நடக்கும், பிரிட்டன் தமிழர் பேரவை மாநாட்டில், தி.மு.க பொருளாளர் ஸ்டாலின், டி.ஆர்.பாலு ஆகியோர் பங்கேற்கின்றனர். இதனால், ம.தி.மு.க., பொதுச்செயலர் வைகோ, பா.ம.க., நிறுவுநர் ராமதாஸ் ஆகியோர், இந்த மாநாட்டை புறக்கணிப்பார்களா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

இலங்கைத் தமிழர்களின், மனித உரிமை மீறல் பிரச்சினை தொடர்பாக, நியூயோர்க்கில் உள்ள ஐ.நா. சபை, மற்றும் ஜெனீவாவில் உள்ள மனித உரிமைகள் ஆணையத்திடம் மனுக்களைக் கையளிக்க தி.மு.க. முடிவெடுத்துள்ளது.

ஐ.நா., சபையில், மனுவை அளித்துவிட்டுத் திரும்பும் நிலையில், அடுத்த மாதம், 6 ஆம் திகதி லண்டனில் நடைபெறவுள்ள, ''பிரிட்டன் தமிழர் பேரவை' சார்பில் நடைபெறும் தமிழ் மாநாட்டில் ஸ்டாலின், டி.ஆர். பாலு, அமைப்புச் செயலர் டி.கே. எஸ்.இளங்கோவன் வழக்கறிஞர் கே.எஸ். ராதாகிருஷ்ணன் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். லண்டன் மாநாடு நிகழ்ச்சிகள், மூன்று நாள்கள் நடைபெறவுள்ளன. அதில் இலங்கை தமிழர்களின் மனித உரிமை மீறல், அவர்களுக்கு புனர்வாழ்வு அரசியல் அதிகாரம், வாழ்வுரிமை குறித்த விவாதங்கள் நடைபெறவுள்ளன.

இந்த மாநாட்டில் பங்கேற்க. ம.தி. மு.க., சார்பில் அந்தக் கட்சியின் பொதுச் செயலர் வைகோ, லண்டன் செல்ல திட்டமிட்டுள்ளார். ஆனால், இந்த மாநாட்டில் தி.மு.க., வுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதாலும், ஸ்டாலின் பங்கேற்கிறார் என்பதாலும் வைகோ மாநாட்டுக்குச் செல்வாரா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

லண்டன் மாநாட்டில், தி.மு.க., வுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட் டுள்ளதால், பா.ம.க., நிறுவுநர் ராமதாஸ், லண்டன் செல்லவில்லை என்றும், அவருக்கு பதிலாக பிரதிநிதிகள் செல்ல இருப்பதாகவும் கூறப்படுகிறது. விடுதலை சிறுத்தைகள் கட்சியின் பொதுச் செயலர், தொல். திருமாவளவன் பங்கேற்க சம்மதம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து, தி.மு.க., வட்டாரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கை தமிழர்கள் நலனுக்காக, நிறை வேற்றப்பட்ட, டெசோ மாநாட்டின் தீர்மானங்கள், நியூயோர்க்கில் உள்ள ஐ.நா., சபையில் ஒப்படைக்கப்படுகிறது. மனித உரிமை மீறல் குறித்து, 150 பக்கங்கள் கொண்ட மனுக்கள் மற்றும் டெசோ மாநாட்டில் பங்கேற்ற தலைவர்களின் பேச்சுகள் அடங்கிய இறுவட்டுகள், இலங்கை தமிழர்களின் துயரச் சம்பவங்கள் குறித்த புகைப் படங்கள் ஜெனீவாவில் உள்ளமனிதஉரிமைகள்ஆணையத்திடம் சமர்ப்பிக்கப்படவுள்ளன என தெரிவித்தனர்.

இலங்கையில் நடந்த இறுதிக் கட்டப்போரின் போது, பதவியிலிருந்த தி.மு.க., அவர்களை காப்பாற்ற எதுவும் செய்யவில்லை என்ற குற்றச்சாட்டு உலகத் தமிழர் மத்தியில் தொடர்கிறது. ராஜபக்ஷவை விட, தி.மு.க.,வை குற்றவாளியாக முன் நிறுத்துவதில், பல்வேறு தமிழ் அமைப்புகளும் தீவிரமாக இருந்து வரு கின்றன.இந்த நிலையில், லண்டன் தமிழர்கள் மத்தி யில்,பேசு வதற்கு கிடைத்த வாய்ப்பை பயன்படுத்தி, தங்கள் மீதுள்ள கோபத்தைப் போக்க, தி.மு.க. முயற்சி எடுத்து வருகிறது. தி.மு.க. வுக்கு கிடைத்த இந்த வாய்ப்பு, வெளிநாட்டில் வசிக்கும் இலங்கை தமிழர்கள் மத்தியில், செல்வாக்கு பெற்றிருந்த, ம.தி.மு.க.,- பா.ம.க., உள்ளிட்டகட்சிகளுக்குஅதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (3)

# போலி கடனட்டைகளுடன் சிக்கினர் இரு இலங்கைத் தமிழ் இளைஞர்கள்

### 55, 689 டொலர் பணத்தையும் கைப்பற்றினர் நியூயோர்க் பொலிஸார்

கனடாவில் வசிக்கும் இரண்டு இலங்கைத் தமிழர்கள் அமெரிக்க பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். போலி பணப்பரிமாற்ற கடன் அட்டைகளைப் பயன்படுத்தி பல்வேறு வங்கிகளின் தன்னியக்க பணப்பரிமாற்ற இயந்திரங்களில் இருந்து பணத்தைப் பெற்றுக் கொண்டதாக குற்றம்சாட்டியே நியூயோர்க் பொலிஸார் இவர்களைக் கைது செய்துள்ளனர்.

சிவரூபன் ஞானபண்டிதன் (28வயது), ராகவன் பத்மசீலன் (24 வயது) ஆகியோரே கைது செய்யப்பட்டுள்ளவர்களாவர். இவர்கள் கனடாவின் ஒன்ரோறியோவில் வசித்து வந்தவர்கள். கடந்த வெள்ளிக்கிழமை இரவு தன்னியக்க பணப்பரிமாற்ற இயந்திரத்தில் இருந்து பணத்தை எடுத்துக் கொண்டிருந்த போது கைது செய்யப்பட்ட இவர்களிடம் இருந்து, 257போலி பணப்பரிமாற்ற அட்டைகள், 55,689 டொலர் பணம் போன்றவற்றை நியூயோர்க் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (3)

# பண்ணாகத்தில் சி.க. கூ கடன் வழங்கல்

சுழிபுரம், ஒக்.29

பண்ணாகம் மக்கள் சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கத்தினர் சங்க அங்கத்தவர்களிடம் சேர்க்கப்பட்ட பணத்தைக் கடனாக வழங்கி வருகின்றனர்.

மூன்று வருடங்களில் பகுதி பகுதியாக தீர்க்கும் வகையில், ரூபா ஐம்பதினாயிரம் வட்டிக்கு வழங்கப் பட்டு வருகின்றது. சென்ற மாதம் நடைபெற்ற வருடாந்த பொதுக் கூட்டத்தில் ஏக மனதான தீர்மானத்துக்கு அமைய இம்மாதம் கடன் பணத்தை பத்து அங்கத்தவர்களுக்கு வழங்கியுள்ளனர். சங்க கடன் வழங்கும் நிபந்தனைகளை அனுசரித்து அங்கத்தவர் ஒழுகுவதே முக்கியமாகும். வலிகாமம் மேற்குப் பிரிவில் ஒரு முன் மாதிரியான சங்கம் இது என கூட்டுறவு பகுதி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (3-28)


## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

அன்னை மடியில்
06 * 05 * 1945



அம்பிகையின் அடியில்
02 * 10 * 2012

கடந்த 02.10.2012 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்த எமது தந்தையார்

அமரர்

### துரையப்பா சிவஞானச்செல்வம்

(அறங்காவலர், புளியங்கூடல் செருத்தனைப்பதி ஸ்ரீ இராஜமகாமாரி அம்மன் திருக்கோயில்)

எங்களை விட்டு நீங்கள் பிரிந்தாலும்
எங்கள் மனதை விட்டு உங்கள் நினைவை
மறக்க முடியாது
செருத்தனைப்பதி ஸ்ரீ இராஜமகாமாரி
அம்மன் திருக்கோயிலில் நீங்கள்
செய்த பணியை நினைத்து
மனமுருகி வாழுகின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (30.10.2012) ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப 10 மணிக்கு புனித சாட்டி தீர்த்தக்கரையில் நடைபெறும். இந்த நிகழ்வில் 01.11.2012 வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண வீட்டுக் கிருத்திய நிகழ்விலும், ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.


புளியங்கூடல்,
ஊர்காவற்றுறை.
(24868)(3.14.6)

[illegible]
து.சி.மருதூரன்.



## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்
10 * 07 * 1934



மறைவு
10 * 11 * 2011

திதி:-29.10.2012

அமரர்

### கார்த்திகேசு சோமசுந்தரம்

(இறப்பு, பிறப்பு, விவாகப்பதிவாளர் காரைநகர்)

ஆண்டொன்று ஆனதையா ஆயினும் ஆறவில்லை
எம் மனம் காலமெல்லாம் எங்களை நீங்கள் காத்திடுவீர்
என்று எண்ணி இருந்தோம். காலனின் பிடிதனில் சிக்கி
எம்மை நடுக்கடலில் தத்தளிக்க விட்டது ஏனோ?
இல்லாத இன்பங்களையெல்லாம் நீங்கள்
அருகில் இருந்ததால் உணர்ந்தோம்
இன்று நீங்கள் எம் அருகில் இல்லாததால்
இன்பங்களும் துன்பங்களாய் மாறிப்போனது ஏனோ?

உங்கள் பிரிவால் துயருறும்

[illegible] கிழக்கு
[illegible]கோட்டை, காரைநகர்

மனைவி, மகன்மார்,
மருமகள், பேரப்பிள்ளை.

(2476)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோண்டாவில் வடக்கு அருள்மிகு ஸ்ரீ மனோன்ம



## புனராவர்த்தன அஷ்டப

# மஹா கும்பாபிஷேக சிற

### ஆலய பிரதம குருவின் ஆசிச்செய்தி



பார்க்கும் இடமெல்லாம் நீக்கமற நிறைந்து எங்கும் எவையுமாகி வியாபித்து அணுவுக்கணுவாய் அப்பாலுக் கப் பாலாய் ஒருவரும் நாமமின்றி அருளாட்சி செய் கின்ற இறைவன் ஆன்மாக்கள் மீது கொண்ட கருணை யினாலே ஆன்மாக்கள் தன்னை மனத்தால் நினைத் தும், வாயால் வாழ்த்தியும், உடலால் வணங்கியும், உய்வடைவதற்காகத் தனது இச்சையினாலே பல உருவத்திருமேனிகளைக் கொண்டு அருளுகின்றான். அத்தகைய திருமேனிகளுள் ஒன்றே சிவபூதவராயர் என்னும் திருவுருவம். பூதகணங்களின் தலைவர் பஞ்ச பூதங்களால் ஆன உடலினைக் கொண்டவர் என்னும் பொருள் பட 'சிவபூதவராயர்' என்னும் திருநாமம் தாங்கி கோண்டாவில் பதி யிலே கோயில் கொண்டு எழுந்தருளி அருள் மழை பொழிந்து வருகின்றார்.

ஆரம்ப காலத்தில் சிறு ஆலயமாக இருந்தபோதிலும் இவ்வூர் வாழ் மக்களது அயராத முயற்சியின் பயனாக ஆலயம் வளர்ச்சி பெற்று மனோன்மணி அம்பிகை சமேத சிவபூதவராயராக வீற்றிருந்து அருளாட்சி செய்து வருகிறார்.


அண்ட வெளியிலே எங்கும் நீக்கமற நிறைந்துள்ள இறை சக்தியானது வேத மந்திர ஒலி மூலம் வாயுபகவானிடமும் அங்கிருந்து தானியங்கள், மூலிகைகள், சமித்துக்கள் மூலம் சக்தி வாய்ந்த மந்திர உச்சாடனத்துடன் ஓமம் செய்து வளர்க் கப்படுகின்றது. பின் நூல், தர்ப்பைக் கயிறு முதலியவற்றால் ''நாடீசந்தானம்'' எனும் தொடர்பு மூலம் அவ்விறை சக்தியானது வேதிகை மேடையில் வைத்து பூசிக்கப்படுகின்ற கும்பநீரினையடைந்து மேலும் சக்தியூட்டப்படுகின்றது. ஓம அக்கினியில் பூசிக்கப்படும் திருவருட்சக்தியினை ஒடுக்கி கும்பத்தில் சேர்த்து அக்கும்பத்தை அந்தணர்கள் வேதமோத நாதசுரக்கலைஞர்கள் நாதாஞ்சலி செய்ய பக்தர்கள் திருமுறை பாராயணம்செய்து ''அரோகரா'' எனும் ஒலி வான் நிறைய ஒலிக்க வீதிவலம் வந்து கும்பத்தில் உறையும் சக்தியை கருவறையில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள விக்கிரகங்களில் ஆவாகனஞ்செய்து அக்கும்ப ஜலத்தை அத்திருமேனி மீது சொரிந்து அபிஷேகம் செய்யும் கால் அந்த விக்கிரகங்கள் உயிர்ச் சக்தி பெற்றுப் பூரண கலைகளுடன் தெய்வீக சக்தி பெற்று மிளிர்கின்றன. இதனையே ''கும்பாபிஷேகம்'' எனும் பெருஞ்சாந்தி விழா விளக்குகின்றது.

இத்துணை சிறப்பு மிக்க மஹாகும்பாபிஷேகமானது சிவபூதவராயப் பெரு மானுக்கு நிகழ விருப்பதையிட்டு நான் பெருமகிழ்ச்சியடை கிறேன். கும்பாபிஷே கம் சிறப்புற நிகழ தக்க வழி முறைகளைக் கூறி வழிநடத்தும் ஆலய பரிபாலன சபையினர், பொருளுதவி, சரீர உதவி முதலிய பணிகளிலும் இப்பெரும் திருப்ப ணியில் ஏதோ ஒரு விதத்தில் பங்குகொண்டவர்கள், பங்குகொள்கின்றவர்கள், பங்குகொள்ள விளைவோர் ஆகிய அனைத்து அந்தணப் பெருந்தகைகளும் அடியவர்களும் அன்பர்களும் சிவபூதவராயப் பெருமானது பரிபூரணமான திருவரு ளினாலே நோயற்ற வழ்வு, குறைவற்ற செல்வம், நீண்ட ஆயுள், துன்பநீக்கம், மன அமைதி, சாந்தி முதலாய சகல நற்பேறுகளையும் நிறைவாகப் பெற்று பூரண மான ஆனந்தமான வாழ்வு வாழ எல்லாம் வல்ல சிவபூதவராயப் பெருமானை வேண்டி ஆசி கூறுகின்றேன்.

''லோகாஸ் ஸமஸ்தாஸ் ஸுகிநோ பவந்து''

''கிரியாமோதி'' ''கிரியாரத்னா''
பிரம்மஸ்ரீ ஞானசம்பந்த ஜோதிநாதக்குருக்கள்,
''பிரதமகுரு'' மனோன்மணி அம்பிகா சமேத சிவபூதவராயர்
தேவஸ்தானம், கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்.

### பிரதிஷ்டா பிரதம குருவின் ஆசியுரை



'பெருஞ்சாந்தி காணாமற் போனாயோ - பூம்பாவாய்' என்ற சம்பந்தப் பெருமானின் தேவாரப் பதிகத்தில் பெருஞ்சாந்தி எனக் குறிப்பிடப்படுவது மஹாகும்பாபிஷேகம் ஆகும்.

கும்பத்தில் இறைவனை ஆவாகனம் செய்து மந்திரங்களாலும் அக்கினியாலும் வழிபாடுசெய்து அக்கும்பத்தினைக் கர்ப்பக்கிரகத்தில் வீற்றிருக்கும் திருவுருவத் திற்கு அபிஷேகம் செய்து மூலமூர்த்திக்கு அருட்சக்தியை ஏற்படுத்தி நிரந்தரமாக ஆன்மாக்களுக்கு அருள்தரவேண்டுவதே மஹா கும்பாபிஷேக நிகழ்வாகும்.

பன்னிரண்டு வருடங்களுக்கு ஒருமுறை ஆலயங்களில் கும்பாபிஷேகம் நிகழ்கின்றன. இதனை புனராவர்த்தன மஹாகும்பாபிஷேகம் என்கின்றனர். இந்த வகையில் சிவ பூதவராயப் பெருமானுக்கும் மனோன்மணி அம்பாளுக்கும் விநாயகர் போன்ற பரிவார மூர்த்திகளுக்கும் கும்பாபிஷேகம் நிகழ்வது இவ்வூர் மக்கள் செய்த அளப்பரிய புண்ணிய மாகும். இந்த விழாவில் பங்குபற்றிய சகல புண்ணிய ஆத்மாக் களுக்கும் பிறவிப் பெரும்பயன் கிடைக்க எல்லாம் வல்ல மனோன்மணி அம்பாள் சமேத சிவபூதவராயப் பெருமானின் அருள்வேண்டுவதுடன் இந்த விழா மலர் சிறக்க நல்லாசிகளை கூறுகின்றேன்.

'தேவ சிவாகம ஞானபானு' க்ரியாக்ரம ஜோதி' பிரம்மஸ்ரீ க.மு. சோமசுந்தர
குருக்கள் பிரதம குரு பர்வத வர்த்தனி அம்மன் கோயில், உரும்பிராய்.

### பிரதேச செயலரின் ஆசிச் செய்தி




எண்ணற்ற இந்துக் கோயில்களைத் தன் எல்லைப் பரப்பினுள் கொண்டுள்ள நல்லூர் பிரதேச செயலகப் பிரிவினுள் அமைந்துள்ள கோண்டாவில் வடக்கு அருள் மிகு மனோன்மணி அம்பிகா சமேத ஸ்ரீ சிவபூதவராயர் தேவஸ்தானத்தின் மகா கும்பாபிஷேக பெருவிழா இடம்பெறுவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

திருக்கோயில்களில் நடைபெறும் உற்சவங்களில் தலையாகக் கொள்ளப் படுவது மகாகும்பா பிஷேகமாகும். அத்தகைய மகாகும்பாபிஷேகம் காண்பவர் கள் பெரும்பேறடைவார்கள் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். அந்தவகையில் ஸ்ரீ சிவபூதவராயர் ஆலய மகா கும்பாபிஷேகம் காணும் பக்தர்கள் பாக்கியசாலிகள். கிடைத்தற்கரியதான இந்தச் சந்தர்ப்பம் கோண்டாவில் வடக்கு கிராம மக்களுக்கும், இந்தக் கிராமத்தை அண்டி வாழும் சைவப் பெருமக்களுக் கும் இறையருள் பெறுவதற்கான வாய்ப்பாகும். இதன்படி ஸ்ரீ சிவபூதவராயர் ஆலயத் திருப்பணிகளில் ஈடுபட்டுவரும் இக்கிராம மக்களும், இவ்வாலய தர்மகர்த்தாக்களும் மற்றும் பரிபாலன சபையினரும் பாராட் டப்பட வேண்டியவர்களாவர். இவர்களின் தன்னலமற்ற பணியினால் நடைபெறும் மகாகும்பாபிஷேகம் இனிதே நிறைவேற எல்லாம் வல்ல இறைவனை வேண்டி எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பா. செந்தில் நந்தனன், பிரதேச செயலர் - நல்லூர்.

### உப தலைவரின் ஆசிச் செய்தி



கோண்டாவில் வடக்கு அருள் மிகு ஸ்ரீ மனோன்மணி அம்பிகை சமேத சிவபூதவராயர் தேவஸ்தான புனருத்தாரண வேலைகள் அடியார்களின் ஒத்துழைப்பினாலும் நிதியுதவியினாலும் ஓரளவு நிறைவு செய்யப்பட்டு ஆலய கும்பாபிஷேகம் சிறந்த முறையில் நடைபெறுகின்றது.

மேலும் ஆலயத்தின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்கும் கண்ணும் கருத்து மாக இருந்து வருங்காலத்தில் இந்த ஆலயத்தின் முக்கிய தேவையான கோபுரம், மணி மண்டபம், தீர்த்தக் கேணி என்பன இனிது நிறைவேற வேண்டும் என்று எம் பெருமானை வேண்டிக் கொள்வதுடன் அடியவர்களின் பூரண ஆதரவும் கிட்ட வேண்டும் என்று வாழ்த்தி வெளிநாட்டில் வசிக்கும் பூதவராயரின் அடியார் களின் ஒத்துழைப்பையும் எம் பெருமான் அருளால் கிட்ட வேண்டும் என்று பணிந்து வணங்கியும் வாழ்த்தியும் இருமைப்பேறும் பெற்று உயர் வீர்களாக. இறை அருள் நிறைந்து விளங்குவதாக.

அருணாசலம் (ஓய்வு பெற்ற அதிபர்)



புரி
யிட்
அரு
செ
கும்
ஆ
எங்
வதனூடாக நாம் வேண்டிய
நடைபெறும் கும்பாபிஷேக
கும். இதனை அனைவரும்
''என்றும் வேண்டும் இ
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர



பிர
ஆ
பு
நெ
பே
ஒ
னு
சிவ
எம்மின விடியலுக்கும், ஆ
பெருமானை இறைஞ்சி வே
பா. தனபாலன் (இணை

### ஆலயத் தொ

''நாமுண்டு நந்தர்ம மு
நம் சமூகத்திற்கே நற் வெ
அருள் மிகு மனோன்ம
கும்பாபிஷேக சிறப்பு மல
சபையினர் ஆகிய நாம் மகி
வெளிக்கொணர்கின்றது. ம
பரியம் சைவ சமயத்தின் ம
எமது ஆலயம் இவ்வூர் மக்
பங்காற்றுகின்து. இவ்வால
கலத்தின் உணர்வுகளை பு
வாழ்த்துகின்றோம். எமது
வாழ்த்துரை வழங்கவும் வா
''மங்காது வளரட்டும் ம
எங்குமே கேட்கட்டும் எ
தொ

குகா பிறதேஸ்
(KUGA BRO THERS)
சகல விதமான கட்டடப்
பொருள்களினதும்
பெயின்ற் வகையினதும் சாம் ராஜ்யம்.
டிப்போ முன்பாக
பலாலி வீதி, கோண்டாவில்.

லிங்கம் அன்கோ
சகல விதமான இரும்புப் பொருள்களும்,
உலோக பொருள்களுக்கும் நாட வேண்டிய
இடம்.

நாதன் பல்பொருள் வாணிபம்
சகலவிதமான மளிகைப்
பொருள்களையும் பான்ஸி
வகைகளையும், ஒரே கூரையின் கீழ்
பெற்றுக்கொள்ள நாடவேண்டியஇடம்.
துவாரகை வீதி, கோண்டாவில்
வடக்கு,கோண்டாவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ன்மணி அம்பிகா சமேத சிவபூதவராயர் தேவஸ்தான



## ...டபந்தன_பஞ்சகுண்டபக்ஷ

# ...றப்பு மலர் – 29.10.2012

### அருளாசிச் செய்தி



*சிவனேயச் செல்வர்களுக்கு*

கோண்டாவில் வடக்கில் சிவபூதராயராக இருந்து அருளாட்சி புரியும் மனோன்மணி அம்பாளுக்கு கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். இறைவனுடைய பூரணமான அருளைப் பெற்றுத்தரும் கும்பாபிஷேக தரிசனமாகும். இதனைச் செய்வதும் செய்விப்பதும் புண்ணியத்தினுடைய அடையாளமாகும். மனித வாழ்வை மேன்மையடையச் செய்யும் இறைவழிபாடு ஆலயத்திருவிழாக்களும் நம்மை நாமாக வாழ வழிகாட்டுகின்றன. எங்கும் பரந்திருக்கும் இறைவனை உருவம் கொடுத்து வழிபடு...க நாம் வேண்டியதை வேண்டியவாறு இறைவன் வழங்குகின்றான். இங்கு இன்று ...றும் கும்பாபிஷேகம் ஆலயத்திற்கும், மக்களுக்கும் புனிதத்தை ஏற்படுத்துவதா...னை அனைவரும் தரிசித்து மண்ணில் நல்லவண்ணம் வாழ்வோமாக!

...றும் வேண்டும் இன்ப அன்பு''

...ஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்.

### இறை அருளை வேண்டுவோம்



எல்லாம் வல்ல இறைவனை அறியச் செய்து, தன்னையும் தான் பிறந்த பிறவியின் பயனை அறியச் செய்வது ஆலய வழி பாடு. ஆன்மா லயப்படும் இடம் ஆலயம். இந்த ஆலயங்களைப் புனரமைத்து கும்பாபிஷேகம் செய்து அவ்வூர் மக்களை ஆன்மீக நெறி வழி நடக்க வழிகாட்டும் கைங்கரியம் போற்றுதலுக்குரிய பேறு ஆகும். சைவசமய பாரம்பரியங்கள், கலாசாரப் பேறுகள், ஒழுக்கங்கள், விழுமியங்களை எம்மவர்களுக்கு ஆலயங்களினூடாக ஆற்றுப்படுத்த வேண்டிய முக்கிய காலத்தில் எம் மூர் சிவபெருமானுக்கு இன்று மகாகும்பாபிஷேகம். இந் நன்நாளில் ...விடியலுக்கும், ஆன்மீக எழுச்சிக்கும் பண்பாட்டு விழிப்புக்கும் வலு கிடைக்க எம் ...னை இறைஞ்சி வேண்டுவோமாக.

...பாலன் (இணைப்பாளர்), யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

### ...யத் தொண்டர் சபையினர் வாழ்த்துச் செய்தி

...ண்டு நந்தர்ம முண்டு அவ்வழியே ஆற்றுவோம்
...மூகத்திற்கே நற் தொண்டு''

...ள் மிகு மனோன்மணி அம்பிகா சமேத ஸ்ரீ சிவபூதவராயர் தேவஸ்தான மகா...ஷேக சிறப்பு மலர் வெளியீட்டுக்கு வாழ்த்துரை வழங்குவதில் தொண்டர் ...ர் ஆகிய நாம் மகிழ்ச்சி அடைகின்றோம். சமயம் மனிதனிலுள்ள தெய்வீகத்தை ...கொணர்கின்றது. மகா கும்பாபிஷேகம் ஆனது எமது பண்பாடு கலாசாரம் பாரம் ...சைவ சமயத்தின் மகத்துவம் என்பனவற்றை பிரதிபலிக்கின்றது. அந்த வகையில் ...லயம் இவ்வூர் மக்களின் வளர்ச்சியிலும் உயர்விலும், பண்பாட்டிலும் முக்கிய ...கின்து. இவ்வாலயத்தின் கும்பாபிஷேக சிறப்பு மலர் வெளியிடுவது உள்ளக் ...ர உணர்வுகளை புலப்படுத்துவதால் சிறப்பு மலர் சிறப்புற விசேட வாழ்த்தினை ...கின்றோம். எமது திருத் தொண்டினை தெய்வப்பணிக்காக அர்ப்பணிக்கவும், ...ரை வழங்கவும் வாய்ப்புத்தந்த அறங்காவலர் குழுவினருக்கு எமது நன்றிகள்.

...காது வளரட்டும் மாண்புமிகு சைவமதம்
...மே கேட்கட்டும் எம்கோயில் மணிஓசை''

தொண்டர் சபையினர், அருள் மிகு மனோன்மணி சமேத,
ஸ்ரீ சிவபூதவராயர் தேவஸ்தானம்.

மலர் ஆக்கம்: அ. இராஜேந்திரன் - பொருளாளர்

### தலைவரின் வாழ்த்துச் செய்தி



கோண்டாவில் வடக்கில் அமைந்துள்ள எமது ஆலயம் ஒரு நூற்றாண்டுக்கு மேல் கடந்து இன்று புதுப்பொலிவுடன் திகழுகின்றது. ஆரம்பத்தில் ஒரு கொட்டிலில் இருந்த ஆலயம் பல தலைவர்கள், பொதுமக்கள், நலன் விரும்பிகள் ஆகியோரின் விடா முயற்சியினால் பல படிகள் முன்னேறியுள்ளது. இந்த கும்பாபிஷேகத்தைக் காணும் இந்த நன்னாளிலே, எமக்கு பல வழிகளிலும் உதவியவர்களைப் போற்றுவதும் நன்றி கூறுவதும் நம் கடமையாகும். எமது ஆலயத்தில் சகல உற்சவங்களும் காலத்துக்குக் காலம் கிரமமாக நடை பெறுகின்றது. இந்த நன்னாளில் கோயில் சிவாச்சாரியார் அவர்களையும் கோயில் திருப்பணி வேலைகளைச் செய்தவர்களுக்கும் நாம் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். கோயில் திருப்பணி வேலைகளை தனித்தனியாக செய்வதற்காக பணஉதவிகளைச் செய்தவர்களுக்கும் நன்றி கூறக்கடமைப் பட்டுள்ளோம். எமது வேலைகளுக்கு பல வழிகளிலும் மின்சார சபையினர் உதவியுள்ளனர். எமது நிர்வாக சபை உறுப்பினர்களும் எமது திருப்பணி வேலைகளுக்கு உதவி செய்துள்ளனர். நம் ஊர் இளைஞர்கள் இரவு பகல் என்று பாராது உழைத்து உள்ளனர். இந்த நன்னாளிலே சகலருக்கும் எம் பெருமானின் அருட் கடாட்சம் கிடைக்க வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

குறிப்பாக எமது வெளிநாட்டில் வசிக்கும் எமது ஊர் மக்கள் செய்யும் உதவிகளை மறக்க முடியாது என்பதை நினைவுபடுத்துகின்றேன்.

சி. சிறீபாலசிங்கம்

### செயலாளர் வாழ்த்து



கோண்டாவில் வடக்கில் அமைந்துள்ள எம் பெருமானின் கும்பாபிஷேகம் இன்று நடைபெறுகின்றது. ஆரம்பத்தில் சிறிய கோயிலாக இருந்து இன்று பல கட்டடங்களையும் பல சிறப்பு அம்சங்களின் பெரு முயற்சியும் முன்னோரின் அயராத உழைப்பும் எமது கோயில் இன்றைய நிலைக்கு காரணமாகும். ஆரம்ப காலத்தில் எமது ஊர் விவசாயிகள், சுருட்டுத் தொழிலாளர்கள் செய்த தியாகம் போற்றத் தக்கது. ஆரம்ப காலத்தில் தனி அலங்காரத் திருவிழாவாக ஆரம்பித்து பின் பத்துத் திருவிழாக்களாக மாறியது. பின் கொடித் தம்பம் அமைத்து உற்சவங்களாக மாற்றமடைந்தது. தேர், தீர்த்தம், அன்ன தானம் என்பன சிறப்பாக நடைபெறுகின்றது. இத் தருணத்தில் எமது கோயில் சிவாச்சாரியார் அவர்களையும் திருப்பணிவேலை செய்தவர்களையும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். எம்பெரு மானின் அருளினால் எம் ஊர் மக்கள் பெரிதும் முன்னேறியுள்ளார்கள். இந்தநேரத்தில் வெளிநாடுகளில் வசிக்கும் எமது மக்களின் உதவிகளை மறக்கமுடியாது. கடந்த காலம் உட்பட இன்றுவரை உள்ள நிர்வாகசபையினரின் ஒத்துழைப்புகளை மறக்க முடியாது. எமது ஆலயம் மேன்மேலும் வளர எம்பெருமானின் அருளும் அடியவர்களின் ஒத்துழைப்பும் மேன்மேலும் கிடைக்க வேண்டும் எனக் கடவுளை வேண்டி மேலும் ஆலயம் சிறப்படைய வாழ்த்துகின்றோம்.

இ. அருணாசலம்

### கோயில் வரலாறு

இற்றைக்கு 1900ஆம் ஆண்டளவில் ஒரு வெறும் காணியைத் துப்புரவு செய்த போது வில்வம் கன்று ஒன்று தென்பட்டது. இந்தக் காணி உரிமையாளர் இரவில் படுத்துறங்கும் போது இறைவன் தோன்றி வில்வ மரத்தடியில் தன்னை வைத்து வணங்குமாறு காட்சி கொடுத்தார். பின் ஒரு கொட்டிலில் கோயில் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்ப பூசகர் பூசாரி அப்பாக்குட்டி. பின் மக்களினால் தெரிவு செய்யப்பட்ட நிர்வாகசபை உருவானது. ஆரம்ப காலத்தில் முன்னின்று உழைத்தவர் சின்னத்தம்பி கார்த்தியேசு, இவருடைய காலத்தில் ஆலயத்தின் மணி கந்தர் சின்னையாவினால் அமைக்கப்பட்டது. மக்களின் பெருமுயற்சியினாலும் கூட்டுத்தொழிலாளிகளின் முயற்சியாலும் கோயில் பல வழிகளிலும் திருப்பணிகள் முன்னெடுக்கப்பட்டது. ஆரம்பத்தில் அலங்கார உற்சவத்திருவிழாக்கள் 10 ஆக இருந்தது. இதை ஆரம்பித்தவர் அப்பாக்குட்டி முத்துக்குமாரு ஆவார். பின் அலங்கார உற்சவத்தை மஹோற்சவமாக மாற்ற வேண்டும் என்ற எண்ணம் உதித்தது. இந்தக் காலத்தில் பரிபாலன சபையில் இருந்த செ. இராசசிங்கம் (லாறி) தனிப்பட்ட முறையில் பண உதவி செய்து கொடித்தம்பத்தை நாட்டினார். இந்தக் காலகட்டத்தில 9 ஆம் திருவிழா செய்த உபயகாரர் த.பொன்னுத்துரை தானே கட்டுத் தேர் செய்வதற்குரிய முழுப்பொறுப்பையும் ஏற்றார். சிறிது காலத்தின் பின் கட்டுத்தேர் பழுதடைந்த காரணத்தினால் எமது கிராம மக்கள் எவ்வளவு பணம் செலவு ஏற்பட்டாலும் சித்திரத்தேர் உருவாக்கவேண்டும் என்ற விருப்பத்துடன் தேர்ப்பணிக்கு வேண்டிய ஒழுங்குகள் செய்யப்பட்டன. இதனை பிரகாரம் பல சித்திரத் தேர்களை அமைத்து புகழ் பெற்ற கலாகேசரி தம்பித்துரை அவர்கள் தேர் அமைக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். 1984 ஆம் ஆண்டு சித்திரை மாதம் பூரணைத் தினத்தன்று சித்திரத்தேர் செய்வதற்குரிய அச்சு வைக்கப்பட்டது. நாட்டில் ஏற்பட்ட வன் செயலினாலும் பொருளாளராக இருந்த செ. இராசசிங்கம் மற்றும் எமது மக்களும் அகால மரணடைந்த தனாலும் தேர்வேலை சிறிது காலம் பிற்போடப்பட்டது. எம்பெருமானுடைய புதிய சித்திரத் தேர் பணியை 1988 ஆம் ஆண்டு தை மாதம் தெரிவு செய்யப்பட்ட பரிபாலன சபையார் ஏற்று எம் மக்களின் பண உதவியினாலும், வெளிநாட்டில் உள்ளவர்களின் பண உதவியினாலும் தம்பித்துரை அவர்களின் விடா முயற்சியினாலும் சித்திரத் தேர் வெள்ளோட்டம் 1988 ஆம் ஆண்டு ஆனி மாதம் நடைபெற்றது.

எமது ஆலய திருப்பணிகள் காலத்துக்குக் காலம் தெரிவு செய்யப்பட்ட பரிபாலன சபையினரால் மேற்கொள்ளப் பட்டது. மேலும் பலர் பலவித திருப்பணிவேலைகளையும் தொண்டுகளையும் செய்வதற்கு முன் வந்துள்ளார்கள்.

சிறீராம் ஹாட்வெயர்
சகல வகையான கட்டடப் பொருள்களுக்கும் நாடவேண்டிய இடம்.
கோண்டாவில் சந்தி,
பலாலி வீதி, கோண்டாவில்.

சிவன் மோட்டோர்ஸ்
Dulox Glidden ஆகியவற்றின் ஏகவிநியோகத்தர்கள்
SHIVAN MOTORS STORES
No. 192, 194(70/1), Manipay Road.
Jaffna.
021 222 2763/ 021 222 8647

VASHANTH
6 Colours DIGITAL PRINTING
வசந் டிஜிற்றல் பிறிண்டிங்
தொ.பே.: 021 224 1676
Hoarding, Name Boards, Light Box, Banner Printing, Sticker Printing & All Offset Printing.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாகனங்கள் விற்பனைக்கு

01. லங்கா அசோக் லேடன் NA-xxxx 54 ஆசனம் உள்ள யாழ்ப்பாணம் - முல்லைத்தீவு ரூட் பஸ் விற்பனைக்குள்ளது.
02. இசுஇசு கன்ரர் 350 தட்டு GL-xxxx 16½'' நீளம், வெள்ளை. உடன் விற்பனைக்கு உண்டு.
03. இசுஇசு கன்ரர் சிங்கிள் வீல் 150, வெள்ளை 10½ அடி நீளம் உடன் விற்பனைக்கு உண்டு.
04. வவுனியா - யாழ்ப்பாணம் ரூட் அசோக் லேடன் பஸ் ND- xxxx
05. யாழ்ப்பாணம் - கிளிநொச்சி ரூட்டுடன் அசோக் லேடன் பஸ் NA-xxxx விற்பனைக்கு உள்ளது.

**தொடர்பு: 0770781516**

(24889)(3.14.8)

## மரண அறிவித்தல்

### இராமசாமி இந்திரசித்து (ரெயிலர் இந்திரன்)



நாயன்மார்கட்டை, பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட (ரெயிலர் இந்திரன்) என்று அன்பாக அழைக்கப்படும் இராமசாமி இந்திரசித்து கடந்த (25.10.2012) வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமசாமி - கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும், இராஜேஸ்வரியின் (ராசாத்தி) அன்புக் கணவரும், சோபா, சுமன், இரவீச்சந்திரன், தீபா ஆகியோரின் அன்புத் தந்தையும், சதீஸ்குமாரின் மாமனும், அஸ்வினியின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 64, சந்தனமாதா கோயில் வீதியில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று இன்று (29.10.2012) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

64, சந்தனமாதா கோயில் வீதி,
அரியாலை.

(24896) (45.6.7)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்
### துரைச்சாமி நாகராஜா

தோற்றம்
10.05.1944

மறைவு
30.09.2012

கடந்த (30.09.2012) அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் துரைச்சாமி நாகராஜா அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (29.10.2012) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சுப்பர் மடம்,
பருத்தித்துறை.

(24783 (45-6-7)

**குடும்பத்தினர்.**

---

விமான டிக்கட்டுகள் மிகக்குறைந்த கட்டணத்தில் பெற்றுக் கொள்ள...............

**ரெட்டினா டுவர்ஸ் & ட்ரவல்ஸ்**
இல. 687, வைத்தியசாலை வீதி,
யாழ்ப்பாணம்.

மேலதிக விவரங்களுக்கு அழையுங்கள்
(சி/4418)(3,6,7) தொ.பே - 0212219686

## வீடு விற்பனை

சென். யோசப் வீதி, வளன்புரம் கொழும்புத்துறையில் 2½ பரப்புக் காணியில் சகல வசதிகளுடனான வீடு விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு: 0776146 434**
ஜென்சின் லூட்ஸ்மரியா.

(24902)(3.14)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



அமரர்
### சி. பொ.வ. மா.க. முதலியார்

கடந்த (14.10.2012) அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் சி. பொ.வ.மா.க. முதலியார் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (29.10.2012) திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று அதனைத் தொடர்ந்து மானிப்பாய் பிரதேச சபையில் மதியபோசன நிகழ்வு நடைபெறும். இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

முதலியார் வளவு,
கட்டுடை,
மானிப்பாய்.

**குடும்பத்தினர்.**

(24903) (45.6.7)

## அலுவலக காரியதரிசி வெற்றிடம் (ஆண்/பெண்) (Office Secretary)

பரந்தன்- பூநகரி பாதை புனரமைப்பு நிறுவனமான K.D. Eban and Sons (pvt) Ltd உடைய பரந்தன் அலுவலகத்துக்கான மேற்படி வெற்றிட விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

தகைமை:
- ★ A/L சித்தி அல்லது அதற்கு மேற்பட்ட தகைமைகள்.
- ★ கணினி தட்டச்சு பரிச்சயமாயிருத்தல் வேண்டும்.
- ★ ஆங்கிலம் எழுத, பேசக் கூடியவராயிருத்தல் வேண்டும்.
- ★ Ms Office இல் புலமை அவசியம் தேவை.

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:
**077 6135 350**
mayonago @ hotmail. com
K.D. Eban and Sons (pvt) Ltd.
பரந்தன் - பூநகரி.

(24226) (45.7.6)

## பரிசளிப்பு தினம்

வடமராட்சி, ஒக்.29

அம்பன் அ.மி.த.க. பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று முற்பகல் 9.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். கல்லூரி அதிபர் பொ.சிவராசா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக அம்பன் கமநல சேவை நிலைய பெரும்போக உத்தியோகத்தர் திருமதி சிவகௌரி திருப்பதியும் சிறப்பு விருந்தினராக வடமராட்சி வலய சங்கீத உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி நாகேந்திரனும் கலந்துகொள்வார்கள். (16-8)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### இராசதுரை அமிர்தராணி

பிறப்பு 1950 . 11 . 10
இறப்பு 2011 . 11 . 10

எம் குடும்பத்தின் தீபம் என... எம் கொலு விளக்காய் அமர்ந்தவரே....
உன் அருமைகளை புரிய வைத்து.... அமர்தராணி எங்கு சென்றாய்..?
உன் பிரிவின் வலி தாழாமல்... பிள்ளைகள் நாம் அழுகின்றோம்....
வாழ்க்கை வலுவிழந்து போனதம்மா.. இனி உன் வார்த்தைகள் ஏதும்
எமக்கு ஆறுதல் தாராதோ...? எமை வீட்டு உன் உடல்
பிரிந்து போயிருக்கலாம்- ஆனால்
உன் நினைவுகள் என்றும் எம்மோடு தான்....
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

சங்கானை மேற்கு, சங்கானை.

(24725) (சி.9.56)

**குடும்பத்தினர்.**

## மட்டுப்படுத்தப்பட்ட மன்னார் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் சின்னக்கடை கிளை பொதுச்சபை உறுப்பினர்களுக்கான அறிவித்தல்கிளை பொதுச்சபை ஆலோசனைக் கூட்டம் - 10.11.2012

மன்னார் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின், சின்னக்கடை கிளையில் அங்கத்துவம் பெற்றுள்ள அங்கத்தவர்கள் அனைவருக்கும் அறியத்தருவது:

மேற்படி கிளையின்கிளை பொதுச்சபை ஆலோசனைக் கூட்டம், எதிர்வரும் கார்த்திகை மாதம் 10 ஆம் திகதி சனிக்கிழமை (10.11.2012) முற்பகல் 10.30 மணியளவில், மன்னார் பல நோக்கு கூட்டுறவுச் சங்க தலைமைக் காரியாலய மேல்மாடி கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில், கிளையின் எதிர்கால வளர்ச்சி கருதி, புதிய அங்கத்தவர்கள் இணைத்துக் கொள்ளல், இந்தக் கிளையில் உள்ள அங்கத்தவர்களை, அவர்களின் சுய விருப்பத்தின் பேரில், தமது வதிவிடத்துக்கு அருகில் உள்ள கிளைகளில், அங்கத்துவத்தை பெறுவதுக்கும், கோப் சிற்றி வியாபாரத்தை மேம்படுத்தும் நோக்குடனும், இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளது.

எனவே இந்தக் கிளையின் அங்கத்தவர்கள் அனைவரையும், இந்தக் கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின் றோம்.

மட். மன்.பல நோ.கூ.சங்கம்,
வயல் வீதி,
மன்னார்.

(சி/4358) (45-6-7)

தலைவர்:
எஸ். ரெட்ணசிங்கம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளின் மீதான தடை நீங்கும் வரை எமது போராட்டம் ஓயாது தொடரும்

## வைகோ நேற்று சூளுரை

விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடை நீங்கும் வரை போராட்டம் நடத்தப்படும் என்று ம.தி.மு.க. செயலர் வைகோ சூளுரைத்துள்ளார்.

கொடைக்கானலில் சட்ட விரோத நடவடிக்கை தடுப்பு தீர்ப்பாயம் சார்பில் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு விதிக்கப் பட்ட தடை சரியா? தவறா? என்பது தொடர்பான விசாரணை நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியது. நீதிபதி வி.கே. ஜெயின் தலைமையில் நடைபெற்ற மேற்படி விசாரணையில் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, சட்டத்தரணிகள், பொலிஸார் கலந்து கொண்டனர். முதலாவது சாட்சியாக கியூ பிரிவு பொலிஸ் அதிகாரி ரங்கசாமி, 2 ஆவது சாட்சியாக செங்கல்பட்டு பொலிஸ் அதிகாரி பாஸ்கரன் ஆகியோரிடம் விசாரணை நடத்தப்பட்டது.

தொடர்ந்து நேற்று விசாரணை ஆரம்பமாகியது. விவாதம் முடிந்து



வெளியே வந்த வைகோ செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

விடுதலைப் புலிகளை இந்திய அரசு சட்ட விரோத தடுப்புச் சட்டத்தின் கீழ் 2 ஆண்டுக்கு ஒரு முறை தடை செய்து வருகிறது. தடை செய்தது சரியா? அல்லது தவறா? என்பதை உறுதிப்படுத்த தீர்ப்பாயத்துக்கு அனுப்புகிறது. இதுகுறித்து தீர்ப்பாயம் விசாரணை நடத்துகிறது.

கடந்த முறை தீர்ப்பாயத்தில் நானும் பங்கு பெற வேண்டும் என்று கேட்ட போது விசாரணையில் விவாதம் நடத்த என்னை அனுமதிக்காவிட்டாலும் நான் கேள்வி கேட்கவும், கருத்துக்களைக் கூறவும், நீதிபதி விக்ரம்சிங் அனுமதி அளித்தார். ஆனால் 2010 ஆம் ஆண்டு நவம்பர் 12 ஆம் திகதி விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடை செய்தது சரிதான் என நீதி பதி விக்ரம் சிங் தீர்ப்பளித்தார்.

தடை செய்தது சரியா? தவறா? என விசாரணை நடத்தத்தான் 2012 இல் டில்லி நீதிபதி ஜெயின் தலைமையில் இந்த விசாரணை ஆணையகம் அமைக்கப் பட்டுள்ளது. இந்தியாவில் இலங்கை இராணுவ அதிகாரிகளுக்கு பயிற்சி அளிப்பதை அனைத்துத் தரப்பினரும் எதிர்த்து வருகின்றனர்.

கடந்த 2 தினங்களுக்கு முன்பு இலங்கை பாதுகாப்புச் செயலாளரும், இந்தியப் பாதுகாப்புச் செயலாளரும் டில்லியில் சந்தித்து தமிழ்நாட்டில் வெலிங்டனில் மட்டும் பயிற்சி அளிக்க முடிவு எடுத்து உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்தியாவில் மன்மோகன் சிங் அரசு நடைபெறுகிறதா? என்று ஐயம் ஏற்பட்டு உள்ளது. விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடை நீங்கும் வரை போராட்டம் நடத்தப்படும்- என்றார். (வ)

## உலகின் மிகப் பழமையான மாயன் நாகரிகக் கல்லறை அமெரிக்காவில்



*மத்திய அமெரிக்க நாடான கவுதமாலாவின் மேற்கில் ரெடால்குலே பகுதியில் அமைந்துள்ள கோயிலில் பழங் காலத்து மாயன் நாகரிக கல்லறையை ஆராய்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.*

*இதுகுறித்து ஆராய்ச்சியாளர்கள் தெரிவித் ததாவது:-*

*குறித்த கல்லறை இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பு இந்தப் பகுதியை ஆண்ட ஒரு மதத் தலைவரின் கல்லறையாக இருக்கலாம். ஆனால் இந்தக்கல்லறையில் மனித எலும்புகள் எதுவும் கிடைக்கவில்லை. இங்கு எமரால்ட்ரி எனப்படும் வைர ஆபரணங்களும், மனிதத் தலையுடன் கூடிய கழுகுச் சிற்பமும் கிடைத்துள்ளன. கி.மு. 700- 400 ஆம் ஆண்டு காலகட்டத்தில் இது கட்டப்பட்டிருக்கலாம். இந்தக் கல்லறையில் புதைக்கப்பட்ட மன்னருக்கு கட்ச்மேன் என்று ஆராய்ச்சியாளர்கள் பெயரிட்டுள்ளனர். இவர் மத்திய அமெரிக்காவிலுள்ள ஒல்மெக் மற்றும் மாயன் நாகரிகங்களை இணைக்கும் ஒரு பாலமாக இருந்திருக்கலாம்.*

*கி.பி. 250- 800 ஆண்டு காலகட்டங்களின் போதும், மத்திய அமெரிக்காவில் மாயன் நாகரிக மக்கள் வாழ்ந்துள்ளனர். அவர்களின் ஆட்சி ஹொண்டூராஸ் முதல் மெக்சிகோ வரை பரந்து விரிந்து இருந்தது- என்றனர். (வ)*

## கட்டணைச் செலுத்தாவிட்டால் எரிபொருள் குறைப்பு

### பெற்றோலிய கூட்டுத்தாபனம் எச்சரிக்கை

கொழும்பு,ஒக்.29

50 மில்லியன் ரூபாவை செலுத்தாவிட்டால், எரிபொருள் விநியோகத்தை குறைக்கப் போவதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மின்சார சபைக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இலங்கை மின்சார சபை மின்சார உற்பத்தியின் நிமித்தம், பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் இருந்து கடன் அடிப்படையில் எரிபொருளை கொள்வனவு செய்து வருகிறது.

இதனால் பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு மின்சார சபை 50 மில்லியன் ரூபாவை செலுத்த வேண்டியுள்ளது.

இதனையடுத்து குறித்த நிலுவையை செலுத்துமாறும் இல்லையேல் எரிபொருள் விநியோகத்தை குறைக்கப்போவதாகவும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

எனினும் மாதாந்தம் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு தமது சபை 1.3 மில்லியன் ரூபாவை எரிபொருள் கொள்வனவுக்காக செலுத்துகின்றமையால், நிலுவையை செலுத்த முடியாதுள்ளது என்று மின்சார சபை தெரிவித்துள்ளது.

எனவே இந்த விடயத்தை திறைசேரியின் கவனத்துக்கு கொண்டு செல்லப்போவதாக மின்சார சபை கூறியுள்ளது. (ச)

## '13' பறிபோனால் வேண்டாம் உறவு இலங்கையுடன்

### இப்படிக் கூறுகிறார் தமிழக வாழ்வுரிமை கட்சி நிறுவுநர்

இலங்கையுடன் இந்தியா தொடர்பு வைத்துக் கொள்ளக் கூடாது. அவர்களுடன் எதற்கு உறவு என்று என்று தமிழக வாழ்வுரிமை கட்சியின் நிறுவுநரும் தலைவருமான வேல்முருகன் கேள்வி எழுப்பியுள்ளார்.

வேலூரில் செய்தியாளர்களுக்கு அவர் பேட்டி அளிக்கையில் தெரிவித்ததாவது:-

சாதி, மதத்துக்கு அப்பாற்பட்டு தமிழர் நலன் காக்கவும். உலகத் தமிழர் நலன்காக்கவும் தமிழக வாழ்வுரிமைக் கட்சி போராடி வருகிறது. ஈழத் தமிழர் பிரச்சினை, காவிரி, முல்லைப் பெரியாறு நதிநீர் பிரச்சினைகளில் கவனம் செலுத்தி வருகிறோம்.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி, ஜெயவர்த்தன கூட்டு ஒப்பந்தத்தின்



படி ஈழத்தமிழர் நலன் காக்க அதில் உள்ள 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை ரத்துச் செய்ய இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ நடவடிக்கை எடுத்து வருகின்றார். இதை ரத்து செய்தால் இலங்கை அரசுடன் இந்திய அரசு எந்தவித தொடர்பும் வைத்துக் கொள்ளக் கூடாது ஈழத்தமிழர்களைக் கொன்று குவித்த இலங்கை ஜனாதிபதியை போர்க் குற்றவாளியாக அறிவிக்க இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்றார். (வ)

## இறுவட்டு வெளியீடு



யாழ்ப்பாணம், ஒக்.29

கிறிஸ்ரோமேரியனின் 'யாழ்.இசை' இறுவட்டு வெளியீட்டு விழா நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் யோசப்பாலா தலைமையில் திருமறைக் கலாமன்றத்தின் பிரதான வீதியில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் இடம்பெற்றது.

யாழ். இலக்கியக் குவியத்தின் தலைவர் மருத்துவர் க.சோதிநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன நிகழ்ச்சித் தொகுப்பாளர் சாளினி சாள்ஸ் வெளியீட்டுரையை நிகழ்த்தினர்.

இறுவட்டின் முதற்பிரதியை பிரதம விருந்தினராக கலந்துகொண்ட யாழ். இலக்கியக் குவியத்தின் தலைவர் மருத்துவர் சோதிதாசனிடம் இருந்து யாழ்.மாநகர சபை உறுப்பினர் அ.பரஞ்சோதி பெற்றுக்கொண்டார். (ம-23)

## தொடர்மாடி வீடமைப்புத் திட்டம் கிருலப்பனையில் நிர்மாணம்

கொழும்பு,ஒக்.29

கொழும்பு, கிருலப்பனையின் மஹிந்தபுர என்ற இடத்தில் 560 வீடுகள் கொண்ட தொடர்மாடி வீடமைப்புத் திட்டமொன்றை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தத் திட்டத்துக்காக அரசு முதல்கட்டமாக 6,699 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது. ஜனாதிபதியின் மஹிந்த சிந்தனையின் கீழ் கொழும்பு வாழ் மத்திய தர வகுப்பினர்களுக்காக இந்த வீடமைப்புத் திட்டம் நிர்மாணிக்கப்படவுள்ளது.

தொடர் மாடி வீடமைப்புத் திட்டமொன்றை கிருலப்பனையில் நிர்மாணிப்பதற்கு அமைச்சர் விமல் வீரவன்ச அமைச்சரவைக்கு ஆலோசனை வழங்கியிருந்தார். இந்தத் திட்டத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இந்தத் தொடர்மாடி 24 மாடிகளைக் கொண்டது. மொத்தமாக 560 வீடுகள் நிர்மாணிக்கப்படும். இந்தத் தொடர்மாடி வீடுகள் 560 சதுர அடி, 650 சதுர அடி, 850 சதுர அடிகளைக் கொண்ட வீடுகளாகும்.

இந்த வீடமைப்புத் திட்டத்தில் விளையாட்டு மைதானம். சமூக நிலையம், போக்குவரத்து, பஸ் நிலையம், சிறுவர் பூங்கா, சந்தை போன்ற நிர்மாணப்பணிகளும் மேற்கொள்ளப்படும்.

வீடமைப்பு அமைச்சின் கீழ் உள்ள இலங்கை பொறியியற் கூட்டுத்தாபனம், 3வருட காலத்துக்கு இந்த நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளும் என்று வீட மைப்பு அமைச்சு கூறியுள்ளது.

இந்த வீடுகளைப் பெற விரும்புவர்களுக்கு அரச வங்கிகள் ஊடாக கடன் பெற்றுக் கொள்ள வசதி செய்து கொடுக்கப்படும் என்று வீடமைப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ச)

## 25 ஆண்டுகளாக சட்டவிரோதமாக இந்தியாவில் வாழ்ந்தவர் கைது

25 ஆண்டுகளாக சட்ட விரோதமான முறையில் இந்தியாவில் தங்கியிருந்து மீண்டும் இலங்கை செல்ல முயன்ற முதியவரையும், அவரிடம் பணம் பறித்த ஓட்டோச் சாரதிகள் இருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வடமராட்சியில் துன்னாலைப் பகுதியைச் சேர்ந்தவர் மோசஸ் மகேந்திரன் (வயது 68). அவர் சுற்றுலா விசாவில், 1987 இல் சென்னைக்குச் சென்றுள்ளார். விசா முடிந்து நாடு திரும்பாமல், 21 ஆண்டுகளாக ஹைதராபாத், பெங்களூர், புவனேஸ்வர், டில்லி, ஜம்மு, மும்பை நகரங்களில் [illegible] வந்தார். இவரை சென்னை பொலிஸார் தேடி வந்தனர்.

கடந்த 4 ஆண்டுகளாக புட்டபர்த்தியில் பணி புரிந்து வந்த அவர், மீண்டும் கள்ளப் படகு மூலம் சட்ட விரோதமாக இலங்கை செல்லத் திட்டமிட்டு, கடந்த வெள்ளிக்கிழமை இராமேஸ்வரத்துக்குச் சென்றார்.

அவரிடமிருந்து, ஸ்ரீராம் நகரைச் சேர்ந்த ஓட்டோச் சாரதிகள் சுரேஷ், (வயது 24) காத்தலிங்கம், (வயது 26) மற்றும் ரயில்வே பீற்றர் வீதி சீனி, ஆகியோர் 13 ஆயிரம் ரூபா இலங்கை பணத்தை பறித்துச் சென்றனர் என்று மோசஸ் பொலிஸில் தெரி வித்தார்.

ஓட்டோச்சாரதிகளான சுரேஷ், காத்தலிங்கம், [illegible] பொலிஸார் கைது செய்தனர். (வ)

## வரணி சந்தைப் பகுதியில் மூடப்பட்ட நிலையில் கடைகள்

சாவகச்சேரி பிரதேச சபைக்கு உரியதும் வரணி பொதுச்சந்தைப் பிரதேசத்தில் அமைந்துள்ள மூன்று வர்த்தக நிலையங்கள் இதுவரை மூடப்பட்ட நிலையிலேயே உள்ளன.

2006 ஆம் ஆண்டு இந்தப் பகுதியில் ஏற்பட்ட மக்கள் இடம்பெயர்வை அடுத்து இந்தப் பிரதேச வர்த்தக நிலையங்கள் பல இனந்தெரியாதவர்களால் உடைக்கப்பட்டுப் பொருள்கள் களவாடப்பட்டிருந்தன.

அதன்போது குறித்த வர்த்தக நிலையங்களும் சூறையாடப்பட்டன. சேதமடைந்த கட்டடங்களை சாவகச்சேரிப் பிரதேச சபை புனரமைத்துக் கொடுத்தபோது வர்த்தக நிலைய உரிமையாளர்கள் வர்த்தகத்தைத் தொடர்ந்து நடத்த இதுவரை முன்வரவில்லை.

இந்தக் கட்டடங்களுடன் அமைந்த பொதுச்சந்தை ஓரிரு வியாபாரிகளுடனேயே இயங்குகின்றது. தற்போது இந்தச் சந்தை மூலம் எதிர்பார்த்த வருமானத்தை பெற முடியாத நிலையில் பிரதேச சபை மிகவும் குறைந்த தொகைக்கே தனியாருக்கு குத்தகைக்கு விட்டுள்ளது என்று கூறப்படுகிறது. (ம-122)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பே.மேரிசுமித்திரா
யூலனூர்

# அலுவலகம் செல்லும் பெண்களுக்கு

★ அதிகாரிகள், பெரியவர்கள்சக ஊழியர்களிடத்தில் மரியாதை உடையவராக இருங்கள்.
★அலுவலகம் செல்லும் போது அடக்கமான உடை அணிந்து செல்லுங்கள்.
★அலுவலகத்தில் சத்தமாகப் பேசாதீர்கள். மற்றவர்கள் உங்கள் மீது கொண்டிருக்கும் மரியாதையைக் குறைத்துவிடும்.
★உங்கள் அலுவலக வேலைகளை நேர்த்தியாக நிறைவேற்றுவதில் ஆர்வமுடையவராக இருங்கள்.
★வீட்டில் ஏற்படும் கோபங்கள், மனஸ்தாபங்களை அலுவலகத்தில் வெளிக்காட்டாதீர்கள்.
★சக ஊழியர்களுடன் பேசும் போது தெளிவாகப் பேசுங்கள் நல்ல சொற்களைப் பாவித்து பேசப் பழகிக் கொள்ளுங்கள்.
★உங்கள் அலுவலக வேலைகளை பொறுப்புடன் நல்லமுறையில் நிறைவேற்றுங்கள்.
★ஒருவரைப் பற்றி மற்றவரிடத்தில் குறை கூறாதீர்கள்.
★இன்முகத்துடன் மற்றவர்களுடன் பேசுங்கள்.
★சக ஊழியர்களுக்கு அலுவலக விடயங்கள் சம்பந்தமாக உங்கள் உதவி தேவைப்படுமிடத்து முகம் சுழிக்காது உதவுங்கள்.
★தேவையற்ற விடயங்களைப் பேசாதீர்கள். தேவையேற்படும் போது உங்கள் திறமைகளை வெளிக்காட்டுங்கள்.
★அலுவலகத்தில் முக்கிய ஆவணங்களைப் பேணுவதில் பொறுப்புடையவராக இருங்கள்.



# அன்னை

ஈர் ஐந்து மாதங்கள்
தாயவளின் கருவறையில்
சுகமான தூக்கங்கள்
அன்னையின் மடியில் தான்
ஆயிரம் ஆயிரம் சுகங்கள்

கருவாக உனை கசங்க வைத்தேன்
கடைசிவரை என்னை கலங்காமல் பார்த்து
உத்தமனாய் இவ் உலகும் போற்றும்
அறிவாளியாய் என்னை ஈன்றெடுத்தாய்

அன்பும் பண்பும் அடக்கமும் என் உதிரமாய்
தந்து பணிவான பெண்ணாய் உருவாக்கினாய்


உள்ளே இருந்தவரை உந்தன் கொடி பற்றியிருந்தேன்
வெளியே வந்தவுடன் விட்டு விட்டு போவாயோ – என
விரல் பற்றிக் கேட்கின்றேன்

கருவில் தாங்கிய உயிர் பெற வைத்தவள் நீ
உயிருடன் தொடரும் அன்புப்பாசம் நீ

காத்திருப்பேன் காலமெல்லாம்
உன்னைக் காவிய உருவில் படைக்க
என்றுமே என் தெய்வம் நீயம்மா.

ஜெ.பானுஜா,
கல்வியங்காடு.






# புதுமைப் பெண்

பெண்கள் பிறந்தது
பொம்மைகளாய் வாழவல்ல
பொய்மைகள் உடைத்தெறிய
புதுமைகளை உணர வைக்க
புதுயுகத்தை உலகறியவைக்க..



# மீட்பார் யாருளரோ...



கைத் தொலைபேசியூடாக எமது பெண் பிள்ளைகள் எதைக் கற்கின்றார்களோ, அல்லது என்ன தேவைக்காக அவற்றை உபயோகிக்கிறார்களோ என்ற விடயம் மிகவும் இரகசியமாகவே இருக்கின்றது. ஏனெனில் ஒரு பெண்பிள்ளை கைத்தொலைபேசியோடு எந்நேரமும் இருப்பார். ஆனால் ஏன் பிள்ளை போனை வைத்துக் கொண்டு என்ன செய்யிறாய்?, யாரோடு கதைக்கிறாய் என்றால் ஒன்றுமில்லை. என்னுடைய பிரன்ஸ் உடன் கதைக்கிறேன் என்று பதில் வரும். அவர் கதைப்பது உண்மையில் பிரன்ஸ் ஆக இருக்காது. எல்லாப் பிள்ளைகளும் அப்படியல்ல. இன்று அதிகமான பெண் பிள்ளைகள் கைத்தொலைபேசியூடாக காதல் வயப்பட்டு முன் பின் தெரியாத நபருடன் திருமண பந்தத்தில் இணைந்து கொள்கின்றனர். இறுதியில் வயிற்றில் கருவைக் கொடுத்துவிட்டு ஆண் தலைமறைவாகி விடுவான். இந்த நிலையில் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு அவனைப்பற்றிய முழுமையான விவரங்கள் தெரியாது. வயிற்றிலே உருவான கருவைக் கலைக்க பாதுகாப்பற்ற முறையில் கருக்கலைப்பு செய்து தன் உயிரையும் பறிகொடுத்து, தாய்மையின் புனித தன்மைக்கே களங்கம் கற்பிக்கும் பெண்களயாக எத்தனை பேர் மாறி வருகின்றனர். ஏன் இந்த நிலை? அனைத்தும் கைத் தொலைபேசிகளின் போதைத் தொல்லைக்குள் விழுந்ததன் விளைவுகளே!

இன்று திருமணமான பெண்கள். கன்னிப் பெண்கள் அனைவரும் மிகவும் சுலபமாக அருந்தி வரும் போதைப் பொருளாக கைத்தொலைபேசி முன்னணி வகிக்கிறது.

இந்த விடயம் தொடர்பாக இன்று அனைத்து வீடுகளிலும் பெரும் பூகம்பமே உருவாகியிருக்கின்றது. எனினும் அதன் தாக்கத்தை வெளியில் காட்ட முடியாமல் இன்று எத்தனை பெற்றோர் இரத்தக் கண்ணீர் வடித்து மிகவும் கொடுமையான வேதனையோடு வாழ்ந்து வருகின்றனர்.

சில பெண் பிள்ளைகள் கைத்தொலைபேசியூடாக பல ஆண் நண்பர்களுடன் நட்பு வைத்திருக்கின்றனர். அவர்களுடன் நட்பு ஆரம்பத்தில் சாதுவாக இருக்கும். நாள் ஆக ஆக அவர்களோடு கதைக்கா விட்டால் இவர்களுக்கு தூக்கம் வராது. அவ்வளவு அன்னியோன்னியமாகி விடுவர். படுக்கையில் கூட அந்தத் தொலைபேசியை வைத்துக் கொண்டு தான் இருப்பர்கள். இந்த விடயமானது பெண் இனத்தை முழுச் சமுதாயமும் கேவலமாகப் பார்க்கின்ற நிலையை உருவாக்கி விட்டது. இது தொடர்பாக எமது சகோதரிகளானாலும் சரி, பெண் பிள்ளைகள் ஆனாலும் சரி மிகவும் ஆழமாக சிந்திக்க வேண்டும். தாம் பாழ்பட்டுக் கொண்டிருப்பதை உணர்ந்தும் விடுபட முடியாமல் தவிப்பது மனக் கட்டுப்பாடு இன்மையே.

நன்றாக படித்துக் கொண்டிருந்த மாணவியொருவர் கைத்தொலைபேசியூடாக பல நண்பர்களோடு தொடர்பு கொண்டு அதிலே அதிக விருப்பம் கொண்டு, அந்த நபர் மூலம் பரிமாறப்படுகின்ற தகவல்களை வைத்துக் கொண்டு தன் நண்பிகளின் கதைகளை அவருக்கு கூறி அதனால் தன் நிலைக்கு பெரும் களங்கத்தை ஏற்படுத்தி, தன் உயிரையும் விடத்துணிகின்ற கட்டத்துக்குக் கூட வருகின்றார். மேலும் தன்னை விட அந்த ஆண் நபர் வேறு ஒருவருடனும் கதைக்கக்கூடாது என்ற பொறாமை உணர்வால் தன்னை தானே நாசம் செய்கின்றார்.

குறிப்பாக கைத்தொலைபேசி என்பது இன்று அனைத்து பெண்களையும் வயது வேறு பாடின்றி வரித்து வைத்துக் கொண்டிருக்கிறது என்று தான் சொல்ல வேண்டும். ஒரு சில பெண்கள் தங்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்க்கு கூட 'கைத்தொலைபேசி வேண்டாம் ஆளை விட்டாகாணும்' என்று தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாமல் தவிப்பது கைத்தொலைபேசியோடு நம்ம பெண்கள் படும் பாட்டை பார்த்தோ என்னவோ என்று தான் நினைக்கத் தோன்றுகின்றது.

எம்பெண்கள் கற்பு நெறி தவறாதவர்கள் என்ற பெருமை இப்போது கேள்விக் குறியாகி விட்டது. புதைக்கப்பட்டுவிட்டது. பண்பாடுகளையும் வழிதவறா கற்பு நெறிகளையும் மீட்பார் யாரோ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலேசியாவில் 'பயோ விஸா' டிசெம்பர் நடைமுறைக்கு

மலேசியாவுக்குள் நுழையும் இலங்கையர்களுக்கு 'பயோ விஸா' முறைமை நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளதாக அந்த நாட்டு குடிவரவுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

உலகளாவிய ரீதியில் விஸா மோசடிகளைத் தடுக்கும் வகையில் 'பயோ விஸா' முறைமை அறிமுகப்படுத் தப்பட்டுள்ளது.

இதன்படி மலேசியாவுக்குள் வரும் வெளிநாட்டவர் களின் கைவிரல் அடையாளம் தூதரகங்களினால் உறுதிப்படுத்தப்படும்.

பாதுகாப்பு முறைமைகளுக்கு அமைவாக பெற்றுக் கொள்ளப்படும் கைவிரல் அடையாளமானது கடவுச் சீட்டிலுள்ள தரவுகள் மற்றும் தனிப்பட்ட தரவுகளுடன் ஒத்துப்போக வேண்டும்.

இந்தத்திட்டத்தை எதிர்வரும் டிசெம்பர் முதலாம் திகதி யில் இருந்து நடைமுறைக்கு கொண்டுவர தீர்மானிக் கப்பட்டுள்ளதாக மலேசியாவின் குடிவரவுத் திணைக்கள பணிப்பாளர் அலைஸ் அஹமட் குறிப்பிட்டுள்ளார்.

சீனா, இந்தியா, பங்களாதேஷ், பாகிஸ்தான், நைஜீரியா மற்றும் மியன்மார் உள்ளிட்ட நாடுகளும் இந்த 'பயோ விஸா' முறைமைக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அத்துடன் மலேசியாவுக்கு சீனா, இந்தியா உள்ளிட்ட நாடுகளிலிருந்து பெருந்தொகையானோர் சுற்றுலாப் பயணிகளாக வருகைதருவதால் இதனை அவதானிப் பதற்கு இந்த 'பயோ விஸா' முறைமை துணையாக இருக்கும் என அந்த நாட்டு குடிவரவு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

(ஐ-16)

**நாய்க்குட்டிகள் விற்பனைக்கு**

2 மாத நல்லின கறுப்பு ஆண் பொமேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு (முதல் ஊசி போடப்பட்டது)

(24908)(3.14) தொடர்பு: 0775047502

**கார் வாடகைக்கு**

திருமணம் மற்றும் விசேட தேவைகளுக்கு சாரதி உடனோ இல்லாமலோ பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்பு: 0779361427 (24907)(3.14)

## கூட்டமைப்பின் பதிவு இதுவரை முடிவு இல்லை

யாழ்ப்பாணம், ஒக்.29

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைக் கட்சியாகப் பதிவு செய்வது தொடர்பில், அதில் அங்கம் வகிக்கும் 5 கட்சிகளுக்குமிடையில் கடந்த வியாழக் கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலில் முடிவு எதுவும் எட்டப்படாமலேயே முடிவடைந்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைக் கட்சியாகப் பதிவு செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை அதில் அங்கம் வகிக்கும் தமிழரசுக் கட்சி தவிர்ந்த ஏனைய நான்கு கட்சிகளும், கூட்டமைப்பின் தலைவரும் தமிழரசுக் கட்சியின் தலைவருமான இரா.சம்பந்தனிடம் முன்வைத்திருந்தன.

இதற்கமைவாகவே கடந்த வியாழக்கிழமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் 5 கட்சிகளின் தலைவர்களும் கூடிக்கலந்துரையாடினர்.

இதன்போது எந்தவித முடிவும் எட்டப்படவில்லை. அத்துடன் மீளவும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளதாகவும், தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-5)

## பண்பலை மாற்றம்

பண்பலை வானொலி அலைவரிசைகள் எதிர்வரும் முதலாம் திகதியில் இருந்து மீள் ஒழுங்குபடுத்தப்படுவதாக தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதன்படி 87.5 மெகா கேட்ஸில் இருந்து 108வரையான மெகா கேட்ஸ் அலைவரிசைகளுக்கு இடையில் இந்த ஒழுங்குபடுத்தல்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி நவம்பர் முதலாம் திகதியில் இருந்து வானொலி அலைவரிசைகள் புதிய ஒழுங்குபடுத்தலின் கீழ் இயங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-22)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



யாழ்/ திருக்குடும்ப கன்னியர் மடத்தில் கல்வி கற்கும்

செல்வி அலோன் நீத்திரா பென்ஸ்

அவர்கள் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் 150 புள்ளிகள் பெற்று சித்தி அடைந்ததையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் கல்வியில் மேன்மேலும் உயர்வடைவதுடன் இவருக்கு கல்வி கற்பித்த பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்கள் இமல்டா பரமதாசன், B.மயூதரன் ஆகியோரையும் வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
அப்பா, அம்மா, தாத்தா, அக்கா, தம்பி (24904)(2.6)

**3 ஆம் ஆண்டு நினைவலைகளும் 12 ஆவது பிறந்தநாள் நினைவேந்தலும்**

**குகேஸ்வரன் லக்ஷன்**
(லச்சுக்குட்டி)



அன்னை மடியில்
14.10.2000

இறைவன் அடியில்
29.10.2009

நீ போன வழி எல்லாம் தேடுகின்றோம்
விழிஎல்லாம் நீரைச் சுமந்தபடி

அவன் மழலை மொழி கேட்டால் மனக்கவலை தீரும் - அவன்
பிஞ்சுக் கரம் தீண்டுகையில் பிடித்த வினை அறும் - அவன்
பாசத்தோடு தேகம் தொடுகையில் ஊன் உறக்கம் மறக்கும்
மெல்லிய காற்றும் வெள்ளையும்
மெல்லெனபாயும் நீரும் எம் மழலைச் செல்வத்தை தீண்டியது கிடையாது - ஆனால்
கொடியவனே நீ தீண்டி மூன்று ஆண்டுகள் முழுதாய் முடிகின்றது
முன்னூறு ஜென்மங்கள் முன்னே நகர்ந்தாலும்
ஆறாத எம் துயரை ஆற்றத்தான் முடியாது - ஆதலால்
தேற்றித் தான் கொள்கின்றோம் மீண்டொருமுறை எம் குலத்தில்
லக்ஷனின் உயிர்க் கூடு சுமக்கப்படும் என்ற நினைவில்.......

இல.24, முஸ்லிம் கல்லூரி வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். அப்பா, அம்மா, சகோதரர்கள்

# மரண அறிவித்தல்கள்

## செல்வநாயகம் சபேசன்



அல்லைப்பிட்டி 1ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 49 சட்டநாதர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வநாயகம் சபேசன் நேற்று (28.10.2012) ஞாயிற்றுக்கிமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

49, சட்டநாதர் வீதி, யாழ்ப்பாணம். (24910)(3.14) தகவல்: குடும்பத்தினர்.

## திருமதி ராகினி குகனேஸ்வரன்



கொழும்பு கொட்டாஞ்சேனை, கல்பொத்த வீதியை வதிவிடமாகவும், தற்போது இல.09, மருதடி வீதி, யாழ்ப்பாணத்தில் வசித்து வந்தவருமான திருமதி ராகினி குகனேஸ்வரன் நேற்று (28.10. 2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் குகனேஸ்வரனின் அன்பு மனைவியும், விசானி, விஷ்ணு, சந்தியா, சானுஜா ஆகியோரின் அன்புத்தாயும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.09, மருதடி வீதி, யாழ்ப்பாணம். (24911)(3.14) தகவல்: குகனேஸ்வரன் (கணவர்)

## தம்பியப்பா சண்முகலிங்கம்

(தொழிலதிபர்- நோர்தேர்ன் இன்டஸ்ரீஸ்)



சுருவில் ஊர்காவற்றுறையை பிறப்பிடமாகவும் பிறவுண் வீதி யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட தம்பியப்பா சண்முகலிங்கம் நேற்று (28.10. 2012) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

43, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். தகவல்: குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி கிருஸ்ணபிள்ளை நாகம்மா



சுழிபுரம் மேற்கை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி நாகம்மா கிருஸ்ண பிள்ளை கடந்த (26.10.2012) வெள்ளிக் கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் கணபதிப்பிள்ளை - கைரசிப் பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து, சின்னத்தம்பி, சரஸ்வதி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், நன்னிப்பிள்ளை, சின்னத்துரை, புவனேஸ்வரி, பரமேஸ்வரி, வள்ளியம்மை, சோதிமுத்து ஆகியோரின் பாசமிகு மச்சாளும், பவளராணி- தர்மசிறி (சுவிஸ்), பேரின்பராணி- கண்ணதாசன் (சுவிஸ்), தெய்வீகராணி- பார்த்தீபன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், சிவபாக்கியம், சுப்பிரமணியம், செல்வராணி, வரதராசா, தேவராணி, லோகநாதன் ஆகியோரின் பாசமிகு சிறியதாயும், கோபிகா, பவித்திரன், கிசான், துவாரகா, பிரித்திகா, பிரஜன், பிரஜீன், தவபாக்கியநாதன், தனஞ்சியநாதன், சிவரூபி, சிறிரங்கன், மகேஸ்வரன், சஜீபன் ஆகியோரின் அன்பு பேத்தியும், டிலைக்ஷன், தர்ஷிகா, வனிதன் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.10.2012) செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரிக்கு முன்பாக உள்ள தாமோதரம்பிள்ளை வீட்டில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக திருவடிநிலை இந்துமயானத் துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விக்ரோறியாக் கல்லூரி முன்பாக

தகவல்: மருமக்கள்

(சி/2111)(3.14)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


யாழ்.கல்வி கோட்ட மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 14 வயது பிரிவு அணிகளுக்கான இறுதியாட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்ற சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியினர் பயிற்றுவிப்பாளர்களுடன். (ங-23)

# சங்கானைக் கோட்ட மட்ட உதைபந்தாட்ட முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஒக்.29

சங்கானைக் கல்விக் கோட்ட மட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான 14 வயதுப் பிரிவு, 16 வயதுப் பிரிவு, 18 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டங்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றன.

இதில் 14 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான இறுதியாட்டத்தில் வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியை எதிர்த்து சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணி மோதிக்கொண்டது.

இரு அணியினரும் ஆட்ட நேர முடிவில் எதுவித கோல்களையும் பெறாததினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

எனவே ஆட்டத்தின் வெற்றி, தோல்வி சமநிலை தவிர்ப்பு உதை மூலம் தீர்மானிக்கப்பட்டது.

இதில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டி கோட்டமட்ட சம்பியனாகியது.

3 ஆம் இடத்துக்கான ஆட்டத்தில் அராலி சரஸ்வதி மகாவித்தியாலய அணியை எதிர்த்து அராலி இந்துக் கல்லூரி மோதிக்கொண்டது.

இதில் அராலி சரஸ்வதி மகாவித்தியாலய அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டி மூன்றாமிடத்தை தனதாக்கிக்கொண்டது.

16 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் அராலி சரஸ்வதி மகாவித்தியாலய அணியை எதிர்த்து அராலி இந்துக் கல்லூரி அணி மோதிக் கொண்டது.

இந்தப் போட்டியிலும் இரு அணியினரும் எதுவித கோல்களையும் பெறவில்லை.

எனவே ஆட்டத்தின் வெற்றி, தோல்வியைத் தீர்மானிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதில் அராலி சரஸ்வதி மகாவித்தியாலய அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டி சம்பியனாகியது.

மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் வட்டு இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணி மோதிக் கொண்டது.

இதன்போதும் இரு அணியினரும் எதுவித கோல்களையும் பெறாததினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

எனவே ஆட்டத்தின் வெற்றி, தோல்வியைத் தீர்மானிப்பதற்காக 5 சமநிலை தவிப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் வட்டு. இந்துக் கல்லூரி அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டி மூன்றாமிடத்தை பெற்றுக்கொண்டது.

18 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதியாட்டத்தில் வட்டு. மத்திய கல்லூரி அணியை எதிர்த்து சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணி மோதிக்கொண்டது.

இரு அணியினரும் ஆட்ட நேர முடிவில் தலா 2 கோல்களைப் பெற்றதினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

ஆட்டத்தின் வெற்றிதோல்வியைத் தீர்மானிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் வட்டு. மத்திய கல்லூரி அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டி சம்பியனாகியது. மூன்றாம் இடத்துக்கான போட்டி வட்டு. இந்துக் கல்லூரி அணிக்கும் வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணிக்கும் இடையில் நடைபெறவிருந்தது. எனினும் குறித்த நேரத்தில் வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி மைதானத்துக்கு சமூகம் தராமையினால் வட்டு. இந்துக் கல்லூரி அணி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. (ங-23)

## இன்றைய ஆட்டம்



யாழ்ப்பாணம்,ஒக்.29

பருத்தித்துறை உதை பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் ஆதிசக்தி விளையாட்டுக் கழகம் நடத்தும் உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று திங்கட்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு-

பி.ப.3.30 மணி

நியூட்டன் விளையாட்டுக் கழகம் எதிர் அண்ணாசிலையடி விளையாட்டுக் கழகம். (ங-23)

## கொழும்பு மரதனில் நவநீதன் எட்டாமிடம்



விளையாட்டுத்துறை அமைச்சின் அனுமதியுடன் இலங்கை மெய்வன்மைச் சம்மேளனத்தின் தேசிய மரதன் ஓட்டப் போட்டிகளுக்கான குழுவினரால் நடத்தப்பட்ட "கொழும்பு மரதனோட்டம்" நிகழ்வில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த கே.நவநீதன் 2 மணித்தியாலம் 47 நிமிடங்களில் ஓடி 8 ஆவது இடத்தினைப் பெற்றுள்ளார்.

இவர் 8ஆம் இடத்தைப் பெற்றமைக்காக போட்டி ஏற்பாட்டாளர்களால் 100 அமெரிக்க டொலர்களும் சான்றிதழும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார். (ங-23)

## விபுலானந்தன் கூடைப்பந்து; அரையிறுதியாட்டங்கள் இன்று

யாழ்.மத்திய கல்லூரியின் மாணவர் முதல்வர் அமரர் பொன். விபுலானந்தன் ஞபாகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக பாடசாலை அணிகளுக்கிடையே நடத்தப்படும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் அரையிறுதியாட்டங்கள் இன்று திங்கட் கிழமை யாழ்.மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் இடம்பெறவுள்ளன.

இன்று காலை 9 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டங்களில் மகளிர் பிரிவுக்கான அரையிறுதியாட்டம் ஒன்றில் பண்டத்தரிப்பு மகளிர் உயர்தர பாடசாலையை எதிர்த்து யாழ்.திருக்குடும்ப கன்னியர்மடம் அணி மோதவுள்ளது. ஆண்களுக்கான அரையிறுதியாட்டம் ஒன்றில் யாழ்.இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி களமிறங்கவுள்ளது.

மாலையில்நடைபெறவுள்ள அரையிறுதி ஆட்டங்களில் மகளிர் பிரிவில் இராமநாதன் கல்லூரியும், உடுவில் மகளிர் கல்லூரியும் ஒன்றையொன்று எதிர்த்து சமராடவுள்ளன. ஆண்களுக்கான அரையிறுதியாட்டம் ஒன்றில் யாழ்.மத்திய கல்லூரி அணியை எதிர்த்து சென். ஜோன்ஸ் கல்லூரி மோதவுள்ளது. (ங-23)


வவுனியா பட்டாணிச்சூர் 786 விளையாட்டுக்கழகம் ஹஜ் பண்டிகையை முன்னிட்டு நடத்திய ஆண்களுக்கான மரதனோட்டம், நேற்றுக் காலை ஞாயிற்றுக்கிழமை காலை அஷ்ரப் விளையாட்டுக் கழக மைதான நுழைவாயிலில் [illegible] போட்டியினை வவுனியா பட்டாணிச்சூர் 786 [illegible] பி.எஸ்.அப்துல்லா கொடி அசைத்து ஆரம்பித்துவைத்தார்.

## வடமராட்சியின் பெரும் துடுப்பாட்டச் சமரில் சிதம்பராவை வீழ்த்தியது நெல்லியடி ம.ம.வி

யாழ்ப்பாணம்,ஒக்.29

வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரிக்கும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணிக்கும் இடையிலான 40 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட வடமராட்சியின் பெரும் துடுப்பாட்டச் சமர் நேற்றுக் காலை நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது.

**வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி சகல இலக்குகளையும் இழந்து 58 ஓட்டங்களையே பெறமுடிந்தது.**

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய வல்வெட்டித் துறை சிதம்பரக் கல்லூரி அணி நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தின் பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் திணறியது. இலக்குகளை அடுத்தடுத்து இழந்ததால் அந்த அணியால் பெரியளவிலான ஓட்ட எண்ணிக்கையை பெறமுடியவில்லை. நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தின் பிரசாந்த் மிக அற்புதமான பந்து வீச்சை வெளிப்படுத்தி எதிரணியை அச்சுறுத்தினார்.

19 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி சகல இலக்குகளையும் இழந்து 58 ஓட்டங்களையே பெறமுடிந்தது. இதில் சிவாஸ்கரன் ஆட்டமிழக்காது 15 ஓட்டங்களையும், கிசோராஜ் 15 ஓட்டங்களையும் தமது அணிசார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணி சார்பில் பிரசாந்த் 6 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 17 ஓட்டங்களைக் கொடுத்து 6 இலக்குகளையும், அங்கதன் 3 பந்துப்பரிமாற்றங்கள் பந்துவீசி 4 ஓட்டங்களைக்கொடுத்து 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 59 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணி 15 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 2 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. இதனால் 8 இலக்குகள் வித்தியாசத்தில் சிதம்பராக் கல்லூரியை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் பணிய வைத்தது.

இதில் டிலானன் 33 ஓட்டங்களையும், துவாரகன் 19 ஓட்டங்களையும் தமது அணிசார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் சிதம்பராக் கல்லூரி அணி சார்பாக நிதூசன் 6 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 25 ஓட்டங்களை கொடுத்து ஒரு இலக்கினையும் விஸ்வரூபன் 5 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 22 ஓட்டங்களைக் கொர்டுத்து ஒரு இலக்கினையும் கைப்பற்றினர்.

சகலதுறை வீரர் மற்றும் சிறந்த துடுப்பாட்ட வீரர் ஆகிய இரு விருதுகளையும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த டிலானன் வென்றார்.

ஆட்டத்தின் சிறந்த பந்து வீச்சாளராகவும், ஆட்டநாயகனாக நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த பிரசாந்த் தெரிவு செய்யப்பட்டார்.சிறந்த களத் தடுப்பாளராக சிதம்பராக் கல்லூரியைச் சேர்ந்த டிஷோராஜ் தெரிவானார். (ங-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியூசிலாந்துக்கு வாஸ் பயிற்சி



நியூசிலாந்து அணிக்கு டெஸ்ட் போட்டிகளுக்கான பந்துவீச்சு பயிற்சியாளராக இலங்கையின் முன்னாள் வேகப்பந்துவீச்சாளர் சமிந்தா வாஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

சர்வதேச ரீதியில் முன்னணி வேகப்பந்து வீச்சாளராகத் திகழ்ந்த சமிந்த வாஸ் 111 டெஸ்ட் போட்டிகளில் ஆடி 355 இலக்குகளைக் கைப்பற்றியுள்ளார்.

38 வயதான இவர் 12 போட்டிகளில் 5 இலக்குகளைவீழ்த்தியிருந்தார்.

இந்நிலையில் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்ற சமிந்த வாஸ், தற்போது நியூசிலாந்து அணியின் டெஸ்ட் அணிக்கு பந்துவீச்சு பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அடுத்த மாதம் இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடவுள்ள நியூசிலாந்து அணி 2 டெஸ்ட் போட்டிகள், 1 20-20 போட்டி மற்றும் 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்க உள்ளது. இதில் டெஸ்ட் போட்டிகளுக்கான நியூசிலாந்து அணிக்கு மட்டும் சமிந்த வாஸ் பயிற்சியாளராக செயல்பட உள்ளார். இதற்காக நியூசிலாந்து அணியின் பந்துவீச்சு பயிற்சியாளரான ஷேன் பாண்ட் உடன் வாஸ் இணைந்து செயல்படுவார்.

இது குறித்து சமிந்த வாஸ் கூறுகையில், ஒரு சர்வதேச அணியுடன் இணைந்து செயலாற்ற எனக்கு வாய்ப்பு கிடைத்திருப்பதை நினைத்து மகிழ்ச்சி அடைகிறேன்.

இதிலும் நியூசிலாந்து போன்ற அணியில் பல திறமையான வேகப்பந்து வீச்சாளர்கள் உள்ளனர் என்றும் சொந்த மண்ணில் எனக்கு உள்ள அனுபவம் மூலம் நியூசிலாந்து அணிக்கு பயனுடையதாக இருக்குமென நம்புகிறேன் -என்றார்.

## இறுதிக்குள் சாய்னா



பிரெஞ்ச் பகிரங்க பட்மின்ரன் தொடரின் இறுதிச் சுற்றுக்கு இந்தியாவின் சாய்னா நெஹ்வால் முன்னேறினார்.

பிரான்ஸ் தலைநகர் பரிஸ் நகரில் பிரெஞ்ச் பகிரங்க பட்மின்ரன் தொடர் நடைபெற்று வருகிறது.

இந்தத்தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவின் அரையிறுதியில் இந்திய நட்சத்திர வீராங்கனை சாய்னா நெஹ்வால், ஜேர்மனியின் ஜூலியானேவை சந்தித்தார்.

இதில் சாய்னா அதிரடியாக விளையாடி 21-19, 21-8 என்ற நேர் செற்களில் வெற்றி பெற்று இறுதிச் சுற்றுக்கு முன்னேறினார்.

இறுதிச்சுற்றில் ஜப்பானின் மினட்சுவை சாய்னா சந்திக்கிறார்.




## சுழல் ஆடுகளங்களில் தவறில்லை

இந்தியாவுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி பங்குபற்றும் டெஸ்ட் போட்டிகளில் சுழற்பந்து வீச்சாளர்களுக்கு அதிக சுழற்சியை வழங்கக்கூடிய ஆடுகளங்களை வழங்குவதில் தவறில்லை என இந்திய அணியின் இளம் துடுப்பாட்ட வீரர் விராத் ஹோக்லி தெரிவித்தார்.

இங்கிலாந்துஅணி 3 டெஸ்ட்போட்டிகளில் பங்குபற்றுவதற்காக இந்தியாவைச் சென்றடைந்துள்ளது.இங்கிலாந்து அணி வழக்கமாக சுழற்பந்து வீச்சுக்குத் தடுமாறும் வழக்கத்தைக் கொண்டுள்ளதன் காரணமாக இந்தத்தொடரிலும் சுழற்பந்து வீச்சைக் கொண்டே இந்திய அணி இங்கிலாந்தை வெற்றிகொள்ள முயற்சிக்கும் எனக் கருதப்படுகிறது.''கடந்த முறை இந்திய அணி இங்கிலாந்து, ஆஸ்திரேலியாவிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்ட போது பயிற்சிப் போட்டிகளில் துடுப்பாட்டத்துக்குச் சாதகமான ஆடுகளங்கள் வழங்கப்பட்டன. ஆயினும் டெஸ்ட் போட்டிகளின் போது பந்துவீச்சுக்குச் சாதகமான ஆடுகளங்களே அமைக்கப்பட்டன'' என்று குற்றஞ்சாட்டியுள்ளார் விராத் ஹோக்லி, அதேபோல் இம்முறையும் இங்கிலாந்து அணிக்கு டெஸ்ட் போட்டிகளில் அதிக சுழலும் ஆடுகளங்களை வழங்க வேண்டும் எனத் தெரிவித்தார்.(ங)

## பாகிஸ்தானிலும் பிறீமியர் லீக்?

பாகிஸ்தான் கிரிக்கெட் சபையும், பிறீமியர் லீக் கிரிக்கெட் தொடரை நடத்த முடிவு செய்துள்ளது. பாகிஸ்தான் பிறீமியர் லீக் தொடர், அடுத்த ஆண்டு மார்ச் மாதம் நடத்தப்படும் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவர் சாகா அஷ்ரப் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், பாகிஸ்தான் பிறீமியர் லீக் கிரிக்கெட் தொடரை நடத்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகள் கிடைத்துள்ளன, எனவே இது குறித்து பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசீப் அலி சர்தாரியிடம் அனுமதி பெற விண்ணப்பித்துள்ளேன்.

பாகிஸ்தான் பிறீமியர் லீக் தொடரின் மூலம் வேலை வாய்ப்பு மற்றும் வருமானம் அதிகரிக்கும். மேலும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்குச் சிறந்த பெயரையும் பெற்றுத் தரும். எனவே இதற்கு வரி விலக்கு அளிக்குமாறு, பாகிஸ்தான் அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளேன்.

ஐ.பி.எல். தொடரின் மூலம் இந்திய கிரிக்கெட் அணிக்கு சிறந்த இளம் வீரர்களைத் தெரிவு செய்வது எளிதாகிறது. எனவே அதேபோல மற்ற நாடுகளிலும் பிறீமியர் லீக் போட்டிகள் நடத்தப்பட்டு வருகிறது. இலங்கை, வங்கதேசம் ஆகிய நாடுகள் நடத்துகின்றன.

ஐ.பி.எல். தொடர் ஆண்டுதோறும் ஏப்ரல் மாதம் நடைபெறுகிறது. எனவே அதற்கு 2 வாரங்களுக்கு முன்னதாக பாகிஸ்தான் பிறீமியர் லீக் தொடரை நடத்த முடிவு செய்துள்ளோம். இதற்கான ஆரம்பக்கட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் ஐக்கிய அரபு எமிரேட்ஸை சேர்ந்த ஒரு நிறுவனம் கூட, ஒரு அணியை வாங்க விருப்பம் தெரிவித்துள்ளது என்றும் ஐ.பி.எல் தொடரின் பாணியை பின்பற்றியே, பாகிஸ்தான் பிறீமியர் லீக் தொடர் நடத்தப்பட உள்ளது -எனவும் கூறியுள்ளார்.

## மீண்டும் எழுவோம்– ஸ்டீவன் ஃபின்

அலஸ்ரெயர் குக் தலைமையிலான இங்கிலாந்து அணி டெஸ்ட் தரப்படுத்தலில் முதலிடத்தை மீண்டும் கைப்பற்றும் என இங்கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஸ்டீவன் ஃபின் தெரிவித்துள்ளார்.

அலஸ்ரெயர் குக் இன் துடுப்பாட்ட, அணித்தலைமைப் பண்புகள் குறித்தும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

அலஸ்ரெயர் குக் இன் தலைமையிலான முதலாவது சுற்றுத் தொடராக இந்தியாவிற்கான டெஸ்ட் தொடர் அமையவுள்ளது.

இங்கிலாந்து அணிக்கு சிம்மசொப்பனமாக திகழும் இந்திய மைதானங்களில் புதிய தலைமையின் கீழ் போட்டிகளில் பங்குபற்றவுள்ள போதிலும், இங்கிலாந்து அணியால் முதலிடத்தைப் பிடிக்க முடியும் என ஸ்டீவன் ஃபின் நம்பிக்கைவெளியிட்டுள்ளார்.அலஸ்ரெயர் குக் மிகச்சிறந்த தலைமைத்துவப் பண்புகளின் காரணமாக இங்கிலாந்தின் டெஸ்ற் அணித்தலைமைக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

மிகச்சிறந்த அணித்தலைவருக்குரிய அத்தனை அம்சங்களும் அலஸ்ரெயர் குக்கிடம் காணப்படுவதாகத் தெரிவித்த ஸ்டீவன் ஃபின், அமைதியான குணம், அனுபவம் வாய்ந்த வீரர், மிகச்சிறந்த முடிவுகளை எடுக்குமியல்பு ஆகியன அலஸ்ரெயர் குக்கை மிகச்சிறந்த தலைவராகக் காட்டுகிறது எனத் தெரிவித்தார்.

அண்மைக்காலங்களில் தோல்விகளைச் சந்தித்திருந்த நிலையில் புதிய வகையான கிரிக்கெட் போட்டிகளில் பங்குபற்றுவதை ஆரம்பிப்பதற்கு இது மிகச்சிறந்த காலம் எனவும் தெரிவித்துள்ளார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## கார்த்திகேசு மகாலிங்கம்

(முன்னாள் பாதுகாப்பு உத்தியோகத்தர்,மாநகரசபை யாழ்ப்பாணம்)



அரியாலையைப் பிறப்பிடமாகவும், இல.26, புரூடிலேனை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு மகாலிங்கம் கடந்த 26.10.2012 வெள்ளிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - அன்னப்பிள்ளை தம்பதியரின் ஏக புதல்வனும், காலஞ்சென்றவர்களான குமாரு - கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், கிறேஸ் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சற்குணம், சாந்தநாயகி மற்றும் நாகேஸ்வரி, இந்திராணி, யோகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற பவளமணி மற்றும் பவளரத்தினம், காராளசிங்கம் (பிரான்ஸ்), ஜெயலக்ஷ்மி, சந்திரகுமார், சூரியகுமார், உதயகுமார் (தபாற்கந்தோர்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், றஜினா, சுஜித்தா (லண்டன்), பிரசன்னா (பிரான்ஸ்), பிரசாத் (லண்டன்), யமேலா ஆகியோரின் பாசமிகு தந்தையும், மார்க்வேனாட், இலங்கேஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனும், றொமினாவின் (லண்டன்) பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் இன்று (29.10.2012) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் 26, புரூடி லேனில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று நல்லூர் பரியாக்கோபு ஆலய சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

26, புரூடி லேன்,
அரியாலை.

(24906)(3.6)

தகவல்:
குடும்பத்தினர்.

---

BRITISH COLLEGE OF LANGUAGE LEARNING

புதிய பிரிவுகள் ஆரம்பம்

Courses Available

* Basic English
* Absolute Spoken English
* Advanced Diploma In English
* IELTS,Course For Per-School Teachers
* Late Evening Batch For Working People

03.11.2012 3pm

Success & Satisfaction Guaranteed
Feel The Difference

2 ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.(பஸ் நிலையம் அருகில்)

Call 0771 327 818 OR 021 373 4121

(c4361)(3.6.14)

---

# Wanted

Colosing Date 03.11.2012

1. Finance Manager *(Male) - 1*
   *(2 Years Experience* Prefered)
   *Age 26 -30*
2. *Marketing Officer 1*
   *(2 Years Experience Prefered)*
   *Age 22 - 26*
3. *Trainee Technicion - 2*
   *Age 21-24*



Send Your CV ADVT No.4414, C/O Uthayan
*361, Kasthuriyar road, Jaffna.*

---

advt@uthayan.com
0215671111

---

நல்லூரில்
IELTS
6.0 க்கு மேல்
உத்தரவாதம்

Listening, Reading, writing, speaking ஆகிய ஒவ்வொரு பிரிவும், விசேட பயிற்சி பெற்ற Colombo ஆசிரியர்களால் நடத்தப்படுகின்றது. செயன்முறை பயிற்சி, mock exam நடத்தப்படும்.

0777 444225

(24909)(3.14)

---

# BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS

சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய
நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்
புதிய கற்கை நெறிகள்

**Spoken English With Grammar - Quick Learning Course (1 1/2 Months)**

ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல். சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.

**Diploma In English (2 Months)**

ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

**IELTS** Toping centre for registering more IELTS candidates in Jaffna & Approved centre for IELTS online Registration system for Exam

< We gurantee minimum 6.0 band and above >

Duration: 2 1/2 Months

**BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது**

City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

**A1 Exm - Sponsor / Settlement Visa** மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை

- U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும் சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

**Young Learners for English (YLE)** (வயதெல்லை : 7 - 12)

இது ஒரு சர்வதேசப் பரீட்சை என்பதுடன் University of Cambridge வழங்கும் சான்றிதழ்

புதிய வகுப்புக்கள் Batch I - 29-10-2012 Batch II - 31-10-2012 Batch III - 03-11-2012

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Jaffna Branch:
No. 15, Sirambiyady Lane,
off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550

Vavuniya Branch:
No. 3, 6th Lane, Vairavarkovil Veethy,
Vairavarpulliyamkulam, Vavuniya.
Tel: 024 324 5287

Hot Lines : 0777222422 0777585913, 0714299935, 0777730074

---

# திறப்பு விழா அழைப்பு

நிகழும் மங்களகரமான நந்தனவருடம் ஐப்பசித்திங்கள் 13 ஆம் நாள் இன்று (29.10.2012) திங்கட்கிழமை 12.03 முதல் 1.33 வரையுள்ள சுப முகூர்த்த வேளையில்

## நியூ சுசீலா கோல்ட் ஹவுஸ்

திறந்து வைக்கப்படவுள்ளது.


அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

தங்கள் நல்வரவை நாடும் :
நியூ சுசீலா கோல்ட் ஹவுஸ்
228, பிரதான வீதி, பருத்தித்துறை
021 226 4154

சுசீலா கோல்ட் ஹவுஸ்,
258, பருத்தித்துறை வீதி, பருத்தித்துறை
021 226 3064

---

# நீங்கா நினைவில் ஓராண்டு நிறைவு



மண்ணில் 11.05.1968

விண்ணில் 11.11.2011

## அமரர் சிவசுப்பிரமணியம் தயாபரன்

(அதிபர், கரம்பகுறிச்சி, அ.த.க.பாடசாலை)

தொடர முடியாத தொலை தூரத்தில் - நீர் சென்றிட்டாலும் தினமும்
தொட்டுக் கொள்ளும் உன் புன்னகை புனைந்த அடையாளங்கள்
விடிந்தும் விடியாததாய் நாள்கள் விடைதேடித் தொடரும் எம் வாழ்க்கை
வேதனை நெஞ்சை விட்டு விலகவில்லை வெல்வது எப்படி விளங்கவில்லை
நெடுதூரம் நீர் இன்றி உம் உறவுகள் நாம் தொலைந்து போகின்றோம் விதியின் சதியில்
உணர்வுள்ள மனிதனாக உண்மையுள்ள ஒருயிராய்
உன் போல் ஒருவனை இனி நாம் காண்பதெப்போ
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

மீசாலை மேற்கு, மீசாலை.

என்றும் ஈரவிழிகளுடன்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.10.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.